பதிவு னெம்பர் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3. | ஈரோடு, பிரபவ ஷ பங்குனி மீ 27உ (8—4—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 50.

இனும்! இனும்

மூனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம்விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடிகாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன். பேனவும் இனும்.

நூதனமாக வாவமைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவன், (தா) சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

## முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதாாஸ்

டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டைம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஷ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது, விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவிவேகி சதாசுக்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனான்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சந்து இரத்தினேந்திரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி தாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று பலரு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

# 1928 இந்துசமயக் காலண்டர் 1928

## ஓரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமகள் | 8 | பாலகிருஷ்ணன் |
| 2 | கலைமகள் | 9 | இராதாகிருஷ்ணன் |
| 3 | ஆண்டாள் சூடிப்பார்த்தல் | 10 | சிவபெருமான் கங்கையைத் தரித்தல |
| 4 | உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல் | 11 | முருகன் சிவபெருமானுக்கு உபதேசித் [தல் |
| 5 | பார்வதி பரமேஸ்வரன் | 12 | காளிங்கமர்த்தனம் |
| 6 | மகாவிஷ்ணு | 13 | துருவன் அருள்பெறுதல் |
| 7 | ஷண்முகம் | 14 | ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் |

விலை அணு 8. தபாற்கூலி வேறு.

## இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

# என். தண்டபாணி அண்டு கம்பெனி.

## நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கே கதர்த்துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் சுயமாயும் நல்லதாயும் கிடைக்கும்.

தேவைக்கு எழுதுங்கள்

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக்கொள்ளப்படும்.)

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ 100க்கு 25 வீதம் முன் பணம் அனுப்புதல்வேண்டும்.

விலாசம்:—என் தண்டபாணி பிள்ளை, தபாற் பெட்டி 292, சைனாபஜார், நெ. 292, மதராஸ்

நாவல் உலகத்தின் ஒளி,

## ஸ்ரீலோலன்

ஓர் அரிய இனிய அபூர்வ

**துப்பறியும் நாவல்,**

**விலை ரூ. 1-4-0.**

விலாசம்:-

T. S. ராஜம் & சன்,

காஞ்சீபுரம்.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கோடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்று போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

## ஆநந்த குணபோதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாசாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸ் நல்ல ரகமுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாயபேகு வாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,

எஸ். வெங்கிட்டராம செட்டி,

ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,

கோயமுத்தூர்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதாரர்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

வந்தே மாதரம்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இப்பத்திரிகையில் நன்மதிப்பு நம்நாட்டு ஜனங்களிடம் நன்கு பதிந்து விட்டபடியால் புகழ்ச்சியாக நாம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இவ்விரண்டு வருஷங்களாக இதற்கு வருஷ சந்தா 2 ரூபாயாக இருந்தது. இந்த வருஷத்திலிருந்து இதை ஏழை முதல் எல்லோரும் படிக்கவேண்டுமென்ற கருத்துடன் ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும் இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன

சற்று ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.

பிரதி மாதமும் 48 பாகங்களுடன் அடக்கமாய்ப் புஸ்தகம் போன்று வெளிவரும் இந்த உயர்வான செந்தமிழ்ப் பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூபாய் ஒன்று தான் என்பதை யோசிப்பீர்களானால், லாபங்கருதி இப்பத்திரிகை அச்சிடப் படுகிறதில்லையென்பதும் தமிழ் நாடெங்கும் இப்பத்திரிகை உலாவ வேண்டுமென்ற பரோபகார எண்ணத்துடனேயே இது வெளிவருகிறதென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0.

மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:— "ஆனந்த விகடன்" ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

# பழனி வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி அவர்களின்

டிரேட் மார்க்

## தாம்பிர பஸ்பத்தால்
## தீராத குஷ்ட ரோகமெல்லாம்
## தீர்ந்துவிட்டது.

### வெள்ளைக் குஷ்டம் தீர்ந்துவிட்டது.

வெள்ளைபடர்ந்த இடங்களில் கரைத்த வெள்ளை ரோமங்களெல்லாம் உதிர்ந்து கருப்பு ரோமம் முளைத்து விட்டது. வெண்மை மறைந்து சுயசரீரம் உண்டாய் விட்டது. வாய் ரணம் ஆறிவிட்டது.

சூரணம் அனுபானம் உள்பட 100 நாள் தாம்பிர பஸ்பம் ரூபா 100. ஏழைகளுக்கு ரூபா 50.

கே. ராதாகிருஷ்ண நாயுடு,
23, அய்யாசாமி முதலி தெரு,
சென்னை.

சீனுவாச பிள்ளை c/o எஸ். துரைசாமி ஐயர்,
குடிமல்லூர், வாலாஜாபேட்டை தாலூக்கா.

நமது விளம்பரம்போல் சிலர் குஷ்ட ரோகத்திற்கு மருந்திருப்பதாய் பொய் விளம்பரம் கொடுகிறார்கள் போலி விளம்பரத்தை நம்பி ஏமாறுதீர்கள் நமது மருந்தால் சொஸ்தமான குஷ்டரோகிகளின் போட்டோ படங்களைப் பார்த்து நம்பி நம் மருந்தை வாங்கி சாப்பிடுங்கள்.

குஷ்ட ரோகங்களெல்லாம் சொஸ்தமாகிவிட்டதற்கு அடையாளமான போட்டோ படங்களைக் கவனியுங்கள்.



# நான் அளக்கும் மூட்டை.

(கைவல்ய சாமியார் எழுதுவது)

'கைவல்யசாமியார் அளக்கும்மூட்டையே 'குடி அரசில்' பெரிதாகவிருக்கின்றது' என்று ஒரு பத்திரிகையில் விகடன் என்னும் பேரால் வெளியிடப்பட்டிருக்கிறது. "பெயர் எப்படி வந்தது? ஊரார் கொடுத்ததா? 'குடி அரசு' கொடுத்ததா? நீயே வைத்துக்கொண்டதா?" என்னும் கேள்விகளிலும் அதற்கு பதில் எழுதுவதிலும் படிப்பவர்களுக்கு யாதொருவித நன்மையுமில்லை. நாராயண அய்யருக்கு மகனாகப்பிறந்து, அடையாற்றில வளர்க்கப்பட்டு, கனம் லெட்பீட்டரால் அப்பியாசங்கள் கற்பிக்கப்பட்டு, அதனால் உண்டான அசிங்கம் ஐக்கோர்ட்டு ஜட்ஜி மணியய்யரிடம் சொல்லப்பட்டு, அதைக்கண்டு பயந்து ஸ்ரீ அன்னிபெசன்டால் பையன் கவரப்பட்டு, மேனாட்டில் ஒளிக்கப்பட்டு, அங்கிருந்து கொண்டுவர டாக்டர் நஞ்சுண்டராவின் உதவியால் விவகாரம் செய்யப்பட்டு, கேஸ் சி. பி. ராமசாமி அய்யர் வக்கீலாக விருந்து வாதிக்கப்பட்டு, அய்யரும் அன்னி பெசன்டும் சிநேகப்பட்டு, கேஸ் வழவழவெனவிடப்பட்டு, பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டு, பையன்களை கேசில் வாதியாக சேர்த்துக்கொள்ளாததினால் கேஸ் தள்ளப்பட்டு, சீமையெல்லாம் பிராமணனாகவே சுற்றித் திரிந்து அடையாறு வந்து சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி அய்யர் இப்பொழுது லோக குருவென்னும் பெயரோடு ஆலந்திற்கும், லண்டனுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார். இவருக்குள் எப்பொழுது மைத்திரேயர் வந்து புகுந்து கொள்ளுவாரோ என்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் பார்ப்பார்களுக்கும் அவர்கூடவே இருப்பவர்களுக்கும் கைவல்யமென்னும் ஒரு புஸ்தகத்தின் பெயரை எனக்கு யார் கொடுத்தால தான் என்ன கஷ்டம்.

பிரவர்த்தி மார்க்க மதத்தின் உள்ள ஞாயங்களின் வழியைப் பின்பற்றுகின்றவர்களுக்கும் நிவர்த்தி மார்க்க மதத்தின் தத்துவமான சத்தியங்களின் வழியே நிற்பவர்களுக்கும் மதத்தின் வழியை நான் அளக்கும் மூட்டை அடைக்காது. மதத்தின் உண்மைத் தத்துவங்களையும், கடவுளின் வியாபகத்தையும், குருக்கள் கட்டுப்பாடு மறைத்து, அக்கட்டுப்பாடே மதமென்றும் சாஸ்திரமென்றும் சொல்லி குருக்கள் கட்டுப்பாட்டிற்கும் குருக்களின் இச்சைக்கும் இசைந்தாப்போல கடவுளையும் அமைத்து, அதற்குப்பல உப கடவுளையும் சேர்த்து அதற்குப் பல எடெழுதி, அதை நிலை நிறுத்த சார்பு நூலு மெழுதி, அதற்கு இது பிரமாணம் இதற்கு அது பிரமாணம் என காணபித்து, அதையே மதமென்றும், அதைச் சிலர் ஆட்சேபித்தால் 'அதற்கு மேல் உங்களுக்கு படிக்கவும் கேட்கவும் அதிகாரமில்லை, நாங்கள் சொல்வதையே நம்பவேணடும், இல்லையேல் பாவம், கடவுள் சொன்ன வேதத்தை நீங்கள் படிக்கப்படாது, நாங்கள் எழுதினதையே கேட்கவேணடும், அதுவே உங்களுக்கு மதம், அதற்கு மேல் கடவுள் கற்பனை இல்லை' யென்றும் சொல்லி ஒருவன் இரண்டு வயிறு வடை பாயசத்தோடுண்டு வயிறுபெறுததுத் திரிவதும், மற்றவன அரை வயிறு உண்டாலும அதிலும் எங்களுக்கே கொடுதது எங்களுக்கு எவலாக விருக்கும் அடிமை யென்றும் சூத்திரப்பேரோடு இருப்பதே புண்ணிய மென்றும் சாஸ்திர மென்றும் கடவுள் விதியென்றும் ஜனசமூகங்களுக்குக் கற்பிக்கப்பட்டு சனசமூகம் இருவழியிலும் சீரடையாமல் க்ஷீணித்துப் போகிறதை சீர் கூட்டவே 'குடி அரசில்' என் மூட்டை அவிழ்க்கப்படுகிறது.

நான் அளக்கும் மூட்டையில்லாமலிருக்கிறதா? கெட்டதிருக்கிறதா? சாஸ்திர மென்று சொல்லுவதிலுள்ளதா? என் கற்பனையா? என்பவைகளைக் கவனித்து அவைகளிலுள்ள குற்றம் குறைகளைச் சொல்லி நான் சொல்லும் அர்த்தம் அவைகளுக்கில்லாவிட்டால் தத்துவார்த்தமோ வேறு அர்த்தமோ இருந்தால் அதைச் சொல்ல வேண்டுமே ஒழிய அதைவிட்டு விட்டு ஊர் பேர், குட்டை நெட்டை, கருப்பு சிகப்பு, இவைகள் எப்படி வந்தது என்று சொல்லிவிட்டால் என் மூட்டையை அறிவில் உதிக்கும் சுயமரியாதையையுடைய கிருகஸ்தர்களின் மதிப்பிற்கு பாத்திரமாகாமல் எப்படி செய்ய முடியும்? சில பத்திரிகைகளே! அவைகளில் காணும் விகடர்களே! நிருபர்களே! சர்வமத சகோதரசங்கமே! அதற்குப் பின்னால் நிற்கும் நண்பர்களே! குப்பைவாரி மேயோவென்று குதித்தவீரர்களே! மற்றும் எங்களை குற்றம் சொல்லும் சகோதரர்களே! தேசம் முன்னேற்றமடைய சனசமூகத்தின் தலையிலேற்றும் மூட்டைகள் 'குடி அரசின்' உள்ளத்தில் அநேகம் நிறைந்து கிடக்கிறது. அந்த மூட்டைகள் அறிவாளிகள் சொன்ன மூட்டைகள் புத்திமான்கள் ஒத்துக்கொண்டமூட்டைகள், ஒத்துக்கொண்ட சனசமூகத்தை முன்னிறுத்தின மூட்டைகள், சனசமூகம் நமக்கே திருப்பி புத்திமதியாக அனுப்பும் மூட்டைகள், கடைசியாக ஆப்கன் அமீரவர்கள் 'அரைப்படிப்புக் குருக்கள் வார்த்தையை கேட்காதீர்கள்' என்று புத்தியாக நமக்குச் சொன்ன மூட்டை, அதில் நான் அளக்கும் மூட்டையில் ஒரு மூட்டையை 'குடி அரசில்' விடுகிறேன். அவிழ்த்துப் பாருங்கள், அவிழ்த்துப் பார்ப்பதில் உங்கள் மனம் எங்கள் பேரில் சேர்வழியில்லாததினால் ஒரு சார்படையும். அப்பொழுது உங்கள் மனச்சார்பே உங்களுக்குச் சரியாகத் தோன்றும். எங்கள் மூட்டையே எங்களுக்குச் சிறந்தது. ஆனதால் இருவருக்கும் மத்தியஸ்தம் வேண்டும். மத்தியஸ்தத்திற்கு வெளியில் ஆள்தேடப் போகவேண்டியதில்லை' நன்மை தீமைகளுக்கு உங்களை விட்டுப்பிரியாதவர்களாய் உங்கள் சார்பிலே இருப்பவர்களான உங்களைப் பெற்ற தாயாரும் என்னைப்பெற்ற தாயாருமான உங்கள் வீட்டுத்தாய்மாரையே மத்தியஸ்தமாக வைத்துவிடுவோம். அவர்கள் தீர்ப்பே எங்களுக்குச் சம்மதம். அவர்கள் படித்தவர்களாயிருந்தால் அவர்களிடம் இந்த மூட்டையையும் இதைப்பற்றிமுன் எழுதின மூட்டையையும் கொடுத்து விடுங்கள். படிக்காதவர்களாகயிருந்தால் மூட்டையைப் படித்துக்காட்டித் தீர்ப்புப் பெற்று எங்களிடம் சேரவோ எங்களைக் குற்றம் சொல்லவோ தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

தாய் மார்களே! கற்பிற்சிறந்த சகோதரிகளே! மிஸ்மேயோ எழுதின 'இந்திய மாதா' என்னும் புஸ்தகத்தில் உங்களை தோஷம் கூறப்பட்டிருக்கிறது. அதைப்படித்து உங்கள் சகோதரர்கள் மிஸ் மேயோவைக் கண்டித்தார்கள். புஸ்தகத்திற்கு மறுப்பெழுதினார்கள்; கொளுத்தினார்கள்; கிழித்தெறிந்தார்கள்; குப்பைவாரி மேயோ வென்று பழித்தார்கள். என்றாலும் அந்த புஸ்தகத்தில் நம் தேசத்திலுள்ள சில அனுசாரங்கள் நீங்கினால் உத்தமமார்க்க முடையவர்களாவீர்க ளென்றும் காணக்கிடக்கிறது. நம் இந்து மதத்தின் ஆசார அனுஷ்டான வழக்க விதிகளுக்கும் அது சம்மந்தமான சாஸ்திரங்களுக்கும் மூலகிரந்தமான மனுதர்ம சாஸ்திரத்தில் பெண்களான உங்களுக்கு விபசாரம் கூடவே பிறந்ததென்றும், கற்பும் நட்பும் விஸ்வாசமும் இல்லாதவர்களென்றும் இவை பிராய சித்தத்தினால் கூட இந்த குணம் மாறாதென்று மெழுதப்பட்டிருக்கிறது. மனுதர்ம சாஸ்திரத்தில் மாதர் தர்மத்தில் ஒன்பதாவது அத்தியாயத்தில் 14, 15, 16, 17, 18, 19, 20, 21, ஆம் சுலோகங்களின அர்த்தங்களைக் கீழே எழுதுகிறேன். "பெண்கள் ஆடவர்களிடத்தில் அழகையும், பருவத்தையும், விரும்பாமல் ஆண் தன்மையை மாத்திரம் முக்கியமாக வெண்ணி அவர்களைப் புணருகிறார்கள். பெண்கள் கற்பின்மையும், நிலையாமனமும், நட்பின்மையும் இயற்கையாகவுடையவர்களானதால் கணவனால் காக்கப்பட்டாலும் கணவனை விரோதிக்கிறார்கள். மாதர்களுக்கு இந்த சுபாவம் பிரமன் சிருட்டித்த போதே உண்டானதென்றறிந்து ஆடவர்கள் அதிஜாக்கிரதையாகவிருக்க வேண்டும். மாதர்களுக்கு மந்திரமும் கிடையாது. பாவத்தைப் போக்குகிற மந்திரோபதேசமோ இல்லை. ஆகையால் பொய்யைப் போல எப்பொழுதும் அசுத்த முடையவர்களாயிருக்கிறார்கள். மாதர்கள் பெரும்பாலும் விபசார தோஷமுள்ளவர்களென்று சுருதியிலும் சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொருத்தனும், தன் தாயார் விபசாரம் செய்திருப்பாள், இல்லாவிட்டால் மானசிக விபசாரமாவது செய்திருப்பாள் என்று நினைத்து பிராயசித்தம் செய்து கொள்ள வேண்டும். இந்த பிராயச்சித்தம் விதித்ததினாலேயே பெண்கள் நிலையில்லா மனமுடையவர்களென்று நினைத்துக் கொள்ள வேண்டும்." இவைகள் நம்தேசத்து பெண்களைப்பற்றிச் சொன்னதேயல்லாது ஐரோப்பா தேசத்துப் பெண்களைப் பற்றிச் சொன்னதல்ல. இந்த மனுதர்ம சாஸ்திரந்தான் முதலில் எழுதப்பட்டஸ்மிருதி. அதைப் பின்பற்றி சிறிது எமாற்றியும் சிறிது மாற்றியும் பின்னால் அநேக ஸ்மிருதிகள் எழுதப்பட்டன. அதைப் படித்தவர்களும் ஆலோசனையில்லாமலும் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டும் அநேகர் எழுதின நூல்களெல்லாம் மனுதர்ம சாஸ்திரத்தைப் பின் பற்றியே எழுதப்பட்டிருக்கிறது. 'பெண்கள் கற்புடையவர்களாக இருக்கமுடியாது, இருந்தாலும் அவர்கள் கற்பு எந்த விதத்திலாவது அழிக்கப்படும்' என்பதை நிலைநாட்டவே இதிகாச புராணங்களில் சில இடங்களில் எழுதப் பட்டிருப்பதை நீங்கள் காணலாம். "ஆண்களே இல்லாவிட்டால் பெண்களெல்லாம் கற்புடையவர்கள் தான்; ஆண்கள் இருந்தால் பெண்களெல்லாம் கற்புடையவர்களாக இருப்பார்கள் என்று நம்பமுடியாது." என்று கற்பிற்சிறந்த அருந்ததிக்கு சமமுடைய துரோபதை சொன்னாள் என்று ஐந்தாம் வேதமான பாரதம் சொல்லுகிறது. 'வேலிக்கு ஓணான் சாட்சி' ஓணானுக்கு வேலி சாட்சி' என்பதுபோல் பெண்கள் விபசாரமுடையவர்கள் என்பதற்கு மனுதர்ம சாஸ்திரம் பிரமாணம்; மனுதர்ம சாஸ்திரத்தில் 'அநேகமாகப் பெண்கள் விபசார தோஷமுடையவர்களாக விருக்கிறார்கள் என்று அநேக சுருதியிலும் சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது' என்று மனுவே சொல்கிறார். ஆகவே மனுதர்மசாஸ்திரத்திற்குப் பிரமாணம் சாஸ்திரம். இவ்வித ஸ்மிருதிகளினாலும் சாஸ்திரங்களினாலும் நம் நாடு பாழடைந்தது. பெண்கள் பேரில் அவநம்பிக்கை கொண்டார்கள்! நிஷ்டூரத்திற்கு நிஷ்டூரம் சந்தேகப்பட்டார்கள்; விரோதித்தார்கள்; துன்புறுத்தினார்கள்; கொடுமை செய்தார்கள்; முட்டாள்களாக்கினார்கள்; கொன்றார்கள். இந்த தேசம் சீரடைய வேண்டுமானால் இப்பேர்ப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் ஒழிய வேண்டு மென்றே நாயக்கர் பிரசாரம் செய்கிறார் 'குடி அரசு'க்கும் அதை விரோதித்து காரியத்தை எடுத்துச் சொல்லாது திட்டுகிறவர்களுக்கும் பெண்களான நீங்களே தீர்ப்புக்கூறவேண்டும்.

இதன் தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க.

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—பாலகாண்டம்

### 7-ஆம் கட்டுரை

**திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.**

மிதிலா நகரத்தின் பக்கத்திலிருந்த அந்தப் பூங்காவனத்தில் பழக்கமற்றுப் பாழாய்க்கிடந்த ஒரு அழகான ஆச்சிரமத்தைக் கண்டு இராமன் அதன் வரலாற்றை வினவ விசுவாமித்திரன் கூறுவானாயினன். "இந்த இடம் கௌதம முனிவருடையது, அம்முனிவன் தனது மனைவியாகிய அகலிகையோடு கூடித்தவஞ்செய்து கொண்டிருந்தனன். ஓர் நாள் இந்திரன் அந்த கௌதமன் இல்லாத தருணம் தெரிந்து கொண்டு கௌதம வேடம் பூண்டு அகலிகையிடம் வந்து 'மிக்க அழகுடையவளே! உன்னோடு நான் புணர்ச்சி செய்யக்கருதிக் கொண்டிருக்கிறேன். அதைக்கோரி வருகிறவர்கள் ருது காலத்தை எதிர்பார்க்க மாட்டார்கள். ஆதலால் இப்போதே புணர்ச்சி செய்யவேண்டும்' என மொழிந்தான். அப்பெண் முனி வேடத்தோடு வந்திருப்பவன் இந்திரன் என அறிந்து தனக்கு தேவேந்திரன் கிடைத்தானென்று மிகமகிழ்ந்து அறிவு கெட்டவளாகி அவனிடத்தில் விருப்பங்கொண்டாள். புணர்ச்சி முடிந்தவுடன் மிகவும் திருப்தியடைந்தவளாகி அவள் இந்திரனைப்பார்த்து 'பிரபு! எனது கருத்துக்கைகூடி விட்டது. ஒருவருக்குந் தெரியாமல் இவ்விடத்தினின்று சீக்கிரமாய்ப் போய் விடும். எல்லா விதத்தாலும் உம்மையும் காப்பாற்றிக்கொண்டு என்னையும் காப்பாற்றும்' என்று சொன்னாள். இந்திரன் புன்னகையோடு அகலிகையைப் பார்த்து 'கட்டழகியே! நான் உன்னைக் கூடி மிகுந்த களிப்பெய்தினேன். வந்தபடியே போய் வருகிறேன்' என்றனன். இவ்வாறு இந்திரன் அகலிகையைப் புணர்ந்து விட்டு கௌதமனிடம் பயந்து பரபரத்து வெளியிற் புறப்பட்டான். அப்போது அம்முனிவன் அவனைக்கண்டு கொண்டான். இந்திரன் அஞ்சி வாடிய முகமுடையவனாயினன். உடனே முனிவன் 'அறிவு கெட்டவனே! என்னைப்போல உருவந்தரித்துச் செய்யத்தகாத இச்செயலைச் செய்தாய். ஆதலால் நீ விருஷணமற்றவனாய் விடுக' என்று கடுஞ் சொல்லுரைத்தான். அச்சொல்லை அவன் சொன்னவுடனே இந்திரனுடைய விருஷணங்கள் (பீசங்கள்—விதைகள்) இரண்டும் அப்பொழுதே பூமியில் விழுந்து விட்டன. பின் அம் முனிவன் அகலிகையைப் பார்த்து 'நீ நெடுங்காலம் உணவில்லாமல் காற்றை மட்டும் குடித்து சாம்பலில் விழுந்து தவித்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் இங்கே இருப்பாய். ராமன் இவ்வனத்திற்கு வரும்போது இச்சாபம் நீங்கும். அப்போது என்னோடு சேர்ந்து களிப்பாய்' என்று சபித்தான். பின் அம்முனி இமயமலையின் சிகரத்தில் தவம் செய்து கொண்டிருந்தான். இந்திரன் விதைகளற்றவனானவுடனே மிக வருந்தி தேவர்களைப்பார்த்து 'உங்களெல்லாரையும் அதிகாரத்தினின்று தள்ளுவதற்காக மகாத்மாவாகிய கௌதம முனிவன் செய்த தவத்திற்கு நான் இடையூறு செய்து கோபத்தை யுண்டாக்கி உங்களுக்கு நன்மையைச் செய்தேன். அம்முனிவன் கோபங்கொண்டதினால் நான் விருஷணமற்றவனாய் விட்டேன். அவ்வகலிகையும் சாபம் பெற்றவளாய் விட்டாள். எங்களிருவருக்கும் அம்முனியைப் பெரியசாபங்கொடுக்கும்படி நான் செய்து அம்முனியின் தவத்தை அழித்தேன். ஆதலில் நீங்கள் என்னை விருஷணமுடையவனாகச் செய்யுங்கள்' என்றான். அதைக் கேட்ட தேவர்கள் பிதிருதேவதைகளிடம் வந்து 'இப்போது உங்களுக்கு யாகத்தில் கொடுக்கப்படுகிற ஆட்டுக்கடா விருஷணத்தோடு (விதைகளோடு) கூடியிருக்கிறது. இந்திரனோ விருஷணமில்லாதவனாக இருக்கிறான். ஆதலால் ஆட்டுக்கடாக்களின் விதைகளைச் சீக்கிரமாகக் கொண்டுவந்து இந்திரனுக்குக் கொடுங்கள். விதையடிக்கப்பெற்ற ஆட்டின் மாமிசம் மிக்க களிப்பையுண்டாக்கும். இனி மேல் மனிதரும் காயடித்த ஆட்டின் மாமிசத்தையே உங்களுக்குக் கொடுப்பார்கள்' என்று வேண்டினர். உடனே பிதிருதேவதைகள் ஒன்று கூடி கடாவின் விருஷணங்களை எடுத்து இந்திரனுக்கு உபயோகப்படுத்தினார்கள். அதுமுதல் பிதிருதேவதைகள் விருஷணமற்ற ஆட்டுக்கடாக்களைப் புசிக்கிறார்கள். இந்திரனும் ஆட்டின் விருஷணத்தை யுடையவனாய் விட்டான். இராமா! நீ இந்த ஆச்சிரமத்துள்ளே போய் அகலிகையைப் பழையபடி எல்லோருடைய கண்ணுக்கும் புலப்படுபவளாக்கவேண்டும்" என்று விசுவாமித்திரமுனிவன் கூறினான்.

இராமனைக் கண்டதும் முனிவன் சொல்லின்படி அகலிகை எல்லோருடைய கண்ணுக்கும் புலனாயினாள். உடனே இராமலக்குவர் அவளுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டார்கள். அவளும் இவர்களை வணங்கினாள். பின் அவள் கௌதம முனிவனை அடைந்தாள். அம்முனிவனால் உபசரிக்கப்பெற்ற விசுவாமித்திர முனிவன் அப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு மிதிலையை யடைந்து அங்குள்ள சனக மன்னவனுடைய வேள்விச்சாலையை அணுகினான். இவ்வரலாற்றை ஆராய்வோம். மேலே கண்ட வரலாறு வால்மீகி பாலகாண்டம் 49, 50-ம் சருக்கங்கள்.

இவ்வரலாறு மிகவும் வெறுக்கத்தகுந்ததாக உள்ளது. இது பெண்கொலைப்பாதகனும் திருடனும் வஞ்சகனுமாகிய இந்திரன்-வீட்டுக்கு விலக்கமாக இருந்த-ஒரு பெண்ணைப் புணர்ந்ததையே மேலே குறித்தது. தீண்டாத்தகாத ஒரு பெண்ணை அவள் கணவனில்லாத சமயம் பார்த்து அவள் கணவனைப்போல மாறுவேடம் பூண்டு இந்திரன் அகலிகையை யடைந்து தன்னைச்சேர வேண்டுகின்றனன். அவள் விலக்கமாக இருந்ததைக் கூற 'அது பரவாயில்லை அவசரத்திற்குக் குற்றமில்லை, சும்மா கூடலாம்' என்கிறான் இந்திரன். இவ்விழிமகனுடைய இழிந்த அறிவுதானென்னே? அவளோ தேவேந்திரனோடு தனக்குப் புணர்ச்சி கிடைத்ததே என மிக மகிழ்ந்து தன்னைக் கூடுமாறு அவனை வேண்டுகிறாள். உடனே இருவரும் கூடுகின்றனர். இந்த வரலாற்றைக் கம்பர் சற்று மாற்றிக்கூறுகிறார். அதாவது இந்திரன் அகலிகையைக் கூடி இன்புறுகிறான். அப்புணர்ச்சி மத்தியிலேயே அவள் அவனை இன்னானென அறிகிறாள். அறிந்த பின்னும் அச்செய்கை தக்கதன்றென உணராளாய் அவனோடு இன்பநுகர்கிறாள் என்று கம்பர் கூறுகிறார். அச்செய்யுள் வருமாறு.—

"புக்கவளோடும் காமப் புதுமணமதுவின் றேறல்
ஒக்கவுண்டிருத்தலோடு முணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கதன்றென்ன ஓராள் தாழ்ந்தனளிருப்ப"

அவள் அப்போது விலக்கமாயிருந்த செய்தியைக் கம்பர் மறைத்தார்.

கௌதம முனிவன் இந்திரனைக்கண்ட போது அவன் ஒரு பூனையைப் போல உருவந்தாங்கிச் சென்றானெனக் கம்பர் ஓர் புதுக்கதை புனைந்தார். இது வால்மீகி கூறாதது. இந்திரன் முனி உருவுட னிருக்கும் போதே அம்முனி அவனைக் கண்டதாக வால்மீகி கூறுகிறார்.

அகலிகையைக் கல்லாகப்போகும்படி கௌதமன் சபித்தனனென்றும் அவள் அவனை வேண்ட இராமனுடைய கால் பட்டவுடன் கல்லுரு நீங்கி முன்னைய பெண்ணுருவருமென அம்முனி சாப விடைதந்தனனென்றும் கம்பர் கூறுகிறார். அதன்படியே இராமனுடைய கால்பட்டவுடன் கருங்கல்லாக இருந்த அகலிகை பெண்ணுருவடைகிறாளென்றும் கம்பர் கூறுகிறார். இவ்வரலாறு வால்மீகிக்கு முற்றிலும் மாறுபட்டது. வால்மீகியோ அகலிகையை ஒருவர் கண்ணிலும் படாமலிருக்குமாறு முனிவன் சபித்தானென்று கூறுகிறார். இராமன் அந்த ஆசிரமத்துள்ளே போனவுடன் அவளைக்கண்டபோது அகலிகை பிறர் கண்ணிற்படும் தன்மையளாகிறாள்.

வால்மீகி கூறுகிறபடி இந்திரன் விருஷண மற்றவனாகிறான். இதன் கருத்து என்னவென்றால் ஆண்தன்மை யிழந்தவனாகிறான். அதாவது ஆண்தன்மைக்கு முக்கிய காரணமாக விருக்கிற விருஷணமற்ற காளைகள் (காயடித்த காளைகள்) எவ்வாறு ஆண்தன்மை யற்றுப் போகின்றனவோ அவ்வாறே ஆண்தன்மை யற்றுப் போகிறான். இந்தச் சாபம் மிகவும் கொடுமையானது. அகலிகை யென்ற பெண்ணின் சம்மதம் பெற்று அவளும் மிகுந்த விருப்பத்தோடு தழுவக்கூடிய இந்திரனுக்கு நினைக்கவும் கொடுமையான சாபத்தை கோதமன் தந்தானென்றால் அவன் இழிதன்மைதானென்னே! 'என்வீட்டு பசு பொல்லாதது உன்வீட்டு காளையை அடக்கிக்கொள்' என்றோர் அறிவீனன் கூறினது போலன்றோ உள்ள இச்செயல். அவன் தன்னுடைய மனைவியைக் கண்டித்திருக்கவேண்டியது அவசியமே. இல்லையானால் ஔவையார் உபதேசிக்குமாறு சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளே யாமாகில் கூறாமற் சந்நியாசங்கொண்டிருக்கவேண்டும். இந்திரனுக்கு இவ்வித கடுமையான சாபம் கொடுத்த கோதமன் தன்னுடைய மனைவிக்குச் சாதாரணமான சாபமே தருகிறான், அதாவது அவள் ஒருவர் கண்ணிலும் படாமலிருக்கவேண்டுமென்பது. இதனால் அவன் அவளைச் சிறிது காலம் தள்ளிவைத்திருந்தான்போலக்காணப்படுகிறது. கடைசியாக இந்திரனாற் கற்பழிக்கப்பட்ட அகலிகையைச் சேர்த்துக்கொள்ளவும் செய்கிறான் அம்முனிவன். இவ்வாரியர்களுடைய கற்ப நிலைதானென்னே? தன்னிடத்தில பிரியமில்லாமலிருக்கிற இம் மங்கையை இவன் ஏன் மணந்தான்? அதனாலன்றோ அவள் இந்திரனை விரும்புகின்றாள். இக்கோதமன் தன் மனைவியிடத்திலிருந்த அபிமானத்தினாலேதான் அவளுக்குக் குறைந்த சாபத்தைக்கொடுத்து பின் தன்னோடு சேர்த்துக்கொண்டான்போலிருக்கிறது. இவ்வாறு தன் மனைவியிடத்தில் தான் வைத்திருந்த அபிமானத்தால் அவள் விபசாரியானமையை நேரிலே கண்டு அவளைத் திரும்பவும் சேர்த்துக்கொண்ட முனிவன் என்ன தவம் செய்துகொண்டிருந்தானோ? இவனும் ஒரு முனிவனாம்; இவன் தேவர்களையெல்லாம் அவர்கள் பதவிகளிலிருந்து விலக்குவதற்குத்தான் தவம் செய்தானாம். இச்செய்தியை இந்திரன் தேவர்களிடம் கூறிய மொழிகளால் அறிந்து கொள்ளலாம். தேவர்களைப் பாதுகாப்பதற்காகவே இந்திரன் கௌதமன் மனைவியைப்புணர்ந்து அவனுக்குச் சினமூட்டினனாம். ஒருவனுக்குச் சினமூட்டவேண்டுமென்றால் அவன் மனைவியை கற்பழிப்பதுதான் அதற்கு வழி போலும்? என்னே இப்பாதகனுடைய இழிசெயல்! இவனுக்காக நான்முகன் திருமால் முதலிய தேவர்கள் இரங்கி இவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனரென்றால் அவர்களுடைய தெய்வத் தன்மைதானென்னே! இவ்விவரமெல்லாம் முன்னரே கண்டோம். விருஷணமற்ற இந்திரனுக்கு பிதிருதேவதைகள் தாங்கள் தின்னும் ஆட்டுக்கடாக்களின் விருஷணங்களை ஒட்டவைக்கின்றனர். அது முதல் அவர்கள் விரு

இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க.

# ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு

திரு. எஸ். தண்டபாணி பிள்ளை எழுதும்

## ஓர் பகிரங்கக் கடிதம்.

"பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் கெடுவது காட்டுங் குறி" குறள்

அன்புள்ள ஐயா!

நமஸ்காரம். நாம் இருவரும் சுமார் 15 வருட காலமாய் ஒருவரை ஒருவர் அறிந்து நண்பர்களாகி யிருக்கிறோமென்று நினைக்கின்றேன். இவ்வளவு காலத்தின் நட்பிற்குப் பிறகு முகன் முதலாக இன்று உங்களுக்கு பகிரங்க கடிதம் எழுதும்படியான நிலைமையில் என்னைத் தாங்கள் கொண்டு போய் விட்டதற்காக மிகவும் வருந்துகிறேன். எனினும் இதுவே கடைசி கடிதமாகவும் இருக்கும்படி தாங்கள் நடந்துகொள்ளலாம். "நன்மை வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்ற பழமொழியையும் மாற்றியமைக்க இடம் கொடுக்கலாம். காலதேச வர்த்தமானங்களின் சுழல் காற்றில் தாங்கள் இக்கடிதத்தை எப்படி எடுத்துக் கொள்ளுகின்றீர்களோ நானறியேன். இருப்பினும் நான் எழுத வேண்டியவற்றை எழுதி என் கடமையை முடித்து விடுகின்றேன்.

"தமிழ்நாடு" தினசரியில் இம்மாதம் 23 ந் தேதி வெள்ளிக்கிழமையன்று வேலூர் ஜனுப் வி. எம். ஒபெய்துல்லாசாஹிப் பேரால் ஒரு கடிதமும், 28-3-28 ந் தேதி புதன்கிழமை பழநி ஸ்ரீமத் சற்குரு மகா தேவஸ்வாமிகள் பெயரால் மற்றொரு கடிதமும் என்னுடைய பெயரைக்குறித்து என்னைத் தாக்க வேண்டுமென்றிருமறைவான கெட்ட எண்ணத்துடனேயே பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. இதற்குத் தங்கள் சம்மதியும் தூண்டுதலும் உண்டு என்று நான் சந்தேகப் படாவிட்டாலும், அதை பிரசுரித்ததின் பொறுப்பை தாங்கள் ஒத்துக் கொள்ளுவீர்களென்று தான் நம்பி மேற்கண்ட காரணங்களால் இக்கடிதத்தை எழுத முன் வந்தேன். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பதுபோல் குற்றங்குறையிருப்பின் மன்னித்து மறந்து நம்முடைய நட்பிற்குப் பங்கம் வராமல் நடந்து கொள்ளுவீர்களென்றும் எதிர்பார்க்கின்றேன். நமது நட்பு நீடுழி நிலவ வேண்டு மெனபது தான் எனது அவா.

23 ந் தேதி தினசரியில் வெளிவந்த ஜனுப் ஒபெய்துல்லா கடிதத்தில்—ஸ்ரீ ஈ. வி. ராமசாமி நாய்க்கரும் ஸ்ரீ தண்டபாணியும் 19 ந் தேதி இரவு ஜோலார்பேட்டைக்குப் பக்கத்தில் உள்ள அலசந்தபுரம் கருமாதிக்குப் போக சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள் அப்பொழுது ஒபெய்துல்லா கையில் உள்ள 'தமிழ்நாடு'வை ஸ்ரீ நாயக்கர் வாங்கியதும், ஸ்ரீ தண்டபாணி 'டாக்டர் வேலுப்பிள்ளையின் விளம்பரம் 6, 8 வது பேஜ்களில் பூராவும் போட்டிருக்கிறது. அதனால் நல்ல வரும்படிதான்' என்று சொன்னதாகவும் அதற்கு ஸ்ரீ நாயக்கர் 'அயோக்கியமானதும் கேவலமானதுமான பத்திரிகைக்கா பிள்ளை விளம்பரம் கொடுத்தார்? இப்படிக் கொடுக்கக் கூடியவர்களையெல்லாம் தடுக்க வேணும், ஆபாசமான பத்திரிகைகளை பார்க்க வேண்டாம். போலித் தலைவர்களைப் பின் பற்றி நீங்கள் எல்லாம் மோசம் போகாதீர்கள்' என்று பேசியதிற்கு ஏற்றாற்போல் தண்டபாணியும் தாளம் போட்டார்—'என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நேற்று 28 ந் தேதி 'தமிழ்நாடு' தினசரியில் "நாயக்கர் பிரசாரம் ஸ்ரீ தண்டபாணியின் புதிய தோற்றம்" என்ற தலைப்பின் கீழ் பழநி சற்குரு மகாதேவசுவாமியின் பெயரால் "தேசத்திற்காக வென்று சிறை சென்றமையாலும், தமிழ்நாடு பத்திரிகையில் ஒரு சமயம் வேலைபார்த்து வந்தமையாலும், ஸ்ரீ எஸ் தண்டபாணி பிள்ளை பெயரை தமிழகம் அறிந்திருக்கிறது. அவர் நடத்தும் என். தண்டபாணி கம்பெனி 'தமிழ்நாடு'வின் ஆதரவினுலும் அதன் ஆசிரியரின் உதவியினுலும் ஏற்பட்டது என்பதை நாம் அறிவோம். எம்மிடம் இப் பத்திரிகையைப்பற்றி அவர் புகழ்ந்தது எழுதிமுடியாது இங்ஙனமிருக்க 23 ந்தேதி வெளிவந்த ஒபெய்துல்லா கடிதத்தில் திரு தண்டபாணி பிள்ளையைப்பற்றியுள்ள விஷயத்தைக் கண்டதும் வருத்தமுங் கொண்டேன். ஸ்ரீ நாயக்கர் சொன்னதற்கு அவர் தாளம் போட்டதுண்மையாயின் தற்கொலைக் கொப்பாகும். இந்த இழிந்த எண்ணம் திடீரென்று அவருக்கு ஏற்பட்ட காரணம் விளங்கவில்லை. வேலூர் நண்பர் கடிதம் ஒன்றைக் கொண்டே தண்டபாணியைப்பற்றி ஒருமுடிவிற்கும் நாம் வரத் துணியவில்லை. அக்கடிதம் அவரைப்பற்றிய மட்டில் முக்கியமானதாயிருப்பதால் அதன் உண்மையை விளங்க வைத்தலை குறித்து நம்மைப்போலவே பலரும் எதிர் பார்ப்பார்கள். என்பதில் ஐயமில்லை" என்று ஒரு கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட இரு கடிதங்களைக் கொண்டே எவ்வளவு இழிவான முறையில் தப்பான வழியில் மறைமுகமாக என்னைப்பற்றி "தமிழ்நாடு" பத்திரிகை பிரசாரம் செய்யக் கிளம்பியிருப்பதை நோக்க என் மனம் மிகவும் வருத்தப்படுகிறது.

முதற் கடிதம் தப்பபிப்பிராயம் உண்டுபண்ண காரணமாயும் மற்றக் கடிதம் அதனால் தப்பபிப்பிராயம் உண்டுபண்ணப்பட்டதாய் அதன் காரியமாயும் விளங்குகிறது. ஜனுப் ஒபெய்துல்லா சமீபத்தில் திருமங்கலம் மகாநாட்டிற்கு தங்களுக்குத் துணையாய் அழைத்துச் செல்லப்பட்டு திரும்பி வந்தபின் 19வ இரவு அவரும் எனது நண்பரானபடியால் ஒரே வண்டியில் பிரயாணம்செய்ய நேரிட்டது. ஆதலால் அவர் எழுதியதற்கு நான் நண்பர் என்ற முறையில் விடை கொடுக்கக் கடைமைப்பட்டிருக்கின்றேன். பழநியில் உள்ள பார்ப்பனர்களிற் சிலர் சுவாமி என்ற பெயர் வைத்துக்கொண்டு கள் சாராயம் குடித்து மாமிசம் தின்று காமவெறி கொண்டு சில பார்ப்பன விதவைகளைக் கைப்பற்றி போகசாதனம் செய்து கொண்டு மேகவியாதிகளை தீர்க்கும் வேலையில் இறங்கியிருப்பது போன்ற சுவாமிகளைப்பற்றி நான் கவலைப்படா விட்டாலும், "தமிழ்நாடு" பத்திரிகையில் நீண்டநாள் விளம்பரம் போட்டு வருபவராயும், "தமிழ்நாடு" தினசரியென்று சொன்னவுடனே அதன் ஆசிரியராகிய தங்களுக்கு தங்கக் கோப்பை பரிசளிக்கும்படி ரூ. 110 என்னிடம் நேரில் கொடுத்தவராயும், எனது அத்தியந்த நண்பராயும் உள்ள ஸ்ரீமத் சற்குரு மகாதேவஸ்வாமிகளின் சந்தேகத்தையும் நீக்க நான் கடமைப்பாடுடையவன். எனவே இக்கடிதம் பொதுவாய் எனது நண்பர்களுக்கும் சிறப்பாய் தங்களுக்கும் உண்மையை உணர்த்துமென்றே நம்புகிறேன்.

1. ஜனுப் ஒபெய்துல்லா கடிதத்தில் கூறப்பட்டது முற்றிலும் பொய் என்பதை மட்டும் ரூபிக்கின்றேன். அன்று எங்களுடன் திரு கண்ணப்பர் (திராவிடன் பத்திராதிபர்) அவர்களும் அலசந்தா புரத்திற்கு வந்திருந்தார். அவருடைய பெயரை வேண்டுமென்றே ஜனுப் விட்டு விட்டார். வேலுப்பிள்ளையின் விளபரம் 6-8 பக்கங்கள் முழுதும் எந்தக்காலத்திலும் போட்டதில்லை. அப்படிப் போடப்பட்டிருந்தாலும் ஸ்ரீ நாயக்கருக்கு 4 கண்கள் இருக்கின்ற படியால் நான் சொல்லாமலேயே பார்த்துத் தெரிந்துகொள்வார். நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ளும்படியான ஒருவர் ஸ்ரீ நாயக்கரல்ல. விளம்பரம் போட்டால் நல்ல வரும்படி உண்டென்று பத்திரிகை உலகத்தில் உள்ள ஸ்ரீ நாயக்கருக்குத் தெரியாதா? நான் சொல்லாத ஒன்றை சொன்னதாக வைத்துக்கொண்டாலும் "நல்ல வரும்படிதான்" என்பதில் என்ன குற்ற மிருக்கிறது. இது 'தமிழ் நாடு'க்கு கௌரவமே யொழிய வரும்படி யில்லாது கீழ்போவதைக் குறிக்கிறதா? ஸ்ரீ நாயக்கர், ஜனுப் ஒபெய்துல்லா விடத்தில் மட்டுமல்ல, பல பெரிய கூட்டங்களிலும், பல இடங்களிலும், தமது 'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகளிலும் தங்களைப்பற்றி ஜனுப் ஒபெய்துல்லா எழுதியது போல் "அயோக்கியத் தலைவர்களை நம்பி மோசம் போகாதீர்கள். அயோக்கியத் தலைவர்களை நம்பி மோசம் போகாதீர்கள். அயோக்கியப் பத்திரிகைகளை வாங்கிப் படித்தும் விளம்பரம் கொடுத்தும் ஆதரிக்காதீர்கள்" என்று பேசியும் எழுதியும் வருவது உலகறிந்த ரகசியம் இருப்பினும், இதை அன்று சொல்லாத போது ஜனுப் ஒபெய்துல்லா தங்களின் கோள்கேட்கும் சுபாவத்தை யறிந்து அதை உபயோகித்து பலனடைந்திருப்பார். எனினும் தண்டபாணி தாளம் போட்டதின் பலனை அவர் நண்பர் ஒபெய்துல்லா அடைந்ததைக் கேட்க எனக்கும் சந்தோஷம் தான். "தாளம் போடுவதென்றால் என்ன அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டதென்று எனக்கு விளங்கவில்லை. முன் சத்தியமூர்த்தி பத்மாசனிக்குப் பின்னால் தாளம் போடுவதாக படம் போட்டிருந்தீர்களே அந்த அர்த்தத்திலா? அல்லது சத்தியமூர்த்திக்குப் பின்னால் இப்பொழுது தேசிய நடனவாதிகள் தாளம் போடுகிறார்களே அந்த அர்த்தத்திலா? என்று கேட்கின்றேன். தங்களைவிட நான் பணக்காரன் இல்லாவிடினும் (பணம் இன்றைக்கிருந்து நாளைக்கழியும் தன்மையது) அறிவிலோ, ஆற்றலிலோ, படிப்பிலோ, அனுபோகத்திலோ, உறுதியிலோ, உழைப்பிலோ, தியாகத்திலோ, எவ்விதத்திலும் குறைந்தவன் அல்ல என்பது தங்களுக்குத் தெரியும், அப்படியிருக்க நான் தாளம் போட்டதாக வைத்துக் கொண்டாலும் மேற்படி இரண்டு முறைகளுக்கும் அவை பொருத்தமாயில்லை. ஆனால் ஒன்று ஸ்ரீ நாயக்கர் சொல்வது உண்மையாயிருந்து தாளம் போட்டிருக்க வேண்டும். அல்லது அவர் நண்பரானபடியால் நான் எதிர்க்காமல் சும்மா கேட்டுக்கொண்டிருந்ததை தாளம் போட்டதாக குறிப்பிட்டிருக்கலாமென யூகிக்கின்றேன்.

அவர் சொன்னது உண்மையாயிருந்தால் அதை ஒப்புக்கொள்ளவும் தப்பாக இருந்தால் கண்டிக்கவும் தங்களுக்கு உரிமையுண்டு. தாங்

களும் அவரும் எனக்கு ஒன்றுபோல் நண்பர்களாக இருக்கும்போது நான் தாண்டிவிழுந்து கொண்டு சண்டை போடாமல் இருப்பது தாளம் போடுவதாக அர்த்தமா? அப்படியானால் ஸ்ரீ நாயக்கருக்குப் பரிந்து கொண்டு தங்களை சண்டை போடாவிட்டால் தங்களுடன் கூடி தாளம் போடுவதாக ஸ்ரீ நாயக்கர் கூறினால் பொருத்தமுடையதாகுமா? நான் தமிழ் நாட்டில் தங்களையும், ஸ்ரீமான்கள் ராமசாமி நாயக்கர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், வி. ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகிய நால்வர்களையும் தலைவர்களாகக் கொண்டு ஏற்றத் தாழ்வில்லாமல் அவர்களிடம் அன்பும் நட்புங்கொண்டு ஒற்றுமையாக இருந்து வருகின்றேன். மேற்கண்ட நால்வர்களுக்குள்ளும் அடிக்கடி தோன்றும் பூசல்களிலெல்லாம் நானே தலையிட்டு முன்னின்று ஒற்றுமையை உண்டுபண்ணி இருக்கிறேன். அவசிய மிருப்பின் அவைகளும் வெளிவரவேண்டிய நியாய மேற்படுமென நம்புகிறேன். தங்களுக்கும் ஸ்ரீ நாயக்கருக்கும் ஏற்பட்ட சண்டைகளை மூன்று தடவை முடிவிற்கு கொண்டு வந்தேன். மாயவரம் மகாநாட்டிற்குப் பிறகு ஸ்ரீமான் நாயக்கரைப்பற்றி நான் எழுதிய கட்டுரையின் பயனாய் சண்டை ஓய்ந்து கோவை மகாநாடு கூட காரணமாயிற்று. மறுபடியும் சண்டை ஆரம்பமாயிற்று. ஒற்றுமைக்காகவே நானும் பாடுபட்டு வருகிறேன். நான் ஸ்ரீ நாயக்கரைவிட தங்களிடமே அதிகம் இருந்து 'தமிழ் நாடு' பத்திரிகைக்கே இன்றும் உழைத்து வருகிறேன். இதைப்பற்றி கீழே மற்றோரிடத்தில் விரிவாக எழுதுகின்றேன். இங்ஙனமிருக்க 'தமிழ் நாடு' தினசரியில் மேற்படி கடிதத்தைப் பிரசுரித்ததின் காரணங்களைக்கண்டு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வீர்களென்று எதிர்பார்கின்றேன்.

(2) பழனி ஸ்ரீமத் சற்குரு சுவாமிகளின் பெயரால் வெளிவந்த கடிதம் 'நாம், நாம்' என்ற வார்த்தைகளை மிகுதியும் கொண்டிருத்தலால் பத்திராதிபர் ஸ்தானத்தில் உள்ள ஒருவரால் எழுதப்பட்டிருக்குமோ என சந்தேகின்றேன். இல்லையானால் சிருபர்களுக்கும் 'நாம்' போட்டு அனுமதிப்பது பத்திராதிபர்களின் தொழில் தெரியாதவர்கள் செய்த வேலையாக இருக்கவேண்டும். கிற்க, 'தேசத்துக்காக வென்று சிறைசென்றமையாலும் 'தமிழ் நாடு' பத்திரிகையில் ஒரு சமயம் வேலை பார்த்து வந்தமையாலும் ஸ்ரீ என். தண்டபாணி பிள்ளை பெயரை தமிழகம் அறிந்திருக்கிறது' என்று சற்குரு சாமி கூறுகின்றதில் உண்மை இருக்கின்றது. ஆனால் அதில் 'தமிழ் நாடு' பத்திரிகையில் வேலை பார்த்ததினால் தான் என் பெயரைத் தமிழகம் அறிய முடிந்ததென்பது பொருத்தமாயில்லை. அப்படியானால் 'தமிழ்நாடு' வில் வேலை செய்யும் ஒவ்வொருவருடைய பெயரும் தமிழகத்தில் தெரிந்திருக்கின்றதா? தமிழகத்தில் பெயர் தெரியவேண்டுமானால் 'தமிழ்நாடு' வில் வேலை செய்ய வேண்டுமா? இல்லை. தமிழ் நாடு தேசப்பணி செய்கின்ற வரையில் அதற்காக வேலை செய்ய நான் எப்பொழுதும் தயாராய் இருக்கின்றேன். அதில் வேலை செய்வதினால் மனச்சாட்சியை விட்டு அதில் எழுதப்பட்டவைகளை யெல்லாம் அப்படியே ஒப்புக்கொண்டு அதன் மாறுபட்ட கொள்கைகளை யெல்லாம் அப்படியே ஆமோதிக்க வேண்டுமென்று அர்த்தமா! 'தமிழ் நாடு'க்கோ அதன் ஆசிரியருக்கோ யாராவது விரோதிகள் ஏற்பட்டால் 'தமிழ் நாடு' வில் உள்ள எல்லோரும மேற்படியார்களிடம் விரோதம பாராட்ட வேண்டுமா? அதுவும் இல்லை. இங்ஙனமிருக்க 'தமிழ்நாடு'வில் வேலை செய்ததினால் தமிழகம் அறிய நேர்ந்த தென்னும் கூற்று ஸ்ரீ பி. வரதராஜுலு நாயுடு தேசபக்தில் ஈடுபட்டதினால் டாக்டரானார், அதனால் மின்சார ரசம் கண்டுபிடித்தார், அதன் பிறகு ஒவ்வொரு தடவையும் சிறை சென்று அதன் வியாபாரத்தைப் பெருக்கினார் என்ற பொய்ப் பிரசாரத்திற்கு ஒப்பதாக இருக்கவில்லையா? என்பதை தாங்களே யோசித்துப் பாருங்கள்.

நான் ஏற்படுத்தி நடத்திவரும் என். தண்டபாணி கம்பெனி வியாபார தொழிற் சாலைக்கு தாங்களும் 'தமிழ்நாடு' பத்திரிகையும் தான் காரணமென்பதை நான் இன்றும் ஒப்புக் கொண்டு தங்கள் உதவிக்குக் கைமாறாக "தமிழ் நாடு" க்கே வேலை செய்து வருகின்றேன். இதற்குச் சாட்சி "தமிழ்நாடு" பத்திரிகையைப்பற்றி நான் புகழ்ந்ததற்கு அளவே கிடையாது என்று ஸ்ரீ சற்குரு சொல்லி யிருக்கின்றார். ஜனப் ஒலிப் அல்லா கடிதம் கண்டதும் வியப்பும் வருத்தமும் கொண்டார், தாளம் போட்டது தற்செயலென்றார், என்னுடைய ஆப்த நண்பராகிய ஸ்ரீ சற்குருசாமி இதன் காரணத்தை என்னை எழுதிக் கேட்டு உண்மை தெரிந்து கொண்டிருக்கலாம். அல்லது நான் தினம் 'தமிழ்நாடு' ஆபீசுக்குவருகிறேனே அப்பொழுதாவது பத்திராசிரியர் பொறுப்பிலுள்ளவர்கள் என்னை நேரில் கேட்டு உண்மையை அறிவித்திருக்கலாம். இரண்டும் செய்யப்படாமல் அவர் ஆபீசுக் கெழுதியதாக கூறுவதும் அதை பிரசுரிப்பதும் இழிவானசெய்கையா அல்லது நான் தாளம் போட்டதாகக் கூறப்படுவது இழிந்ததா என்பதை பகுத்தறியவும். "வேலூர் நண்பர் கடிதம் ஒன்றைக் கொண்டே தண்டபாணியைப்பற்றி ஒரு முடிவுக்கும் வரலாம் துணியவில்லை" யென்றுகூறித் தண்டபாணி பிள்ளைக்கு இழிந்த எண்ணம் ஏற்பட்டு விட்டதென்று முறண்பட எழுதியிருக்கின்றார். வேலூர் நண்பர் கடிதத்தை தவிர வேறு ஆதாரத்திற்கும் சாட்சிக்கும் மேற்கோளுக்கும் என்னைப் பற்றி "தமிழ் நாடு" ஆபீசில் கடிதங்கள் தயாராகாமல் தயவு செய்து பார்த்துக் கொள்ளுவீர்களென்று நம்புகிறேன். "தமிழ்நாடு" ஆபீசில் தயார் செய்யப்படாவிட்டாலும் அதற்காக வெளியில் வரவேற்பும் அனுப்பப்படாமல் இருக்கவேண்டும். தானாக வந்த கடிதங்கள் எவையேனும் இருப்பின் அவைகளைப்பற்றி எனக்கறிவித்தால் என் குற்றங்களை திருத்திக் கொண்டு அவைகளுக்காக வந்தனமளிக்கின்றேன்.

கடைசியாக ஸ்ரீ சற்குரு 'ஆகையால் அக்கடிதம் ஸ்ரீதண்டபாணி பிள்ளையைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமானதாயிருப்பதால் அதன் உண்மையை விளங்கவைத்தலைக் குறித்து எம்மைப்போலவே பலரும் எதிர்பார்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை' என்று முடித்திருக்கின்றார். இதுவு முற்றிலும் உண்மையே. இந்த உண்மையைத் தாங்களாவது "தமிழ்நாடு" ஆசிரியராவது, நானாவது விளக்கிக் காட்டி நண்பர்களின் சந்தேகங்களை களைய வேண்டாமா? பத்திரிகையின் சார்பில் இருக்கும் பத்திராதிபருக்கு கொஞ்சமாவது பொறுப்பும், நாணயமும் யோக்கியதையும் இருந்தால்இம் மாதிரி கடிதங்களை என்போன்று "தமிழ்நாடு" க்கே உழைக்கும் உத்தமர்களின் மனம் நோக நன்றி கெட்ட செய்கையாய் பொறாமை காரணமாக மறைமுகமாய் என்னைக் கேளாமலும் பிரசுரித்து பத்திராதிபர்களின் குறிப்பும் எழுதாது வேணுமென்றே கெட்ட எண்ணத்துடன் நடப்பார்களா என்று நான் கேட்கின்றேன். இந்த மாதிரி நடத்தைக்குச் சாட்சிகள் எவ்வளவு நாள் அனுமதித்து நண்பர்களின் மனதைப் புண்படுத்த உத்தேசம்? உண்மைக்கு மாறான மேற்படி விஷயங்களை உண்மையுணர்ந்த "தமிழ்நாடு" ஆசிரியப்பதவியில் உள்ளவர்கள் பிரசுரிக்கலாமா? பிரசுரித்தாலும் உண்மை தெரியும் போது பத்திராதிபர் குற்றம் ஒப்பு போட்டு அதை உலகத்திற்கு உணர்த்த வேண்டாமா? "நட்டி குலைத்து நாய் தலைமேல் வைத்தது போல்" தங்கள் கீழிருக்கும் சிப்பந்திகள் செய்யும் குற்றங்களுக்குத் தாங்கள் பொறுப்பேற்றுக் சொள்ள வேண்டியதாயிருக்கிறது. எங்கள் பக்கத்தில் 'மாங்குடி முண்டன்' கதையென்று ஒன்றுசொல்லுவார்கள். அதாவது மாங்குடி என்னும் கிராமத்தில் சில முண்டன்கள் ஒன்று கூடி சூதாடுவது வழக்கம். அப்போது தோற்றவர்களை அந்த வேடிக்கை பார்க்க வந்தவர்களின் செருப்பால் அடிப்பேன் என்று வென்றவன் சொல்ல அதற்கு தான் செருப்பால் வேடிக்கை பார்க்கின்றவர்களை அடிப்பதாகத் தோற்றவன் சொல்லி வந்தவர்களை வம்புக்கிழுப்பது வழக்கம். அது போல் தங்கள் சிப்பந்திகள் செய்த குற்றத்திற்காக தங்களை நான் கோபித்துக் கொள்ள முன்வரவில்லை. தோன்று தோற்றித் துறை பல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியல்ல" எனினும்,

தன்னை மறுத்தலை பழித்த காலையில், மன்னிய சபையிடை வெல்லுறு பொழுதினில், தன்னுடைய ஆற்றல் உணராரிடையில் தான் தற்புகழ்தல் தகுதியாமே என்றபடி "தமிழ்நாடு"க்கும் எனக்கும் உள்ள சம்பந்தத்தை நண்பர்கள் அறிந்து உண்மை உணர வேண்டுமென்று சிறிது மட்டும் குறிப்பிடுவதற்கு மன்னிக்கவும். தாங்களும் நானும் கடலூர் சிறையில் ஒருவருஷ காலம் ஒன்றாயிருந்து வெளிவந்த பின்னர் தங்கள் வேண்டுகோளுக் கிணங்கி சேலம் வந்து தங்களின் சேலம் கம்பெனியில், ஒரு வருஷம் காரியதரிசியாய் இருந்தேன். இரண்டு வருஷம் சேலத்திலும் 1 வருஷம் சென்னையிலும் "தமிழ் நாடு" பத்திரிகையின் மானேஜராக இருந்து நல்ல பெயர் பெற்று அப்பத்திரிகையை நல்ல நிலமைக்குத் கொண்டு வந்து நான் எடுத்துக்கொள்ளும்போது நஷ்டத்தில் இருந்த பத்திரிகையை நான் விலகும் போது வருடம் 1க்கு ரூ. 8000க்கு குறையாமல் இலாபம்வரும்படியாய் வேலை செய்திருக்கிறேன். அதற்குக் கைமாறாக சுமார் 3 வருடங்களாக நான் என். தண்டபாணி கம்பெனியை வைத்து நடத்த தாங்களும் "தமிழ் நாடும்" வேண்டிய உதவி யளித்திருக்கின்றனர். நான் மானேஜர் பதவியினின்றும் விலகி 3 வருடங்களாயினும் தொழில் முறையில் தமிழ் நாட்டில் சம்பந்தம் பெற்று அதன் அபிவிருத்திக்குழைத்து நாளது வரையில் திரிகரண சுத்தியாய வேலை செய்து கொண்டுவருகிறேன். 1926-27ம் வருடத்திற்கு 'தமிழ்நாடு' வாரப்பத்திரிகையின்விளம்பர சோல் கண்ட்ராக்டாக அதை எடுத்துக் கொண்டு ரூ. 5000 க்கு மேலாக தங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். 1927-28ம் வருடத்திற்கு 'தமிழ்நாடு' தினசரியின் விளம்பரத்திற்காக வருடம் ஒன்றுக்கு ரூ. 12000 மும் வாரப்பதிப்பின் விளம்பரத்திற்காக ரூ. 5000 மும் ஆக ரூ17000 க்கு ஒப்பந்தம் பேசி நாளது வரையில் சுபந்தனை தவறாது மாதா மாதம் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையை முன்னதாகவே கொடுத்து வந்து கொண்டிருக்கிறேன், 'தமிழ் நாடு' லிமிடெட் கம்பெனியில் 10 ஷேர்கள் எடுத்துக்கொண்டு அதற்குரிய ரூ 1000மும் முன் பணமாக சென்ற வருடத்திலேயே செலுத்தியிருக்கின்றேன். 'தமிழ நாடு' வின் விளம்பரத்திற்காக இது வரையில் ஊண் உறக்கமின்றி அல்லும் பகலும் ஊர் தவறாமல் வேலை செய்து கொண்டு வந்து அதற்குரிய சிப்பந்திகளுக்கும் பிறவற்றிற்கும் சேர்ந்து ரூ 5000 க்கு மேல் செலவு செய்திருக்கின்றேன். நாளது தேதியில் 'தமிழ் நாடு' விடமிருந்தும் "தமிழ்நாடு"க்கோ மற்றவர்களுக்கோ ஒரு பைசா கூட பாக்கி கொடுக்கவேண்டியதில்லை. 'தமிழ் நாடு' விளம்பர ஒப்பந்தம் இன்னும் எனக்கு இருந்து கொண்டுவருகிறது. ஒப்

இதன்தொடர்ச்சி 17 ம் பக்கம் பார்க்க

# 'தமிழ் நாடு' ஆபீஸ் கதவடைப்பு.

## காரியாலயத்தில் போலீஸ் காவல்

## டாக்டர் நாயுடுவின் அக்கிரமச் செயல்.

### தண்டபாணி பிள்ளையின் சமரச முயற்சி.

இன்று காலை சென்னை "தமிழ் நாடு" அச்சுச்சாலை கம்பாசிட்டர்களை அச்சுச்சாலை மானேஜிங் டைரெக்டர் டாக்டர் பி. வரதராஜுலுவும் ஆசிரியர் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளையும் வெளிப்போகச் சொல்லி கதவை யடைத்து விட்டதாகச் சொல்லப்படுகின்றது. இத்தகைய செய்கைக்கு காரணம் ஸ்ரீமான் டாக்டர் நாயுடுவும் ஆசிரியரும கீழ்கண்டவாறு கடிதமொன்றெழுதி அதில் கம்பாசிட்டர்கள் அனைவரையும் கையெழுத்திடச் சொல்லியபோது அவர்கள் மறுத்து விட்டதுதானெனத் தெரிகிறது. கடிதம் வருமாறு.

"தமிழ் நாடு மீது பாய்ச்சல்—எதிரிகள் விஷமம்—'தமிழ் நாடு' ஆசிரியர் அவர்களுக்கு ஐயா! தமிழ்நாடு அச்சுக்கோர்ப்போராகிய நாங்கள் எழுதிக்கொள்வது:—பிராட்வே லோன்ஸ் கோயரில் கூடின கூட்டத்தில் நாங்கள் ஒன்றும் எங்கள் குறைகளைப் பற்றி அவர்களுக்குச் சொல்லவில்லை. 'தமிழ்நாடு' பத்திரிகையின் பழைய விரோதியான தண்டபாணி பிள்ளையும ஆர். சபாபதி முதலியாரும் கூட்டத்தில் ஏதோ காலித்தனமாகப் பேசினார்கள். அக்கூட்டத்தில் நாங்கள் ஒன்றும் சம்பந்தப்படவில்லை"

### ஆபீசுக்கருகில் குழப்பம்.

இன்று காலை வெளியே அனுப்பப்பட்ட தொழிலாளிகள் வேறு சிலர் வேலைக்குச் செல்வதை நல்ல வார்த்தைகள் சொல்லித் தடுக்க முயலும்போது மீறி வேலைக்குச்செல்பவர்களுக்கும்வெளியேற்றப்பட்ட தொழிலாளிகளுக்கும் சச்சரவேற்பட்டதால்பெரும் கூச்சலும குழப்பமுமாயிருந்தது. இந்நிலையில் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அங்கு வந்து பழனி வைத்தியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளையுடன் அவர்களைச் சாந்தப்படுத்தி குழப்பம் செய்ய விடாமல் தடுத்து இயல்பான முறைகளில் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளும்படி நன்மதி கூறி அனைவரையும் அருகிலுள்ள லோன்ஸ்கோயருக்கு அழைத்துச் சென்றார். இதற்குள போலீசாருக்குச் செய்தியனுப்பப்பட்டு சுமார் பத்துப் பதினைந்து கான்ஸ்டேபிள்கள் அங்கு வந்து சேர்ந்தனர். போலீசார் வந்து கொண்டிருக்கும் போதே கூட்டம் கலைந்து விட்டது. ஆயினும் 'தமிழ் நாடு' காரியாலயத்தில் இன்னும் சில போலிசார் காவலிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

### லோன்ஸ் கோயரில் கூட்டம்.

பிறகு பிராட்வே லோன்ஸ்கோயரில் கூடிய "தமிழ் நாடு" கம்பாசிட்டர்கள் கூட்டமொன்றுக்கு தொழிலாளர் தலைவர் திரு எஸ். வெங்கடேச முதலியாரைத் தலைமை வகிக்கும்படி திரு பி. ராமானுஜம் பிள்ளை பிரேரேபிக்க திரு பால் சுப்ரமணியம் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது. ஸ்ரீமான் எஸ். வெங்கடேச முதலியார் கூட்டத் தலைமை வகித்தார்.

### தொழிலாளிகள் குறைகள்.

'தமிழ் நாடு' அச்சுக்கோர்ப்பவருள் ஒருவரான திரு ராமானுஜம் பிள்ளை மற்ற தொழிலாளிகள் சார்பாக அவர்கள் குறைகளையும் மற்றும் இன்று கதவடைப்பு நடந்ததின் காரணத்தையும் விளக்கிக் கூறியதாவது,—நாங்கள் போனஸ் கொடுக்கப் படுவதற்காக வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் 3 மணி நேரம் ஆபீசுக்கு இலவசமாக வேலை செய்து வருகிறோம். சென்ற திங்கட்கிழமை அதிக வேலை இருந்தது மறுநாள் செவ்வாய்க்கிழமையும் ஓவர் டைம் வேலை செய்யச் சொல்லியபோது எங்கள் தேகக் கஷ்டத்தை உத்தேசித்து ஒன்றரை மணி நேரத்திற்கு அதிகமாகச் செய்யாமல் போய் விட்டோம். பிறகு நாங்கள் இத்தகைய குறைகளை நீக்கிக்கொள்ள இனி ஒற்றுமையாயிருந்து முதலாளிகளிடம குறைகளைத் தெரிவித்து பரிகாரம் தேடவேண்டுமென்று பேசி முடிவு செய்தோம். இவ்வாறிருக்க சென்ற வியாழக்கிழமை யன்று லோன்ஸ் கோயரில் கூடிய அச்சுக்கோர்ப்போர் கூட்டத்திற்கு நாங்கள் போனதாக டாக்டர் வரதராஜுலு நாயுடு எங்களைக் கேட்டார். அதற்கு நாங்கள் 'ஒன்றும் போய்ச் சொல்லவில்லை. நீங்கள் வேலையிலிருந்து எடுத்துவிட்டவர்கள் தான போய்ச் சொல்லி ஸ்ரீமான் சபாபதி எங்களைக் கேட்டார் நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை' எனறோம் டாக்டர் நாயுடு 'அப்படியானால் என்னைக்குறித்து அவதூறு செய்தால் நீங்கள் வாயை மூடிக்கொண்டிருக்கலாமா' வென்று கேட்டார். நாங்கள் இதற்கு 'முன் நீங்கள் தானே இவ்வாறு உங்கள் விரோதிகள் யார் என்ன பேசினாலும ஒன்றும் வாயைத் திறக்கக்கூடாதென்று திட்டம செய்திருக்கிறீர்கள்' என்று எடுத்துக் காட்டினோம். பின்பும் டாக்டர் நாயுடு 'என் எதிரிகளான 'சுதேசமித்திரன்' ஆபீஸ் தண்டபாணி பிள்ளை முதலியவர்களிடம் இங்குள்ள விஷயங்களைச் சொல்வது பிசகு. தண்டபாணிக்கு இங்கு ஒரு பைசா கூட கிடையாது. அவருக்கும் இந்த ஆபீசுக்கும் சம்பந்தமில்லை' என்று கூறினார். பிறகு நேற்று மின் பகல் நாங்கள் 2 மணிக்கு வேலை துவக்கியபோது சென்ற வியாழக்கிழமை நடந்த கூட்டத்தைக்குறித்து நாங்கள் எழுதியது போல கடிதமொன்றை எழுதி ஆசிரியரும் டாக்டர் நாயுடுவும் போர்மெனிடம் கொடுத்து எங்கள் கை யெழுத்து வாங்கச் சொன்னார்கள் அதற்கு நாங்கள் கையெழுத்திட மறுத்து விட்டோம். இக்கடிதம் மேலே பிரசுரிக்கப் பட்டிருக்கிறது இன்று காலை நாங்கள் வழக்கம் போல் வேலைக்குச் சென்றதும் ஸ்ரீ பாலசுந்தரம் என்பவர் நேற்று காஷுவல் லீவ் வாங்கிக்கொண்டோ அல்லது வாங்காமலோ நின்றுவிட்டார் இன்று அவரை நேற்று அவர் வராததற்காக டாக்டர் நாயுடு அவரை வெளியே நிறுத்தி வைக்கும்படி போர்மெனிடம் சொல்லியதாக அவரை போர்மென் சொல்லி வெளியே நிறுத்தி விட்டார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நான் 'இத்தகைய செய்கை அவமான மல்லவா? அவரை உள்ளே உட்கார்ச் சொல்லி சம்பளம் கொடுத்தனுப்பி விடுவது மேலல்லவா? அவ்வாறில்லாமல் சம்பளமும் கொடுக்காமல் அவமரியாதையாக வெளியே போயிருக்கச் சொல்வது அடுக்குமா' வென்று கேட்டேன். அதற்குப போர்மெனும் 'அது அவமானமானதாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது' என்று கூறினார். இதற்குள் பெரிய போர்மென் வீரராகவலு நாயுடு ஆசிரியர் சொக்கலிங்கம் பிள்ளையவர்களிடம் சென்று 'ராமானுஜம்தான் இவ்வாறு செய்வது' என்று கோள் சொன்னார். ஆசிரியர் என்னை அழைத்து பால 'சுப்ரமணியனை வெளியே போகச் சொல்வது அவமானமென்று சொல்ல நீ யார்? வேலைக்கு வேண்டாம் நீ முதலில் வெளியே போ' என்று கூறினார். இதற்குள் டாக்டர் நாயுடு என்னைக் கூப்பிட்டு 'நேற்று முன்தினம் என்னைத் திட்டும்போதெல்லாம் நீங்கள் ஒன்றும் கேட்காமல் என் வாயை மூடிக்கொண்டிருந்தீர்கள்' என்றும், 'அந்த கம்பாஸிட்டரை வெளியே போகச்சொன்னால் அது அவமானமென்று பேச நீ யார்' என்றும் கோபித்துக்கொண்டு என்னை 'நீயும் வெளியே போ' என்றார். நான் சம்பளத்தைக் கொடுத்தால் போய்விடுவதாகக் கூறினேன். இதற்குள் டாக்டர் நாயுடுவும் ஆசிரியரும் கோபத்துடன நாற்காலியை விட்டெழுந்து வந்து என்னை சிறிது தாமதித்தால் தள்ளுவதுபோல் வந்துவிட்டார்கள். அதன் மேல் நான் தாழ்வாரத்தில் வந்து நின்று சம்பளத்திற்காகக் காத்திருந்தேன். அங்கிருந்தும் என்னை வெளியே போகச் சொல்லி பியூனைவிட்டு என்னைத் தெருவில் பிடித்துத்தள்ளச் சொன்னார்கள்.

நேற்று முன்தினம் வெங்கடேச ஐயர் என்னும் கம்பாஸிட்டரை அவர் ஆறு நாள் ரஜா வாங்கிக் கொண்டதற்காக வேலையிலிருந்தெடுத்து விட்டார்கள். அவர் வந்து எட்டு மாதமும், பர்மனெண்டாகி ஐந்து மாதமுமாகிறது எனக் கூறினார்.

ஸ்ரீ நடேச முதலியார் நன்மதி.

பின்னர் கூட்டத்தலைமை வகித்த திரு. எஸ். நடேச முதலியார் அவர்களைச் சாந்தப்படுத்தி பின்வருமாறு பேசினார்:—

சகோதரர்களே! இரண்டு நாட்களுக்கு முன் இங்கு அச்சு கோர்ப்போர் கூட்டம் நடைபெற்றபோது பிராமணரல்லாதாருக்காக உழைக்கும் தலைவரெனச் சொல்லும் டாக்டர் நாயுடுவே இவ்வளவு அக்கிரமமாக நடப்பார் என்றும், உங்களுக்கு இவ்வாறு எதிர்பாராத கஷ்டம் வருமென்றும் யாரும் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள், டாக்டர் நாயுடு இவ்வளவு அனுவசியமாக உங்களை அப்புறப் படுத்தியது அவர் தேசாபிமானி என்பதற்கும், தொழிலாளிகளுக்காக முன்பு சிறை சென்றதாகசொல்லிக்கொள்வதற்கும் அவமானமானதாயிருக்கிறது. அத்தகையவர் தமது தொழிற்சாலையிலேயே தொழிலாளிகளைத் துன்புறுத்துவது கேவலமானதாகும். இவரே இவ்வாறு அநியாயமாக சிறவர்களான உங்களைச் சங்கடப்படுத்துவதைத் தொழிலாளர் மகாநாடு கூட்டிக் கண்டித்து, உங்கள் பிரதிநிதிகள் மூலமாக முதலாளிகளிடம் சொல்லி அனுப்பி பரிகாரந் தேட வேண்டும். இந்தியாவில் மூவகை ஜனங்களுண்டு. அதில் ஆயிரக்கணக்கான முதல் வைத்து வேலை செய்பவர்கள், நூற்றுக்கணக்கான முதல் வைத்து வேலை செய்பவர்கள், மூன்றாவதாக இரண்டணா முதல் 70 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் தொழிலாளிகள் ஆக மூன்று வகைப்பட்டவர்களுண்டு. இதில் டாக்டர் நாயுடு முதல் வகுப்பைச் சேர்ந்தவராயிருக்கிறார். 1918 ம் வருடத்தில் பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் தொழிலாளிகளில் பகிஷ்பிராம்போ தொழில் கமிஷன் சிபார்சுப்படி அதிகப்படியாக இரண்டணா கூலி கொடுக்க மறுத்ததற்காக வேலைநிறுத்தம் செய்து ஒற்றுமையுடனிருந்து வெற்றியடைந்தனர். இப்போது முதலாளிகள் தொழிலாளிகளைக் காக்கை குருவி முதலிய பட்சிகள் போல் நினைத்துச் சுட்டுக் கொல்லும் அக்கிரமத்திற்கும் அஞ்சாமல் முன் வருகின்றனர். இது போன்ற சம்பவம் சமீபத்தில் விலோ தொழிற்சாலையில் நடந்தது. மரங்களை வெட்ட கோடாறி வேண்டும், அதில் காம்பாயிருப்பது மரக்கிளை தான். அதுபோல நம்மில் சிலரை நல்ல வார்த்தை சொல்லி அழைத்து லாபகரமான சாதகங்காட்டிச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

(நேற்று முன் தினம் விலகிய வெங்கடேச அய்யருக்கு, 5-ரூபாய் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லியும் அழைத்தார்கள் அவர் போகவில்லை என்ற கூச்சல.) இத்தகைய முறை எங்கும் உண்டு. இது 'தமிழ்நாடு' ஆபீசிலும் கையாளப்படுவது ஆச்சரியமல்ல முதலாளிகளில் எல்லோரும் ஒன்றுபோலத்தானே இருப்பார்கள். அத்தகைய கோடாரிக்காம்புகள் ஏதாவது இருந்தாலும் அகிம்சா முறையில் உங்களுக்கு வந்த அவமானமும், கஷ்டமும் அவர்களது என்பதை உணரச்செய்து உங்களுடன் சேர்த்து ஒற்றுமைப்படுத்துவதுதான் முறைமை. நீங்கள் முதலில் சங்கம் ஸ்தாபித்துக் கொண்டு உங்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் மூலமாக உங்கள் குறைகளனைத்தையும் நிவர்த்தி செய்ய முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (கரகோஷம்) இந்நிலையில் ஸ்ரீ சபாபதி முதலியார் அக்கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்.

தமிழ்நாடு அச்சுக் கோர்ப்போர் சங்கம்.

பிறகு மேற்கண்ட பெயரால் திரு பி. ராமானுஜம் பிள்ளையைத் தலைவராயும் திரு ம. பாலசுப்ரமணிய முதலியாரை காரியதரிசியாகவும், திரு மன்னூர் நாயுடு பொக்கிஷதாரராகவும் உடைய சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டு கம்பாஸிடர்களனைவரும் மாதமொன்றுக்கு இரண்டணா வீதம் சந்தா செலுத்துவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது,

தீர்மானங்கள்.

முடிவில் கீழ்கண்ட மூன்று தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இத்தகராறு சம்மந்தமாக 'தமிழ்நாடு' ஆபீஸ் மானேஜிங் டைரக்டர் முதலிய அதிகாரிகளைக் கண்டு பேச ஸ்ரீமான்கள் டாக்டர் ஆர். எம் கே. வேலுசாமிப்பிள்ளை, எஸ் நடேச முதலியார், ஆர், சபாபதி முதலியார், பி. ராமானுஜம் பிள்ளை, எம். மன்னூர் நாயுடு ஆகியவர்களை தூதுகூட்ட மெம்பர்களாக ஏகமனதாகத் தெரிந்தெடுத்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

(1) தமிழ்நாடு அச்சுக் கோர்ப்போராகிய நாங்கள் சென்ற 29 ந் தேதி வியாழக்கிழமையன்று பிராட்வே லோன்ஸ்கொயரில் கூடிய அச்சுக் கோர்ப்போர் சங்கக்கூட்டத்திற்குப் போயிருந்ததற்காகவும். அங்கே எங்களுடையவும் 'தமிழ்நாடு' ஆபீசினுடையவும் குறைகளைப்பற்றி தொழிலாளிகள் பேசியபோது அதை எதிர்த்து நாங்கள் கண்டிக்காததற்காகவும் கோபித்து, அன்று நடந்த மீட்டிங்குக்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்றும் எங்கள் விரோதிகள் அதைக் கூட்டியிருக்கிறார்கள் என்றும் எங்களில் யாரும் போகவில்லை என்றும் எங்களிடம் தப்பாக கையெழுத்து வாங்கி பிரசுரிக்க விரும்பியதற்கு நாங்கள் ஒப்புக் கொள்ளாததற்காகவும் எங்களை இன்று 'தமிழ்நாடு' லிமிடெட் கம்பெனி மானேஜிங் டைரக்டரும் ஆசிரியரும் தமிழ்நாடு ஆபீசை விட்டு வெளியே தள்ளி கதவையடைத்து விட்ட செய்கையைப் பற்றி நாங்கள் மிகவும் அழுத்தமாகக் கண்டிக்கிறோம்.

(2) தமிழ்நாடு மேனேஜிங் டைரக்டர் அவர்களை அச்சுக் கோப்பவராகிய நாங்கள் வணக்கமாய் கேட்டுக் கொள்வது என்னவென்றால், எங்களை அநியாயமாய் வெளியே தள்ளி கதவையடைத்ததிலிருந்து எங்கள் எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும நாங்கள் இன்று ஸ்தாபித்துள்ள 'தமிழ்நாடு' அச்சுக் கோப்போர் சங்கத்தை ஒத்துக் கொள்ள வேண்டுமென்றும், கதவடைப்பு முடியும் வரை எங்களுக்குச் சேர வேண்டிய சம்பளம், போனஸ் முதலிய சகல உரிமையும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(3) எங்கள் மேற்கண்ட குறைகளையும் விஷயங்களையும் தமிழ்நாடு லிமிடெட் கம்பெனி அதிகாரிகளிடம் நாது சென்று கலந்து பேசி நிவர்த்திசெய்வதன் பொருட்டு கீழ்க்கண்ட ஐவரையும் தூதுக்கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுப்பதுடன், அவர்கள் செய்யும் எவ்வித முடிவுக்கும் நாங்கள் கட்டுப்படுகிறோமென்றும் தீர்மானிக்கிறோம். (மெம்பர்கள் பெயர் மேலே வெளியிடப்பட்டிருக்கிறது.)

பிறகு கூட்டம் பிற்பகல் 1-15 மணிக்குக் கலைந்தது. தூதுகூட்டத்தினர் 'தமிழ்நாடு' ஆபீஸ் அதிகாரிகளைச்சந்தித்துத்துப்பேசச் சென்றிருப்பதாகத் தெரிகிறது.

திரு. தண்டபாணிப்பிள்ளையின்
சமாச முயற்சி.

'தமிழ்நாடு'கம்பாசிட்டர்கள் பொதுக்கூட்டம் கூட்டுவதற்குமுன் திரு என் தண்டபாணி பிள்ளை அவர்களைச் சாந்தப் படுத்தி பின்வருமாறு பேசினார்:- "தமிழ் நாடு" ஆபீசுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லப்பட்டதாம். ஆயினும் நான் அதில் பத்து பங்கு எடுத்துக் கொண்டு ரூபாய் ஆயிர கொடுத்திருக்கிறேன். இன்று அப்பத்திரிகை வெளிவராவிட்டால் எனக்குத்தான் சுமார் 200 ரூபாய்க்கு அதிகமான நஷ்டம். ஏனெனில் அங்கு இன்னும் நான் விளம்பரகண்ட்ராக்டராயிருக்கிறேன். தமிழ்நாடு ஆபீஸ் பங்குக்காரராயிருக்கும் நான் உங்கள் கூட்டத்தில் சம்பந்தப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது மேலும் நான் உங்கள் சார்பாகச் செல்லும்தூதுக்கூட்டத்தில் சேர்ந்துபோய் உதவிபுரிய முடியாததற்கும் அது தான் காரணம். டாக்டர் நாயுடு தமிழ்நாடு மேனேஜிங் டைரக்டர் என்ற ஹோதாவில் என் போன்ற பங்குக்காரர்களுடைய முடிவுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டியவர் தான். நீங்கள் உங்களுககுச் சம்பளவிஷயமாயும் பரிகாரம் தேட இயல்பான முறைகளில் முயற்சி செய்தால் நான் தமிழ்நாடு லிமிடெட் பங்குதார் என்னும் முறையில் கூடுமான உதவி செய்யத்தயாராயிருக்கிறேன். உங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடுமிருந்தால் நீங்கள் உங்கள் கோரிக்கைகளில் வெற்றி பெறுவது நிச்சயம். நீங்கள் ஆபீஸ் வாசலில் நின்று கொண்டு குழப்பம் செய்வது கூடாது- அப்போது போலீசார் உங்களில் சிலரைத்தான் கைதி செய்வார்கள். நீங்கள் அகிம்சா முறையில் நியாயப்படி உங்களைத் துரோகம் செய்து வேலைக்குப்போவோர்களை போகவிடாதபடி காலைப் பிடித்துக் கொண்டு குறுக்கே விழுந்து மறிசல் செய்ய உரிமையுண்டு, அவ்வாறே செய்தால மற்றவர்களும் உங்கள் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினால் நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம உங்களுக்கு ஜெயம கிடைக்காமற் போனாலும் அந்த அபஜயம் தமிழ்நாடு ஆபீசுக்குத் தான்சாரும். 'வெளியிலிருந்து அங்கிருப்பவர்களுக்குச்சாப்பாடு தருவித்துக கொடுக்கிறார்கள் என்றசத்தம்)

இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

## திருச்சியில் மாபெருங்கூட்டம்

# திருமிகு நாயக்கர் சொற்பெருக்கு

## உத்தியோகம் பெறுவது தேசத்துரோகமல்ல. அதுவே சுயராஜ்யம்.

நமது கௌரவ நிருபரிடமிருந்து

சென்ற ஏப்ரல் மாதம் 2ந்தேதி மாலை 5 மணிக்கு டவுன்ஹாலின் முன்னிலையில் திருச்சி, ஸ்ரீரங்கம், பொன்மலை முதலிய நகர மக்களின் பொதுக்கூட்டம் ஒன்றுகூடியது. கூட்டத்திற்கு ஏராளமான பொது ஜனங்கள் வந்திருந்தனர். அவர்களுள் ஸ்ரீமான்கள் பெரியண்ண பிள்ளை, கலியபெருமாள் நாயுடு, வேணு கோபால் நாயுடு, சுந்தரராஜுலு நாயுடு, தினகர நாயுடு, பரமசிவம் செட்டியார், ஆழ்வார் செட்டியார், கி. கலியபெருமாள், அடைக்கலசாமி பிள்ளை, ராஜகோபால் பிள்ளை, மே. வே. துரைசாமி உடையார், இராவண தாசர், கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை, மணவை ரெ. திருமலைசாமி செட்டியார், குளித்தலை கோவிந்தசாமி முதலியார் முதலியவர்கள் மிகக்குறிப்பிடத்தக்கவர்கள். உறையூர் வக்கீல் வேதாசலம் பிள்ளையவர்கள் கூட்டத்திற்கு தலைவராக தேர்ந்தெடுக்கப் பெற்று ஓர் முகவுரை சொற்பொழிவு நிகழ்த்தினர். கூட்டங்கூடிய நோக்கத்தையும் திரு மிகு ராமசாமி நாயக்கரவர்கள் பேசப்புகும் பொருள் பற்றியும் குறிப்பிட்டு விட்டு வைக்கம் வீரர் அவர்களைப் பேசுமாறு வேண்டிக் கொண்டனர். அவர்கள பேசிய சுமார் இரண்டரை மணி நேரத்திய சுருக்கம் வருமாறு:-

'தலைவர் அவர்களே! சகோதரர்களே!' நான் நேற்று ஈரோட்டிலிருந்து புறப்பட்டு மதுரைக்குப் புறப்பட்டு செல்லும்பொழுது ஸ்ரீ திருமலைசாமி செட்டியார் ஸ்டேஷனில் வற்புறுத்தலுக்கிணங்கி இங்கு பேசுவதாக ஒப்புக் கொண்டேன்.

நான் இன்று பேசுவதாகக் குறிப்பிட்டுள்ள விஷயம் 'சட்ட அங்கத்தினரும், மந்திரிகளும்' என்பதாகும். நான் இப்பொழுது மந்திரிகளைப் பற்றி பேசுகிறேன். பின்னர் முன்னைய பொருளை விளக்குவேன். சென்ற தேர்தலில் அதிக அங்கத்தினரைக் கொண்டதாக வெற்றி பெற்றது சுயராஜ்யக் கட்சி. அவர்கள் பொது மக்களிடத்திலே ஓட்டு பெற்ற காலத்தில் என்ன வாக்குறுதி செய்தார்கள்? நாங்கள் அதிகார வர்க்கத்தை ஒரேயடியாய் எதிர்ப்போம். மந்திரிசபையை எந்த காரணத்தை முன்னிட்டும் ஒப்புக் கொள்ள மாட்டோம், இரட்டையாட்சியைக் கலைப்போம். சுயராஜ்யத்தை விரைவில் வாங்கித் தருவோம், என்று 'கர்ச்சித்து' உட்புகுந்தார்கள். எனவே, இவர்கட்கு மந்திரிசபையில் வேலையில்லாது போய்விட்டது' இரண்டாவதாக விளங்கிய ஜஸ்டிஸ் கட்சியார் முழு ஓட் பலமின்மையால் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். இவர்கள் எங்களுக்கு ஓட் வழங்கி பெரும்பான்மையாய் அனுப்பினால் மந்திரி சபையை ஒப்புக்கொண்டு அதனால் பார்ப்பனரல்லாதாருக்கு செய்யக்கூடிய எல்லாநலன்களையும் செய்வோம் என்று உறுதியிட்டு வெற்றி பெற்றார்கள். எஞ்சி நின்றது சில்லரை கக்ஷிகள். அவைகளிடத்தில் பேரம் பேசி சுயேச்சைக் கட்சியென்று உற்பத்தி செய்து மந்திரி சபையை நியமிக்க இரட்டையாட்சியைக் கலைக்கும் வீரர் நிறைந்த சுயராஜ்யக் கட்சி ஆதரவு தந்தது. இந்த உண்மையை அறியாத பொது மக்கள் சந்தேகங் கொண்டனர். உண்மையை வெளிப்படுத்தும்பொருட்டு ஜஸ்டிஸ் கட்சியார் நம்பிக்கையில்லாத தீர்மானங் கொண்டு வந்தனர். காங்கிரஸ்கக்ஷியார் அதை எதிர்த்து தங்கள் யோக்கியதையை வெட்ட வெளிச்சமாக்கினர். இதனால் எங்கும் அவர்கள் மீது பெரும் புகார் ஏற்பட்டது. எவரும் சுயராஜ்யக் கட்சியை இழித்துக் கூறுவாராயினர். இந்த இழிவை நிவர்த்தித்துக்கொள்ள சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட பட்டில் ஜஸ்டிஸ் கட்சியாரை ஒழிக்கவே காங்கிரஸ் மந்திரி சபையையுடைக்குந் தீர்மானத்தை நிறைவேற்றியதாகவும் அந்த வேலையை சென்னை சுயராஜ்யக் கட்சியார் செய்துமுடித்ததற்கு அவர்களைபாராட்டுவதாகவுமா ஒருதீர்மானம் நிறைவேற்றிக்கொண்டனர். ஏன் சுயேச்சை கட்சயை ஆதரிக்க வேண்டுமென்ற கேள்வி எழும்போது 'தாங்கள் அப்படிச் செய்யாதுபோயின் ஜஸ்டிஸ்கட்சியினர் மந்திரிபதவி ஒப்புக் கொள்ளுவர்' என்று சொல்லி ஏமாற்றிவந்தனர். ஜஸ்டிஸ் கட்சியினர் கூட்டங்கூட்டி ஒப்புக்கொள்ளுவதில்லையென்று உறுதிகூறினர். அதில்நம்பிக்கை இல்லையென்று காங்கிரஸ்காரர் ஏமாற்றி வந்தனர். முடிவில்கோயமுத்தூரில் ஜஸ்டிஸ்கட்சியின் மாகாண மகாநாடு கூட்டப்பட்டது. அங்கு ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமான கொள்கையையுடைய மந்திரிகளை எதிர்க்க வேண்டுமென்றும், சட்டமெம்பர் பார்ப்பனராயிருப்பதால்மந்திரிகள் தங்கள்வேலைகளை சுதந்திரமாய் செய்ய முடியவில்லையாதலாலும், பல இடையூறுகள் நேருகின்றமையாலும் மாகாண சுயாட்சிவரும்வரையில் (இரட்டையாட்சி ஒழியும் வரை) மந்திரி சபையை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியிருக்கிறது. பார்ப்பன சட்ட மெம்பர் சொன்னபடியெல்லாம் கவர்னர்நடந்தமையால் கவர்னர் மீதும்நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேறியது. ராயல் கமிஷன் சம்பந்தமான தீர்மானம் சட்டசபையில் வந்தமையால் மந்திரிகட்குள் பிளவேற்பட்டது. எனவே, ஒத்துழைப்பதாகச் சொன்ன டாக்டர் சுப்பராயன் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் சுயராஜ்யக்கட்சியார் கொண்டுவந்து தோல்வி யுற்றனர். இந்த காரணங்கொண்டு ஏனைய இரண்டு மந்திரிகளையும் கவர்னர் விலகுமாறு உத்திரவிட்டுவிட்டார். உடனே இந்த பதவிகளை ஜஸ்டிஸ் கட்சியினர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கவர்னர் வற்புறுத்தினர். தங்கள் கோயமுத்தூர் தீர்மானத்திற்கிணங்க சட்ட மெம்பர் தங்கள் கட்சியைச் சார்ந்தவராய் இருந்தாலொழிய ஒத்துழைக்கவும் முடியாதென்று கூறிவிட்டனர். இவர்கள் சட்ட மெம்பர் பதவியினால் இடையூறு விளைவதற்கு முதற் காரணமாயிருந்ததென்று சொல்லப்பட்ட இலாகாக்களை வழக்கப்படி வேறு மந்திரிகளிடம்கவர்னர் ஒப்படைத்தார். அந்த சட்டமெம்பர் பதவிக்கு நியமிக்கப்பட்டு இரண்டு நாட்கள் வேலைபார்த்த ஸ்ரீ வெங்கிட்டராம சாஸ்திரி உடனே விலக நேரிட்டது. பிறகு அரசாங்கத்திற்கு புத்தி வந்து இப்பதவியை பார்ப்பனரல்லாதாருக்கு கொடுக்க வேண்டியதாயிற்று. அதன் பேரில் தாங்கள் மந்திரி பதவி ஒப்புக்கொள்ள முடியாது என்றும் பார்ப்பனரல்லாதாருக்கு பெருந்துன்பம் விளைவித்து வந்த இந்த பதவி தம் வசப்பட்டதால் சுயேச்சைக் கட்சியினர் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு இடையூறு இல்லாத மந்திரி சபை நியமித்தால் தாங்கள் அதை எதிர்ப்பதில்லை என்று ஜஸ்டிஸ் கட்சியார் கூறினர். அது போல் மந்திரி சபையும் நியமிக்கப்பட்டது. இவைகளினின்று ஜஸ்டிஸ் கட்சியினர் நியாய நெறியினின்றும் தவறிவிட்டதாக எவராவது கூற முடியுமா? மெய்ப்பிக்க முடியுமா? காங்கிரஸ்காரர் பொறாமை கொண்டு நம்மை குட்டிக்கரணம் என்று கத்தினால் அறிவுடைய உலகம் ஒப்புக்கொள்ளுமா?

சட்ட மெம்பர் பதவிக்கு நமது கிருஷ்ணன் நாயர் அவர்கள் நியமிக்கப்பட்டவுடன் பார்ப்பனர்கள் நம்மை தேசத்துரோகம் என்று பூச்சாண்டி காட்டுகின்றனர். அவர்கள் யோக்கியதையை கவனியுங்கள். சென்ற பதினெட்டு வருடங்களாய் வழக்கமாகவோ, நிர்ப்பந்தமாகவோ சட்ட மெம்பர் பார்ப்பனரே நியமிக்கப்பட்டு வந்தனர். அந்த காலத்தில் அவர்கள் நமது சமூகத்திற்கு இழைத்த அநீதிகள் அளவற்றன. ஆறு பார்ப்பனர் அந்த பதவியிலிருந்து நம்மை தலையெடுக்க வொட்டாமல் அரசாங்கத்தார் மக்களைக் கொடுமைப் படுத்திய காலத்தில் ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி அய்யர், சிவசாமி அய்யர், சீனிவாசய்யங்கார், ராமசாமி அய்யர் முதலியவர்கள் மாப்பிள்ளை போல் அந்த பதவியில் உட்கார்ந்திருந்தனர். ஒத்துழையாமை காலத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் ஜயில் வாசம் செய்த காலத்திலே மாப்பிள்ளை போல சர். சி. பி. ராமசாமி அய்யர் அந்த பதவியை ஒப்புக்கொள்ள வில்லையா? 144-வது தடையுத்தரவை அந்தகாலத்தில் அநுஷ்டித்து

இதன்தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க



அன்னத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுங்காணே.

குடி அரசு

ஈரோடு பிரபவ ௵ பங்குனி ௴ 27 ௳

# ஏற்றுக்கொண்டோம்.

'திராவிடன்' பத்திரிகையின் நிர்வாகத்தை நாம் ஏற்றுக்கொள்ளுவதா என்கின்ற விஷயத்தைப்பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தை கேட்டிருந்தது வாசகர்களுக்குத்தெரியும். அதற்கு பதிலாக சுமார் 500 கனவான்களுக்கு மேலாகவே 'திராவிடனை' ஒப்புக்கொள்ளும் படிக்கு எழுதினதுடன் தங்கள் தங்களால் கூடுமான உதவியைச் செய்ய முன்வருவதாக வாக்குத்தத்தமும் செய்தார்கள். அதை அனுசரித்து சென்ற ஆவணி ௴ 26-ந் தேதி 'குடி அரசில்' 'சென்னைக்குச் செல்கின்றோம்' என்பதாக ஒரு தலையங்கம் எழுதி அதன் கீழ் 'திராவிடனை' நடத்துவதில் நமது கொள்கை இன்னது என்பதையும் விளக்கி யிருக்கின்றோம். அதாவது,

"திராவிடன்" கொள்கைகள் 'குடி அரசு' கொள்கைப்படியேதான் இருக்கும். "குடி அரசி"ன் கொள்கைகள் யாவரும் அறிந்திருப்பார்களென்றே நினைக்கிறோம். அதாவது:-பார்ப்பனரல்லாதாரை அழுத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த பார்ப்பனர்களுக்கு நமது நாட்டில் ஆயுதங்களாக இருக்கும் அரசியல் புரட்டையும், மதப் புரட்டையும் அடியோடு அழிப்பதுடன் பார்ப்பனியத்தையும் ஒழித்து மக்களுக்கு சுயமரியாதை உண்டாகும்படி செய்வது என்பதுதான். இதற்கு 'திராவிடன்' சொந்தக்காரர்கள் சம்மதிக்காதபோது நாம் விலகி விடுவோம் என்பது உறுதி. இது சமயம் இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ளவோ ஆதரிக்கவோ நமது நாட்டில் ஒரு தினசரியாவது ஒரு குட்டிப் பத்திரிகையாவது இல்லை. ஆனாலும் நாம் அதற்காக பயப்படவில்லை. ஏனெனில் இக்காரியங்கள் நடைபெறாமல் போனால் நமது பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு மாத்திரமல்லாமல் இந்தியாவுக்கே சுயமரியாதையும் விடுதலையும் ஒருக்காலும் ஏற்படப் போவதில்லை யென்பது நமது முடிவு. பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரும் அவர்களது பத்திரிகைகளாகிய 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளுங்கூட இக்கொள்கைகளைப் பொறுத்தவரையில் நம்மிடம் சிறிது அபிப்பிராய பேதம் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். நம்மிடம் 'திராவிடன்' ஒப்புவிக்கப்பட்டால் இக்கொள்கைகளுடன்தான் அது நடத்தப்பெறும் என்பதாக அவர்களுக்கும் இப்போதே சொல்லி விடுகிறோம். அநேக நூற்றாண்டாக அநேக இந்திய மேதாவிகளால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அரசியலை குற்றம் சொல்வதும், ஆயிரக்கணக்கான வருஷங்களாக ரிஷிகளாலும், முனிவர்களாலும், கடவுள் அவதாரங்களாலும் உண்டாக்கப்பட்டதாய்ச் சொல்லப்படும்—'மகாத்மா' காந்தியாலுங்கூட சொல்லப்படும்—மத இயலைக் குற்றம் சொல்வதும், இரத்தத்திலும், நரம்புகளிலும், எலும்புகளிலும், சதையிலும் ஊறிக்கலந்திருக்கும் இவ்விஷயங்களைக் குற்றம் சொல்லி மக்களைத் திருப்புவது என்பதும் ஒருக்காலும் சுலபமான காரியம் என்று சொல்ல முடியாது. அன்றியும் தற்போது எல்லாத் துறைகளின் ஆதிக்கத்திலும், அதிகாரத்திலும் இருக்கும் பார்ப்பனியத்தை ஒழிப்பது என்பது இவற்றையெல்லாம்விட அதிகமான கஷ்டமென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். இதற்கு ஆதாரமாக 'மகாத்மா' காந்தியினாலேயே 'பார்ப்பனிய மில்லாதவர்' என்று மதிக்கப்பட்ட ஒரு பார்ப்பனர் ஒரு சமயம் சொன்ன வார்த்தைகளைக் குறிப்பிடுகிறோம்.

"பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக அநேக பெரியவர்களாலும், சித்தர்களாலும், சமணர்களாலும், புத்தர்களாலும் எவ்வளவோ பாடுபட்டாய் விட்டது. மற்றும் மகமதிய அரசாங்கத்தாராலும் எவ்வளவோ பாடுபட்டு பார்த்தாய் விட்டது. இதனால் இவ்வளவு பேரும் தோற்றார்களே யொழிய ஒருவரும் வெற்றி பெறவில்லை. இந்த நிலையில் உன் ஒருவனுடைய முயற்சி எம்மாத்திரம்?" என்று சொல்லி, பரிகாசம் செய்தார்.

இந்த வார்த்தைகள் வாஸ்தவமாக இருந்தாலும் இருக்கலாம். அது போலவே நமது முயற்சியும் வெற்றிபெறாமல் தோல்வியும் உறலாம். ஆனாலும் ஒன்று மாத்திரம் சொல்லுவோம் என்னவெனில் இம்முயற்சிகள் வெற்றி பெறாமல் நமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் விடுதலை இல்லை என்பதை மாத்திரம் மறுபடியும் உறுதியாய்ச் சொல்லுகிறோம். எனவே நமக்கு இதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று நமக்கு பட்ட வழியில் உழைக்க வேண்டியதுதான் நமது கடமையே அல்லாமல், வெற்றி, தோல்வியைப் பற்றி முன்னமேயே முடிவு செய்து கொள்ள வேண்டியது நமது கடமை அல்ல.

எனவே நமது நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் இவ்விஷயங்களை நன்றாய் கவனிப்பதோடு மற்றொரு விஷயத்தையும் அறிய வேண்டும். அதாவது 'திராவிடனும்' 'குடி அரசு'ம் பார்ப்பனர்கள் கையில் இருக்கும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிடுங்கி பார்ப்பனரல்லாத ஜமீன்தார்களும் மிராஸ்தார்களும் வியாபாரிகளும் லேவாதேவிக்காரருமான பணக்காரர்களுக்கும் ஆங்கிலம் படித்த வக்கீல்களுக்கும் கொடுப்பதற்காக நடத்துகிறது என்று நினைப்பார்களானால் அவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள். ஏனெனில் அரசியல் விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தைவிட பணக்கார ஆதிக்கத்தைவிட வக்கீல் ஆதிக்கத்தைவிட வெள்ளைக்கார ஆதிக்கமே ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஏழைமக்களுக்கும் குடியானவர்களுக்கும் யோக்கியர்களுக்கும் அதிகமான கெடுதி இல்லாதது என்பதே நமது அபிப்பிராயம். வெள்ளைக்கார ஆதிக்கம் ஒழிவதாயிருந்தால் நேரே அது ஏழை மக்களான தொழிலாளர்கள் கைக்கு வருவதுதான் நன்மையே அல்லாமல் ஏழை மக்களுக்கு பார்ப்பனர்களும் பணக்காரர்களும் வக்கீல்களும் தர்மகர்த்தாக்களாகவும் தரகர்களாகவும் இருக்கக் கூடாது என்றே சொல்லுவோம். இந்தக் கொள்கையின் பேரில்தான் பணக்காரர்கள் இப்பத்திரிகைக்கு உதவி செய்யவேண்டும் என்பதாகவும் இப்போதே வெளிப்படையாய் சொல்லிவிடுகிறோம்.

அதுபோலவே மத இயலில் நமக்கு உதவி செய்பவர்களும் இந்து மதம் என்பதான பார்ப்பன மதத்துடன் போர்புரிந்து வெற்றி ஏற்படுமானால் சைவ சமயத்திற்கு அனுகூலமாகும் என்றோ, வைணவ சமயத்திற்கு அனுகூலமாகுமென்றோ, கிறிஸ்தவ மதத்திற்கு அனுகூலமாகுமென்றோ, மகம்மதிய மதத்திற்கு அனுகூலமாகுமென்றோ, மாத்துவ மதத்திற்கு அனுகூலமாகுமென்றோ ஒவ்வொருவரும் தன் தன் சுயமத நலத்திற்கு என்று நினைத்துக் கொண்டார்களானால் அவர்களும் ஏமாற்ற மடைவார்கள் என்பதையும் இப்போதே சொல்லி விடுகிறோம். பார்ப்பன மதம் ஒழிவதனால் உண்மையான சமரசமும் சன்மார்க்கமும் உடையதான மதம் ஏற்படவேண்டும். எல்லாமக்களுக்கும் சுயமரியாதை உணர்ச்சி தரும்படி வேண்டும்.

என்பதாகவே ஓர் அறிக்கையை வெளியிட்டு விட்டு சென்னை செல்கின்றோம். 'திராவிடனுக்கு' உதவி செய்வதாக வாக்களித்திருந்த சில கனவான்கள் இந்த அறிக்கையைப் பார்த்துக்கொண்டு தாங்கள் முற்றிலும் இந்த அறிக்கையை ஒப்புக் கொள்ளுவதாகவும் இந்த நிபந்தனையின் மீதே உதவி செய்து வருவதாகவும் வாக்குறுதி செய்து கடிதம் எழுதினார்கள். அதிலிருந்து இதுவரை ஒருவாறு நம்மால் 'திராவிடன்' கவனிக்கப்பட்டு வந்தாலும் ஏப்ரல் முதல் தேதி முதலே கணக்கு முதலிய நிர்வாகங்களும் தென்னிந்திய மகாஜன சங்கத்தை விட்டு பிரிந்து நமது வசம் ஒப்புவிக்கப்பட்டு விட்டது.

இதன் மத்தியில் 'தமிழ் நாடு' பத்திரிகையும் ஸ்ரீ வரதராஜுலுவும் 'திராவிடனை'ப் பற்றி எவ்வளவோ பொய்யும் புளுகும்—அதாவது, ராமசாமி நாயக்கர் திராவிடனுக்கு வந்தார், தமது ஜபம் செல்லவில்லை, ஓடிவிட்டார், என்பது போன்ற பல விஷயங்களை எழுதிவிட்டார், அதற்கும் பொது ஜன

...கள் ஏமாறாமல் எவ்வளவு தூரம் இம்மாதிரியான ஒரு பத்திரிகையை ஆதரிக்கக்கூடுமோ அவ்வளவுதூரம் ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

'திராவிடன்' பத்திரிகை மற்ற பத்திரிகைகளைப்போல வயிற்றுப்பிழைப்பு பத்திரிகையாகவோ வியாபாரப் பத்திரிகையாகவோ கூலிக்கு உழைக்கும் பத்திரிகையாகவோ இல்லாமல் ஒரு குறிப்பிட்ட கொள்கையை பிரசாரம் செய்யும் பத்திரிகையாக இருப்பதால் பொது மக்களின் மதிப்பைப்பெற அது கொஞ்சம் தனது நாணயத்தையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்தை முன்னிட்டு 'தமிழ்நாடு" முதலிய பத்திரிகைகளைப்போல வெளி ஆடம்பரத்திலும் விளம்பரப் புரட்டிலும் பொது மக்களிடம் பலம் பதிக்கச் செய்யும் தந்திரங்களையும் கையாடாமல் உள்ளது உள்ளபடி நடந்து வந்தால் "திராவிடன்" அதனுடைய நிலைக்கு தகுந்த விளம்பர ஆதரவு முதலியவைகள் பெற வில்லை. ஆனபோதிலும் அதற்காகவேண்டி அது தன் கொள்கையையோ நாணயத்தில் உள்ள கவலையையோ ஒரு சிறிதும் மாற்றிக்கொள்ளப் போவதில்லை என்பதாக உறுதி கூறுவோம்.

நிற்க "திராவிடன்" நமக்கு சாஸ்வதமான சாதனமல்லவென்பதையும் தற்காலம் நமது தொண்டிற்காக உபயோகித்துக் கொள்ளும் ஒரு கருவி சாதனமேயாகும் என்பதையும் "குடி அரசே" நமது தொண்டிற்கு சாஸ்வதமான மூல சாதனம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இது சமயம் பார்ப்பனர்களுக்கு பல வழிகளிலும் அவர்களது யோக்கியதை வெளியாகி அவர்களது செல்வாக்கு முன்னேறுவது தடைப்பட்டு இருந்தாலும் இனியும் அவர்களால் பொது மக்கள் ஏமாறக்கூடிய நிலைமை இருப்பதற்குக் காரணம் அவர்களுடையவும் அவர்களது கூலிகளாகவும் வால்பிடித்து பிழைப்பவர்களாகவும் உள்ள சில பார்ப்பனரல்லாதாருடைய பத்திரிகைகளினுடையவும் பிரசாரமுமே தவிர வேறல்ல. இது சமயம் நமது நாட்டிலுள்ள சற்றேறக்குறைய எல்லாப் பத்திரிகைகளும் பார்ப்பனத் தலைமையின் கீழ்தான் நடத்தப் படுகின்றன. பார்ப்பனர்களேதான் கொள்கைகளை உற்பத்தி செய்கிறார்கள். அதுவும் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு கெடுதி பயக்கத்தக்கதாகவே பார்த்து கண்டு பிடிக்கின்றார்கள். அதை மீற யாருக்கும் தைரிய மில்லை. ஏனெனில் அவர்களை விரோதித்துக் கொண்டால் எந்த பத்திரிகையையும் நடத்தமுடியாதபடி செய்யத் தகுந்த அளவு செல்வாக்கு பார்ப்பனர்களுக்கு இருக்கின்றது. எனவே பார்ப்பன ஆதிக்கம் இந்தப் பத்திரிகைகளின் பிரசாரத்தாலேயே நிலை பெற்று வருவதால் நமக்கும் தக்க பத்திரிகை உதவி வேண்டும். பார்ப்பனர்களை எதிர்ப்பதால் பார்ப்பனர்களின் எதிர்ப்புக்கு தலை கொடுக்கத்தக்க அளவில் நஷ்டப்படவும் கஷ்டப்படவும் தயாராயிருக்கவேண்டும். போதாக்குறைக்கு ஸ்ரீமதி பெசண்ட்டம்மையாரும் சர். சி. பி. ராமசாமி அய்யரும் ஒரு தமிழ் பத்திரிகையை தினசரியாகவோ வாரப்பதிப்பாகவோ ஆரம்பிப்பதாக ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதற்காக முன் ஒரு காலத்தில் "ஒரு தேசியத் தமிழ் பத்திரிகையின்" ஆசிரியராயிருந்த பார்ப்பனரல்லாத ஒரு கனவானை ஆசிரியராக வரவேண்டுமாய் கூப்பிட்டும் அவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் இனியும் தக்க பார்ப்பனரல்லாத ஆசிரியரையே தேடித்திரிகிறார்கள். "சுதேசமித்திரன்" "சுயராஜ்யா" போன்றவைகளின் பிரசாரமும் "தமிழ்நாடு" போன்றவைகளின் கூலி வயிற்றுப் பிழைப்பு முதலிய சுயநல சூழ்ச்சிப் பிரசாரமும் நமது முன்னேற்றத்திற்கு எவ்வளவு தூரம் கெடுதி செய்து வந்திருக்கின்றன என்பதும் ஸ்ரீமதி பெசண்டம்மை ஸ்ரீ ராமசாமி அய்யர் கம்பெனியாரின் புதியபத்திரிகையும் வெளிவந்தால் இனியும் எவ்வளவு தொல்லை ஏற்படும் என்பதையும் யோசித்துப் பார்ப்பவர்களுக்கு 'திராவிடனின்' அவசியமும் அருமையும் தெரியாமல் போகாது. ஆதலால் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையிலும் முன்னேற்றத்திலும் அபிமானமும் கருணையும் உள்ள கனவான்கள் 'திராவிடனை' முன்னிலும் அதிகமாக ஆதரிக்க முன்வரவேண்டுமாக வேண்டிக்கொள்ளுகிறோம். அதிலும் வரும் தமிழ் வருஷப் பிறப்பு தினத்தன்று கூடுமானவரை திராவிடனுக்கு புதிய சந்தாதாரர்களை சேர்க்கும் தொண்டைச் செய்து அன்றைய தினம் தக்க அளவு புதிய சந்தாதாரர்களையாவது சேர்த்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## தர்மத்தின் நிலை.

நாட்டுக்கோட்டை நகரத்தாருள் முக்கியஸ்தரான ஸ்ரீமான் சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் 20-லட்ச ரூபாய் கல்விக்காக தர்மம் செய்திருப்பதாக அறிகிறோம். ஆனால் அத்தருமம் எவ்வளவு தூரம் நாட்டிற்கோ அல்லது பார்ப்பனரல்லாத மக்களுக்கோ உபயோகப்படுமென்பது அறியக்கூடாததாகவே இருக்கின்றது. தவிர பார்ப்பனர் எந்த ஒரு சிறிய தர்மம் செய்தாலும் அது தங்கள் இனத்தாருக்குத்தவிர வேறு யாருக்கும் உபயோகப்படாதபடியே செய்வது வழக்கம். ஆனால் பார்ப்பனரல்லாதாரில் பெரிதும் குறிப்பாய் நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்யும் தருமங்கள் ஒவ்வொன்றும் பார்ப்பனரைப்போல் தமது சமூகத்தாராகிய பார்ப்பனரல்லாதாருக்கே உபயோகப்படும்படி செய்யாவிட்டாலும் முழுதும் பார்ப்பனர்களுக்கே உபயோகப்படும்படி செய்வித்த வழக்கமாகி வருகிறது. கோவில்கள், வேதபாடசாலைகள், சத்திரங்கள், அறுபதாங்கல்யாணங்கள் முதலியவைகளில் செலவிடும்பணங்கள் போகும்வழிகளை அறிந்தவர்கள்தான் உண்மையை உணரலாம். அதோடு கூடவே இப்படிப்பார்ப்பனருக்கே பெரிதும் தருமஞ்செய்த பல நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஜோடஸ்வரர்களாயிருந்து பாப்பராகிவிட்டதையும் அறியலாம். இப்படி இவர்கள் பாப்பர்களாவதில் யாரும் வருத்தப்பட நியாயமிருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில் இவர்கள் எந்த சமூகத்தாரிடம் இருந்து நல்வழியிலேயோ கெட்ட வழியிலேயோ இப்படி கோடிக்கணக்கான பணம் சம்பாதித்தார்களோ அந்த சமூகத்தாரை துரோகம் செய்து பார்ப்பனரல்லாத மக்களை வஞ்சித்துப் பிழைக்கும் ஒரு சமூகத்தாருக்கே அதை செலவு செய்வதானால் அப்படியவர்கள் தண்டனை அடையவேண்டியது தர்மமா அல்லவா? ஆதலால் நமது சர். அண்ணாமலை செட்டியார் செய்திருக்கும் இந்த 20-லட்ச ரூபாய் தர்மமானது மேல்கண்ட குற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கத்தக்க மாதிரியில் தமது தர்மப்பணங்கள் முழுதும் உபயோகப்படும்படியாக தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று சர். அண்ணாமலை செட்டியார் நன்மையையும், பார்ப்பனரல்லாதார் நன்மையையும், நமது நாட்டின் நன்மையையும் உத்தேசித்து வேண்டிக்கொள்ளுகிறோம்.

## துருக்கியில் மாறுதல்.

துருக்கி ராஜாங்கத்தில் அரசாங்க விஷயத்தில் மதசம்பந்தமே இருக்கக்கூடாது என்று பலமான மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்பதாக பத்திரிகைகளில் காணப்படுகின்றன. இதை நாம் மனமார வரவேற்பதுடன் இது உலக விடுதலைக்கு ஒரு பெரிய அறிகுறி என்றே சொல்லுவோம். துருக்கி ராஜாங்கம் மதத்திற்காகவே இருப்பதாக சொல்லப்படுவது. கிலாபத்து இயக்கமும் அதற்காகவே ஏற்பட்டது. அப்படிப்பட்ட அரசாங்கம் மதசம்பந்தத்தை நீக்கி-மனித தர்மத்தை ஆதாரமாக வைத்து-அரசாட்சிபுரிய ஏற்பட்டால் இன்றைய தினமே நாம் துருக்கிப்பிரஜையாக இருக்க பதிவு செய்துகொள்ளத் தயாராயிருக்கிறோம்

### ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர்

ஸ்ரீமான் நாயக்கர் மதுரை, திருச்சி, சென்னை முதலிய இடங்களுக்குப் போய்விட்டு 7ந் தேதி சனிக்கிழமை ஈரோடு வந்தார். மறுபடியும் அன்று இரவே வடஆற்காடு ஜில்லா ஆம்பலூருக்கு நாயக்கர் ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளை, கண்ணப்பர் முதலியவர்களோடு செல்லுகிறார்கள்.

### ராசிபுரம்.

15—4—28 தேதியில் ஈரோடு திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் ராசிபுரத்தில் "சுயமரியாதை" என்பதைப் பற்றி பேசுவார்,

கொ. பழனியப்ப செட்டியார்,

### புஸ்தகம் கிடைக்குமிடம்.

பல நண்பர்கள் மனு ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி முதலிய புஸ்தகங்கள் எங்கே கிடைக்குமென்று நமக்கு எழுதிக்கேட்கிறார்கள். மேற்படி புஸ்தகங்கள் "N. தண்டபாணி பிள்ளை, தபால் பெட்டி 292, சைனா பஜார் 292 மதராஸ்" என்ற விலாசத்தாருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

11ம் பக்கத் தொடர்ச்சி.

வந்த அக்கிரமத்தை ஒப்புக்கொள்ளவில்லையா. பாலக்காடு தெருவில் நடக்கும் தீர்மானத்துக்கு அக்கிரம வியாக்கியானம் செய்யவில்லையா. இப்பொழுது சுயமரியாதைக்காக விலகியதாக புழுகும் அதே ஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரி அவர்கள் அந்த காலத்தில் அட்வகேட் ஜெனரல் பதவியினின்றும் ஏன் இராஜீனாமா செய்யவில்லை? தேசாபிமானிகட்கு அப்பொழுது அவமானம் எங்கு சென்றிருந்தது என்று கேட்கின்றேன். சட்ட மெம்பர் பதவிக்கு இன்ன இலாக்காக்களைக் கொடுக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டில் சட்டம் கிடையாது. அப்படியிருக்க ஜனாப் உஸ்மான் என்ற மகமதிய கனவானுக்கு புதிதாகச் சில இலாக்காக்களை மாற்றியவுடன் ஏன் இவ்வளவு பொறாமைப் படவேண்டும். இப்பொழுது இவ்வளவு பெருஞ்சப்தம் போடும் பார்ப்பனர்கள் அக்காலத்தில் நமக்குச் செய்த தீங்குகளை ஒருவாறு எண்ணிப்பார்க்கட்டும். அவர்களால் நீதி இலாக்காவில் நமக்கு நேர்ந்த துன்பங்கள் சொல்லிமுடியாது. சென்னை ஹைகோர்டில் ஓர் மகமதிய கனவான் காலியான அந்த ஸ்தானத்திற்கு ஒரு மகமதியரை நியமிக்க சட்ட சபை தீர்மானம் செய்து கூட ஒரு ஐயங்கார் நியமிக்கப்பட்டார். அந்த பதவியிலிருக்க வேறொரு மகமதியருக்கு உரிமையில்லையா? பார்ப்பன சட்ட மெம்பர்கள் மகமதியர்களுக்கோ மற்றவர்களுக்கோ வேலைகொடுக்கா தொழிந்தாலும் கவலையில்லை. லாயக்கில்லை என்று நம்மை சொன்னால் இதை யார் பொறுத்துக்கொள்ள முடியும். இதைவிட வேறு என்ன அயோக்கியத்தனம் அவர்கள் செய்யவேண்டும் என்று யோசித்துப்பாருங்கள்.

நாம் உத்தியோகம் பெறுவதை உத்தியோக வேட்டையென்றும், தேசத்துரோகமென்றும் சொல்லிக்கொண்டு தாங்களே எல்லா உத்தியோகங்களிலும் இருக்க ஆசைப்படுவது 'சரீரம் அநித்தியம்:...உன்சொத்தை எனக்கு கொடுத்து விடு' என்பதைப்போன்ற அயோக்கியத்தனம் அல்லவாவென்று கேட்கின்றேன். இப்பொழுது ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்கில அடிமைக் கலாசாலைகளில் படிக்கின்றனர். படிக்கின்றவர்களெல்லாம் உத்தியோக பைத்தியம் பிடித்தலைவதும், தொழிலில்லாது பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் வருந்துவதும் நாம் கண்ணால் நாடோறும் பார்க்கின்ற காட்சிகளாகும்: இதற்கு முதற்காரணமாகயிருந்தது காங்கிரஸ். காங்கிரஸ் சபைதான் உத்தியோகங்களைப் பெருக்க வேண்டுமென்று மன்றாடியது. அதுதான் சுயராஜ்யமென்று இப்போதும் கருதி வருகிறது. உத்தியோகம் பார்ப்பது தேசசேவை என்று பார்ப்பனர்கள் கருதி படித்து விட்டு எவ்வளவோ இழிதொழில்களைச் செய்து பெரிய பெரிய உத்தியோகங்களை எல்லாம் பெற்று நமக்குத்தீங்கிழைத்து வருகிறார்கள். நம் நாட்டில் ஒவ்வொரு மனிதனுடைய ஜாதகமும் உத்தியோகம் கிடைக்குமா கிடைக்காதா என்பதைப் பற்றித்தான் குறிப்பிடுகிறது, ஒவ்வொரு நாளும் எத்தனையோ பள்ளிக்கூடங்களை எதற்காக புதுப்பித்து வருகின்றார்கள்? உத்தியோகங்கட்கு ஆட்களைத் திரட்டுவதற்காகவா அல்லவா? பள்ளிக்கூடங்களில் எல்லோருடைய பிள்ளைகளும் படிக்கின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் யார்? பார்ப்பனர்கள் என்பதை எவர் மறுக்கமுடியும்? அவர்கள் எதற்காக படிக்கிறார்கள்? சங்கராச்சாரியாகவா? ஆரியர்களாகவா? மாதம் மூன்று மழை பெய்யச்செய்யவா? ஆற்றோரத்தில் உட்கார்ந்து கொண்டு மூக்கைப் பிடித்துக்கொள்ளவா? இல்லவே இல்லை. அது உத்தியோகம் பெறுவதற்கென்பதை விளையாட்டுப்பிள்ளையும் அறியும். உத்தியோகம் பெறுவதற்கென்று படிக்கும் அவர்களெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாருக்கா பிறந்தார்கள்? ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டையாடுகிறதென்பதற்கு பொருள் தான் என்ன?

## சைமன் கமிஷன்.

சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கவேண்டுமென்ற காங்கிரஸ் அது நாட்டைவிட்டு செல்லுதவற்கு முன்னமேயே ஒரு சுயராஜ்யத் திட்டம் தயாரிக்கனுப்பியிருக்கிறது. அந்த திட்டப்படி உத்தியோகங்கள் ஒன்றுக்கு பத்தாக ஆவதைத்தவிர வேறு பயன் பெற முடியாது. 130 அங்கத்தினர்கள் உள்ள சென்னை சட்ட சபைக்கு 400 அங்கத்தினர்கள் வேண்டுமாம். 150 பேர் உள்ள டெல்லி சட்ட சபைக்கு 700 அங்கத்தினர்களாக்கவேண்டுமாம். இதுவா சைமன் கமிஷன் பகிஷ்காரம்? மாஜி காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் திட்டம் தயாரித்து புத்தக வடிவில் வெளியிட்டு 8 அணாவுக்கு கடைதோறும் விற்கிறது. ஸ்ரீவிஜயராகவாச்சாரியார் ஸ்ரீ அனிபெசண்டு ஸ்ரீ நேரு முதலியவர்கள் திட்டத்தை பார்லிமெண்டுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். தற்கால காங்கிரஸ் தலைவர் டாக்டர் அன்சாரி சர்வ கட்சி மகாநாடு கூட்டி சைமன் கமிஷனிடம் திட்டத்தை அனுப்பப் போகிறார். விடிவேகிற சமயத்தில் பிடுங்கினது லாபம் என்பதாக வீட்டிலுள்ள சாமான்களை வேடிக்கை பார்க்க வந்தவர் பங்கிட்டுக் கொள்வதுபோல் காங்கிரஸ்காரர்கள் நடந்துவருவார்களானால் அவர்களுடன் ஜஸ்டிஸ் கட்சியார் எப்படி ஒத்துழைக்க முடியும்? தங்கள் பரம்பரை வழக்கம்போல ஏமாந்தவன் தொடையில் கயிறு திரிப்பது என்ற தத்துவத்தை பார்ப்பனர்கள் கையாண்டுவருகிறார்கள். இந்த நிலையில் சுயராஜ்யம் என்பது எதுவாயிருக்க முடியும்? இந்த கேள்விகளுக்கு எந்த காங்கிரஸ்காரராவது பார்ப்பனராவது சமாதானம் சொல்லுகிறார்களா? சொல்லுவதேயில்லை இதற்குக்காரணம், நம்மைப்பொருட்படுத்தவில்லை என்று அவர்கள் சொல்லலாம். நாம் உத்தியோகம் ஒப்புக்கொள்ளுவதை மட்டும் ஏன் அவர்கள் பொருட்படுத்தி குலைத்துக்கொண்டிருக்க வேண்டும்? சட்ட மெம்பர் வேலையை நாம் ஒப்புக்கொண்டதால் உண்டாகும் தீமையையாராவது சொன்னார்களா? உலகத்தாரெல்லாம் பைத்தியக்காரர்கள் என்று எண்ணி தேசத்துரோகம் என்பதன் மூலமாக அவர்களுடைய பொறாமைச் செறிவைக் காண்பித்து வருகிறார்கள். இவைகளிலிருந்து உத்தியோகம் ஏற்பது தேசத்துரோகமல்லவென்றும், அதுதான் தேசத்தொண்டு, அதுதான் சுயராஜ்யம் என்றும் பார்ப்பனர்கள் கருதி வேலை செய்து வரும் உண்மையை நாம் ஒவ்வொருவரும் அறிந்து நன்னிலையடைவோமாக.

என்று மிக விளக்கிக் கூறியமர்ந்தார்கள். பின்னர் தலைவர் அவர்கள் திரு எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் சரித்திரத்தை சுருங்கக் கூறி பின் கண்ட தீர்மானத்தை பிரேரேபித்து எழுந்து நின்று நிறைவேற்றுமாறு வேண்டினார்கள். தீர்மானம்: 1. திருச்சிராப்பள்ளியைச்சார்ந்த நம் மக்கள் கூடிய இப்பொதுக் கூட்டம் மதுரை உத்தமபாளையம் ஜமீன்தாரரும் பிராமணரல்லாதார் தலைவருமான திரு. எம். டி. சுப்ரமணிய முதலியார் அவர்கள் இறந்ததை குறித்து மிகுதியும் வருந்துவதோடு அவர்கள் குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. இம்மாபெருங்கூட்டம் சென்னை கவர்ன்மெண்டின் சட்ட அங்கத்தினராக திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களை மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியார் அவர்களும் கவர்னர் அவர்களும் தேர்ந்தெடுத்தமை குறித்து மகிழ்ச்சிப் பெருக்கடைவதோடு அவர்களுக்கு வந்தனம் கூறுகிறது.

3. திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர் அவர்களை மலையாளக்குடி வார மசோதாவை சட்டமாக்குவதற்கு வேண்டிய உதவி யளிக்குமாறு இக்கூட்டத்தார் வேண்டுகின்றனர்.

தலைவர் சிறிது நேரம் முடிவுரை கூறிய பின்னர் வந்தனம் கூறப்பெற்று கூட்டம் கலைந்தது. திரு மிகு நாயக்கர் அவர்களும் நகர முக்கிய தலைவர்களும் 'சிவாஜி' காரியாலயத்தில் கூடி மகாநாட்டை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளைப்பற்றி யோசித்தனர். முதல் நாள் 6 வது பார்ப்பனரல்லாதார் மகாநாட்டையும் இரண்டாம் நாள் சுயமரியாதை மகாநாட்டையும் நடத்துவதே நலமென்று திருமிகு நாயக்கரவர்கள் அபிப்பிராயபட்டார்கள். இறுதியாக கதர் இலாகாவைப்பற்றி பேசப்பட்டது. அங்கு பார்ப்பனரல்லாதாருக்கு இழைத்து வரும் அநீதிகளை ஒழிக்குமாறு காந்தியடிகட்கு எழுத வேண்டுமென்றும் அவர்கள் இணங்காதொழிவரேல் ஆங்காங்கு சுயமரியாதைக் கதர்க்கடைகளை வைத்து அவைகட்கு சத்தியாக்கிரக கமிட்டியாரே நற்சாட்சி பத்திரம் வழங்கி சொந்த வியாபாரிகளால் விற்கப்பெறும் கதர் துணிகளை மட்டும் வாங்குமாறு பொது மக்களிடையே பிரசாரம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. இரவு 11-மணி வண்டிக்கு திரு நாயக்கர் அவர்கள் ஈரோட்டுக்குப் புறப்பட்டு விட்டார்.

---

**விழிமின் எழுமின்**
**பார்ப்பனீயத்தை ஒழிமின்**

தமிழ்நாட்டுப் பெரியாராகிய காலம் சென்ற உத்தமபாளையம்

## திருவாளர்

## M. T. சுப்பிரமணிய முதலியா ரவர்களின்

பிரிவாற்றுமைக்கு
மதுரை, தென்னிந்திய நலவுரிமை
கூட்டுறவு சங்கத்தார் வருந்தி வெளியிட்ட.

# இரங்கற்பாக்கள்.

நாற்றிசையும் புகழுமெழி லுத்தமபா ளையமெனுநன் னகரில் வந்தோன்
சாற்றரிய கீர்த்தியுறு நாயக்க மன்னரர சாட்சி தன்னில்
ஏற்றமுறு மந்திரியா முயர் பதவி வகித்தவரெல் லாம் போற்றுந்
தோற்றமுறு மரியநா யகக்குரிசில் வழியில்வந்த தோன்றலாவான்.

மண்டலத்தோர் புகழ்தொண்டை மண்டலவே ளாண்மரபின் மன்ன னென்ன
எண்டிசையு மிறைஞ்சிடு சீர்த் தியாகரா சக்குரிசி லென்னுந்தூயோன்
பண்டுபுரி தவமதனா லுதித்திடுசுப் பிரமணியப் பைம்பொற் குன்றைத்
தண்டமிழ்நாட் டினிலுரைகற் பகத்தருவை யிங்கிழக்கத் தகுமோ அந்தோ!

உத்தமபா ளையப்பெரிய னெனவுரைக்கப் பலவளமு மோங்குந்தொன்மை
முத்தமிழ்மா மதுரையெனு மிப்பதியே யுறைபதியாய் முறைபி னுற்றோன்
எத்திசையுந் தன்பெயரை நாட்டினோ னிந்தியா வெனுமிந் நாட்டைச்
சித்தமுட னாளும்ஐந் தாஞ் ஜார்ஜிறைவன் முடிபுனைந்த திருநாள் காண்பான்.

வாவிடுத்த திருமுகங்கண் டன்புடனே லண்டனகர் மதிக்கச் சென்றோன்
திரமிடத்து மாங்கிலத்தும் வல்லோனற் குணங்களெலாந் திகழப் பெற்றோன்
உரமடுத்தார்க் குபகாரி மதுரைவிப சாயசங்கத் தூடனிங் காரும்
பரவடுத்த தென்னிந்திய நலவுரிமைக் கூட்டுறவு பரவு சங்கம்,

கனிதொண்டை மண்டலவே ளாளர்சங்கம் வேளாளர் கல்விச் சங்கம்
அணிசைவ சித்தாந்த சபைமுதலாம் பலசபைகட் கதிப னானோன்
மணிகொண்ட கடற்புவியிற் பார்ப்பனரல் லார்க்குநல வாழ்வு தந்தோன்
பணிகொண்ட பணிப்பரமன் பத்திமையா னுலகுநன்மை பயக்க நின்றோன்,

தலைசிறந்து வீற்றிருந்த தலைவனிந்து மததருமக் கழகத்தேறுஞ் சட்டம்
நிலைசிறக்க வுதவிசெய்தோன் சாதிவேற் றுமைநீக்கு நெறிமேற் கொண்டோன்
உலைவுறுதாழ்ந் தோருயர்ந்தோ ரெனும்பேதஞ் சிறிதுமிலா துடனுண் டோனிவ்
விலையுறுமா மணியனையான் றனைப்பிரித்த தந்தோவெவ் வினையிங்கம்மா.

சென்னைநிரு வாகசங்கத் தொருவனெனத் திகழ்ராஜத் திருப்பேர் பூண்டோன்
றன்னைமக னெனப்பயந்தோற் கிளவலென வந்துதித்த தரும சீலன்
அன்னையெனப் பலவுயிரை யாதரித்த பெருங்கருணை யாழி யிண்டு
முன்னைவினைப் பயன்குறுகப் புவிதுறந்தா னிதற்கிரங்கார் மொழியின் யாரே.

எத்தனையோ மாணவர்க்குக் கல்லூரிச் சம்பளமு மின்பால் பெய்த
முத்தனைய மூராலுந்தத் தபசரித்துந் தாழ்ந்தோரின் முன்னேற் றங்கட்
கொத்துழைத்தும் பலநன்மை யுதவியவிப் பெருந்தகையை யுலகி னீத்தோம்
அத்தனருளிருந்தவா றென்னேயிப் பிரிவெதுகொண் டாற்றுவோமே.

இவ்வுலகப் பற்றொழித்துப் பசுபதிதா ளினிற்கலந்த வினையிலாதான்
எவ்வுலகும் போற்றுமான் வடிவாகி யின்னுநமக் கிதமே செய்க
தெவ்வகற்று மிவன் பிரிவிங் கெவ்வெவர்க்குந் துயர்தருமென் செய்வோ மிவ்வேள்
எவ்வமிலாப் புகழுடம்பு போற்றி மனத்தா றுதலின் செய்து வோமே.

பூதவுடம் பினைநீத்துப் புகழுடம்பு கொண்டிடுமிப் புனிதன் செல்வ
மேதகுசீர்க் குடும்பத்தார்க் கெமதனுதா பத்தை யிவண் விரித்தோ மென்றும்
ஓதருமிப் புகழினன்போ லக்குடும்ப நல்லோரு முலக நன்மை
ஆதரித்தி னுடன்புரிந்திக் பெரியோனைப் பிரிதுயர மாற்று வாரே.

## எனது
## நன்றியறிவிப்பு.

நான் "குடி அரசு" பத்திரிகைக்கு சந்தா சேர்க்கும் விஷயமாய் மலேயா நாடு சென்றிருந்த போது ஆங்காங்கே கோலாலம்பூர், மைடான் டெல்லி, சுங்கப்பட்டாணி பாரபந்தர், கோல கஞ்சார், ஈபோ, டெலிக ஆன்சன், பீடோர், தப்பா, காஜாங், கோலப்பிலா, போர்டிக்சன், சிரம்பான், தம்பின் மலக்கா, மூவார், வதுப்பஹரார், ஜோகூர்பார் சிங்கப்பூர் முதலிய இடங்களில் நண்பர்கள் செய்த உபசரிப்பும் உதவியும் அளவிட்டு சொல்லுந்தரத்ததல்ல. அதிலும் மலேயா நாட்டில் குடியேறியிருக்கும் பார்ப்பனர்களும் பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களிடமிருந்து கூலி பெற்றுப் பிழைக்கும் கோடாறி காம்புகளும் இந்தியாவிலிருந்து நமது முயற்சிக்கு கெடுதி செய்யவேண்டுமென்றே வயிற்றுப் பிழைப்பு தேச பக்தர்களால் அனுப்பப்பட்ட ஆசாமிகளும் செய்த கொடுமைகளை லக்ஷியம் செய்யாது நான் அங்கிருந்த சுமார் 4, 5 மாத காலம் என்னுடனிருந்து எமக்கு வேண்டிய சகல உதவிகளுஞ்செய்து எனது கருத்துக்கு அனுகூலமாக இருந்த கீழ்க்கண்ட பெரியார்களுக்கும் மற்றோருக்கும் எனது மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

தங்கள் அன்பன்,
ஈ. வெ. கிருஷ்ணசாமி

நண்பர்களின் ஜாபிதா வருமாறு:—

திருவாளர்கள்

கோலாலம்பூர்

என். வி. விஸ்வலிங்கம் பிள்ளை அவர்கள், மூ. பழ. பழனியப்ப செட்டியாரவர்கள், பி. என். கே. ராமச்சந்திர நாயுடு அவர்கள், எஸ். பொன்னையா அவர்கள், எம். சின்னையா அவர்கள், சி. வி. துரைசாமி பிள்ளையவர்கள், தம்பிராஜா அவர்கள், பொன்னுதுரையவர்கள், வடிவேலு பிள்ளையவர்கள். M. R. சுப்பையா அவர்கள் பினங்

அருணாசலம் செட்டியாரவர்கள், ஜெயராமசெட்டியாரவர்கள், ரா. ம. நாகப்பசெட்டியாரவர்கள், K. V. ராமசாமி செட்டியார்.

மைடான் டெல்லி

பெரி. பெரியய்யா அவர்கள், முருகப்ப செட்டியாரவர்கள், சோகுந்தரம் செட்டியாரவர்கள்.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

எத்தனை நாளைக்கு அப்படிச் செய்வார்கள்? பிற்பகல் போகும் போது காலைப்பிடித்துக் கொண்டு மறியல் செய்தால் அவர்களுடைய உங்கள் கஷ்டத்தையுணர்ந்து நடப்பார்கள். நீங்கள் ஒற்றுமையாயிருந்து இயல்பானமுறைகளில் அதிகாரிகளுக்கு தூதுக்கூட்டத்தை அனுப்பி உங்கள் குறைகளைநிவர்த்திசெய்து கொள்ள முயல வேண்டும் எனக்கூறினர்.

சமரசமேற்பட்டது.

இன்று பிற்பகல் தமிழ்நாடு ஆபீசில் சமரசமேற்பட்டு சில கம்பாசிடர்கள் வேலைக்குச் சென்றதாகத் தெரிகிறது. 'திராவிடன்'

சங்கப்பட்டாணி

தேவராய செட்டியாரவர்கள்

கிட்டா

காசி செட்டியாரவர்கள், தைபிங் மு. அ. சோமசுந்தரம் பிள்ளை, பெரியா பிள்ளை அவர்கள், டாக்டர் சின்னாப்ப பிள்ளையவர்கள், கோ அண்ணாமலை நாயுடுகாரு.

பாடாங்ரா

அப்பாசாமி நாயுடுவர்கள்,

கோலகஞ்சார

ராஜகோபால நாயுடு அவர்கள்,

ஈபோ

கோவிந்தராஜுலு நாயுடுவர்கள்; கோவிந்தசாமி பிள்ளையவர்கள், ராமசாமி வைத்தியர் அவர்கள், தனக்கோடி வைத்தியரவர்கள்.

டேலிக்கான்சன்

உலகநாதம் பிள்ளையவர்கள்.

பீடோர்

கிருஷ்ணசாமி அவர்கள்

தாப்பா

சுப்பய்யா பிள்ளையவர்கள்

காஜாங்

நாராயணசாமி நாயுடுவர்கள்

கோலப்பிலா

மருது பிள்ளையவர்கள்

போர்டிக்சன்

தாமோதரம் பிள்ளையவர்கள், கொமாப்ப செட்டியாரவர்கள், தியாகராஜா அவர்கள், ஆறுமுகம் பிள்ளையவர்கள்.

சிரம்பான்

முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள்' சரோஜினி வினைப்புச் சொந்தக்காரர், பாலய்யம் நாயுடுகாரு. தம்பின்

சடகோப நாயுடுவர்கள், முத்துகிருஷ்ண நாயுடுவர்கள். மலாகா

ராஜகோபால நாயுடு அவர்கள், ஜகநாத நாயுடு அவர்கள். மூவார்

ஆறுமுகம் பிள்ளையவர்கள், சீனிவாச பிள்ளையவர்கள், முத்தையா பிள்ளையவர்கள், இரத்தினம் பிள்ளையவர்கள்.

வத்துப்பஹார்

சோமசுந்தரம் பிள்ளையவர்கள், மாணிக்கம் பிள்ளையவர்கள்.

ஜோஹூர்பார்

தங்கள் பெயர்களை வெளிப்படுத்தவேண்டாமென்ற இரு உண்மைச் சுயமரியாதைக்கு உழைக்கும் நண்பர்கள்.

சிங்கப்பூர்

ஜி. எஸ். சாரங்கபாணி நாயுடுவர்கள், கோவிந்தசாமி அவர்கள், வாத்தியாரவர்கள், தமோதரம் பிள்ளையவர்கள், சு. ப. சுப்பைய்ய செட்டியாரவர்கள்.

## மான்தலே நிருபரின் கடிதம்.

கனம் "குடி அரசு" பத்திராதிபருக்கு.

ஐயா,

நான் சென்னையிலிருந்து பர்மாவிற்கு வந்து 4½ வருஷங்களாகின்றது அதில் மான்தலே வந்து 1 வருஷம் 8 மாதமாகிறது இரங்கூனில் 2 வருஷம் 4 மாதம் இருந்தேன். ஈஞ்சான் என்னுமிடத்தில் 6 மாதம் இருந்தேன். இந்த இடங்களிலெல்லாம் நம்மவர்களே அதிகமாகஇருக்கின்றார்கள். பார்ப்பனர்கள் சொற்பந்தான். ஆனால் பார்ப்பனர்களுடைய புத்தி இவ்விடம் காண்பிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒவ்வொரு சபையிலும் பார்ப்பனர்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அதிகமாக ஆக நமக்கும் பர்மியர்களுக்கும் கட்டாயம் விரோதமே உண்டாகும். காரணம் நமது இந்தியாவில் இவர்கள் கவர்ன்மெண்டாரிடம் சேர்ந்து குடிகளுக்கு எவ்வளவு தீங்கு விளைத்தார்களோ, அவ்வளவு தீங்குகள் இவ்விடமும் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

உதாரணமாக மாண்தலேயில் இரண்டு இந்து கோவில்கள் இருக்கின்றன. ஒன்று சுப்பிரமணியர் பிள்ளையார் கோவில் மற்றொன்று கிருஷ்ணன் கோவில் இக்கோவில்கள் பார்ப்பனரல்லாதார் அதிலும் முதலியார்களால் கட்டப்பட்டவை. சமீபமாக சில பார்ப்பனர்கள் இவ்விடம் குடியேறினவர்கள் மாதம் 4 அணு சந்தாதாரர்களாக இக்கோவில் கமிட்டியில் சேர்ந்திருக்கிறார்கள். சமீபத்தில் கூடிய எலக்ஷனில் நம்மவர்களுக்குள் இப்பார்ப்பனர்கள் பிளவை உண்டாக்கிவிட்டார்கள். ஆனால் கடைசியாக 14 வருஷமாக செக்கிரெடரி வேலை பார்த்து வந்த சுப்பராய முதலியார் அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடைசியாக பார்ப்பனர்கள் இஞ்சி தின்ற குரங்கைப் போல விழித்துவிட்டார்கள். இவைகளிலெல்லாம் நம்மவர்கள் சரியாக இருந்தால் பார்ப்பனர்கள் நம்மை என்ன செய்ய முடியும். இன்னம் என்றைக்குத்தான் நம்மக்கள் கண் விழிப்பார்களோ தெரியவில்லை,

## குரு பூஜை.

அன்புமிக்க யெனது தமிழ் சகோதர சகோதரிகளே!

சன்னிசரபம் கவிச்சக்ரவர்த்தி, ஸ்ரீலஸ்ரீ உரிமலைப்பேட்டை, அ. முத்துச்சாமிக்கவிராயர் அவர்களின் குரு பூஜை, விபவ௵ சித்திரை௴ 13௳ (25—4—28)ல் சென்னையை அடுத்த திருவொற்றியூரில் நடக்கப்போவதால் நமது தமிழ் நாட்டிற்கு அரிய தமிழ்க்கவிகளை தந்துதவிய உத்தமபெரியாரின் குரு பூஜை வைபவத்திற்கு அபிமானமுள்ள சகோதர சகோதரிகள் கீழ் காணும் விலாசத்திற்கு தங்களாலியன்ற பொருளை அனுப்பிவைக்குமாறு கோருகிறேன்.

T. N. கோவிந்தசாமி நாயுடு,
No. 91, அன்னப் பிள்ளை வீதி,
G. T. மதராஸ்.

---

உங்களை எவனாவது

## சூத்திரன்

என்று சொன்னால் உடனே
அவனுக்கு இனிமேல் இப்படி
செல்லாதே என்று தக்கபடி
புத்தி கற்பியுங்கள்.

---

இனம்! R. M. P. தமிழ் பரிசு வினா No. 1. இனம்!!

ரூ. 50 இனம்!!!

வினா.

1. ஒரு தெய்வத்தின் பெயர்.
2. ஒரு தேசத்தின் பெயர்.
3. ஒரு மரத்தின் பெயர்.
4. பூங்கிலின் பெயர்.
5. ம கலை என்னும் பதத்தை அமைக்கவும்.
6. உலோகங்களிலொன்றின் பெயர்.
7. ஒரு மிருகத்தின் பெயர்.

மேலே கண்டவைகள் ஒவ்வொன்றும் மூன்றெழுத்தில் அமையவேண்டும் அவைகளின் நடுவெழுத்துக்களை முறையே கூட்டி வாசித்தால் முருகக்கடவுளின் பெயர்களிலொன்று வரவேண்டும்.

மேலே காட்டிய வினாவுக்கு (நாங்கள் எடுத்துக்கொண்ட) சரியான விடையளிப்பவர்களுக்கு ரூ. 50-ம் பரிசளிக்கப்படும். விடைகளை அனுப்பும்போது தங்கள் முழு விலாசத்தையும் தெரிவிப்பதோடு விடை ஒன்றுக்கு அணு நான்கும் (இந்திய அணுத் தலைகளாவது) சேர்த்து அனுப்பவேண்டும். பத்து விடைகளுக்குமேல் எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் கலிகோ பயிண்டு திருவாசகம் இனமாக அனுப்பப்படும்.

விடைகள் 30—4—28 (விபவ௵ சித்திரை௴ 18௳க்குள்) அனுப்பப்படவேண்டும். பரிசு அடைந்தவர்களின் விபரத்தை அடுத்த நோட்டீசில் காணலாம்.

R. M. P. தமிழ் பரிசு வினா நிலையம்,
இராஜபாளையம் S. I. R.

## எதிர்கால சோதிடம்.

உங்கள் சாதகமல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் எதிர்காலத்தைப்பற்றி ஒரு வருஷத்திற்கு வாரவாரம் நடக்கும் பலன்கள் தெளிவாகவும் விபரமாகவும் எழுதி அனுப்ப ரூ. 5. மாதவாரி பலன்கள் எழுத ரூ. 2. நாங்கள் எழுதும் பலன்கள் உண்மையோடுகூடி யிருக்கும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக்குப்பம்,
புதுவை. (பிரஞ்சிந்தியா.)

8-ம் பக்கத் தொடர்ச்சி.

பந்தம் முடிந்த பின்னும் கூட "தமிழ் நாடு" க்கு நானும் ஒரு விளம்பர ஏஜண்டாக இருந்து தொழில் சம்பந்தமாய் எனக்குரிய கமிஷனைப் பெற உரிமையுண்டு. அதற்காக இன்னும் நான் 'தமிழ் நாடு'க்காகவே வேலை செய்து வருகிறேன். விளம்பர டிபார்ட் மெண்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய சொந்தச் செலவில் நடக்கின்றது. விளம்பரத்திற்காக செக்குகளெல்லாம் என் பெயரிலேயே இந்தியன் பாங்கியில் இன்னும் கட்டப்பட்டுவருகின்றது. தினசரியாவதற்கு முன்னமேயே ரூ 12000 க்கு துணிந்து நான் எடுத்துக்கொண்டமைபால் தாங்களும் துணிந்து தினசரி நடத்த இறங்கினீர்கள் என்பது மிகையாகாது. சைனபஜார் 292ல் ரூ10000 என் சொந்த முதல் போட்டு வைத்திருக்கும் கதர் டிப்போவையும் புத்தக டிப்போவையும் நான் கவனித்து நடத்தாமல் நஷ்டம் வரும்படி விட்டு விட்டு 'தமிழ் நாடு' க்காக உழைத்து வரும்போது இம்மாதிரி அபாண்டமான பழி சுமத்தி என்னையும் எனது தொழி லபிவிருத்தியையும் கெடுக்கப் பார்ப்பது மிகவும் வெறுக்கத் தக்கதாகும். 'தமிழ்நாடு' விளம்பர ஒபபந்தத்தில் நான் மற்ற பேப்பர்களின் ஏஜெண்டாக இருக்கக்கூடாது என்கிற நிபந்தனையில்லாவிட்டாலும் மனசாட்சிக்கு விரோதமாய் நான் இன்று வரையில் வேறு எந்தப் பேப்பருக்கும் எந்த வேலையும் செய்ததில்லை 'குடி அரசுக்கு" ஏஜெண்டாக 'தமிழ்நாடு'டனும் சேர்த்து நானே இருக்க சம்மதித்து ஸ்ரீ நாயக்கர் அநுமதி கேட்டபோது நான் மறுத்து முடியாதென்று சொல்லி அதனால் மாதா மாதம் எனக்கு வரும் சுமார் நூற்றைம்பது ரூபாயை நான் இழந்து விட்டேன். அதன் பிறகு தான் 'குடி அரசு' விளம்பர ஒப்பந்தத்தை இரண்டு வருடத்திற்கு சென்னையில் வேறொருவர் எடுத்துக்கொண்டார். இவ்வாறு "தமிழ்நாடு" தினசரியாகத் தோன்றுவதற்கு ஒருகாரணமாயிருந்த நான் அதன் அபிவிருத்தியையும் என், நண்டபாணி கம்பெனி தோன்றுவதற்கு ஒரு காரணராய் இருந்த தாங்கள் இதன் அபிவிருத்தியையும் நாடுவது இயற்கை. இதற்கு விரோதமாய் நம்மை பிரிக்கும் முறையில் சில சிப்பந்திகளால் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக

1. "தேவிதாசன்" எழுதிய வியாசம் தமிழ் நாட்டில் வந்த பிறகு அதற்கு மறுப்பாக 'திராவிடனில்' பல மாறு பெயருடன் வெளிவரும் வியாசங்கள் பல "கண்ணாடி வீட்டில் இருந்து கல்போடுவது"போல் "தன்வினை தன்னைச்சுட்டால் நான் என் செய்வது!"

"கூர்த்து நாய் கௌவிக் கொளக் கண்டும், பேர்த்து நாய் கௌவினர் ஈங்கில்லை-நீர்த்தன்றி, கீழ் மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ, மேன் மக்கள் தம் வாயால் மீட்டு" என்ற நாலடியார்க்கிணங்க அற்பர்களின் வசை மொழிகளைப் பொருட்படுத்தி மறைவாகத் தாக்கும் குணம் என்னிடத்தில் இல்லை. நான் எப்பொழுதும் யாரைப்பற்றி எழுதவேண்டுமானாலும் பயங்கொள்ளியைப்போல் மாறு பெயர் புனையாமல் எழுதுவேன் என்பதை தாங்கள் உணர வேண்டும். இதை யறியாத 'தமிழ்நாடு'வில் உள்ள சிப்பந்திகளில் ஸ்ரீ ஜெயராம் நாயுடு என்ற தங்கள் மைத்துனி மகனும் ஸ்ரீ வெங்கட்டராஜுலு நாயுடு என்ற உப பத்திராதிபரும் ஸ்ரீ சந்திரசேகர முதலியார் என்ற விளம்பர சமஸ்தாவும் நான் சென்றவாரம் 'தமிழ்நாடு' ஆபீசுக்கு வந்தபோது நேரில், என்ன சார்! நீங்கள் திராவிடனில் பெயர் போடாமல் தேவிதாசனுக்கு எழுதிய பதிலைப் பார்த்தோம் மிக நன்றாக யிருக்கிறது" என்று கிண்டலாகக் கேட்டார்கள்.

இதற்குப் பதில் நான் சொன்னதாவது 'நான் எழுதியிருப்பதாக ரூபிக்கும்படி தங்களுக்கு யாராவது அயோக்கியத்தனமாகத் தூண்டிவிட்டிருக்க வேண்டும். நான் மேற்படி வியாசங்களை எழுதவில்லை, பெயர் போடாமல் எழுதும் அயோக்கிர்களில் நான் சேரமாட்டேன். நான் எழுதினால் என் பெயரைப் போட பின்வாங்க மாட்டேன். நான் இதன் உண்மையை யறிய ஸ்ரீ நாயுடுவிடமும் ஸ்ரீ சொக்கலிங்கம் பிள்ளையிடமும் நாளைப் பேசிக் கொள்ளுகிறேன்' என்று சொல்லி வீட்டுக்குப் போய்விட்டேன். மறுநாள் நேரே தங்கள் பங்களாவிற்கு வந்து தங்களையும் ஸ்ரீ டி எஸ். சொக்கலிங்கம் பிள்ளையையும் நேரில் பார்த்து பேசி வந்தேன். அதன் சாரமாவது:—'தேவிதாசன்' என்ற வியாசத்திற்கு 'திராவிடனில்' பதில் வந்த வியாசம் என்னால் எழுதப்பட்டதாக தங்களுக்காவது ஸ்ரீ நாயுடுக்காவது சந்தேகமுண்டா' என்று ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளையைக் கேட்டேன். அதற்கு அவர் "நீங்கள் அதை எழுதவில்லையே" என்றார். 'இல்லை. எழுதுவதானால் பெயர் போட்டெழுதுவேன் 'தமிழ்நாடுக்கும்' ஸ்ரீ நாயுடுக்கும் தங்களுக்கும் விரோதமாயிருக்கும் ஸ்ரீ நாயக்கருடன், நானும் சண்டையில் சேர்ந்துகொண்டு ஒன்றும் செய்யத் தயாராய் இல்லை. அவசியமும் இல்லை. ஆனால் தற்காலம் ஸ்ரீ நாயுடுவை விட ஸ்ரீ நாயக்கர் பிரசாரம் எனக்கு அதிகமாய் பிடித்திருக்கிறது 'திராவிடன்' 3000க்கு மேலும் 'குடி அரசு' 6000க்கு மேலும் போகிறபடியாலும், ஸ்ரீ நாய்க்கரை தமிழ்நாட்டு மகா ஜனங்கள் வரவேற்கின்ற படியாலும், காலம் தேசிய ஊழியத்தைவிட தற்காலம் சமூக ஊழியமே அவசியமென உணர்ந்த ஸ்ரீ நாயக்கருடன் சென்று பிரசாரம் செய்கின்றேனே யல்லாது வேறில்லை. இதனால் ஸ்ரீ நாயுடுக்கு விரோதமாக ஸ்ரீ நாயக்கருடன் சேர்ந்துகொண்டாரென்று தாங்கள் சந்தேகப்பட வேண்டாம். தொழில் முறையில் நான் நாயுடு பக்கமே. பொதுஜன ஊழியத்தில் தற்காலம் நான் ஸ்ரீ நாயக்கர் பக்கம்தான் உழைக்க எண்ணம்' என்று சொன்னேன். அதற்கு அவரும் 'சரிஎங்கேயாவது பிரசாரம் செய்யுங்கள். விளம்பரம் ஒப்பந்த காலம் கழிந்ததும் நீங்களே 'தமிழ்நாடு'வுக்கும் 'திராவிடனுக்கும்' குடி அரசுக்கும் ஏஜண்டாக இருப்பதுபற்றி எங்களுக்கும் மிக்க சந்தோஷமே'என்று சொன்னார். இதன் பிறகுதான் பழநி டாக்டர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளையிடம் சென்று அவரையும் அழைத்துக்கொண்டு 'திராவிடன்' ஆபீசில் உள்ள ஸ்ரீ நாயக்கரிடம் சென்று 'குடிஅரசு'க்கு 2 பக்கமும் 'ஜஸ்டிஸ்'க்கு 1 பக்கமும் விளம்பரம் வாங்கிக் கொடுத்தேன். மறுநாள் நான் கும்பகோணம் சென்றுவிட்டேன். 23 தேதி பேப்பரை அங்கேதான் பார்த்தேன். முதல் தடவை தெரியாமல் வெளிவந்திருக்குமென்று நம்பி

"அவமதிப்பும் ஆன்றமதிப்பும் இரண்டும்
மிகை மக்களான் மக்களான் மதிக்கற்பால—
நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்த நூலார்."

என்பதை யுணர்ந்து சும்மா இருந்துவிட்டேன்.

நேற்று 28உ பகல் தமிழ்நாடு ஆபீசுக்கு வந்து ஸ்ரீ ச. சொக்கலிங்கம் பிள்ளையைக் கண்டேன். 23உ கடிதத்தை மறுத்து இனி என்னிடம் உண்மையைக் கேளாது ஒன்றையும் போட வேண்டாமென்று சொன்னேன். அதற்கவர் 'இன்றைக்கு இன்னொரு கடிதம் வந்திருக்கிறது' என்று பதில் சொன்னார். அதற்கு 'சமாதானம் வேண்டுமா? பதில் சொல்லுகிறேன் கடிதத்தைக் காட்டுங்கள்' என்றேன். கடிதத்தை கொடுக்க மறுத்தார். உடனே நீங்கள் உண்மைக்கு விரோதமாக உள்ள கடிதங்களை நட்புத் துரோகமாய் வெளியிட்டால் நான் தங்களுக்குப் பகிரங்கமாய் எழுதநேருமென்றுஎச்சரிக்கை செய்துவந்துவிட்டேன். நேற்றுமாலை பேப்பரில் ஸ்ரீ சற்குரு சாமி கடிதம் வெளியாகியிருக்கிறது. இது குறும்பு அல்லவா என்று தான் கேட்கிறேன். சிப்பந்திகள் செய்யும்வேலைக்காக தங்களிடம் நான் சண்டையிடப் போவதில்லை தாங்களிதில் தலையிட்டு மூளையிலேயே கிள்ளிவிட்ப் போகின்றீர்களா என்றுதான் கேட்கின்றேன். தங்களிடம் சுமார் 15 வடகாலமாய் அன்னியோன்னியமாய் பழகி தங்களுக்கும் தங்கள் காரியதரிசி முதல் 'தமிழ் நாடு'வில் பகிரங்கக் காரியதரிசி வரையில் வேலை பார்த்து நன்றியறிதலுடன் இன்றும் தங்களுடன் நட்புற்றிருக்கும் என்னை விரோதமாகப் பாவிக்கப் போகின்றீர்களா என்பதையும் அல்லது நட்புடன் இருக்கின்றீர்களா என்பதையும் அல்லது நடு நிலைமை வகிக்கப் போகின்றீர்களா என்பதையும் தயவுசெய்து எனக்கு அறிவித்து விடுங்கள். தாங்கள் எப்படி விரும்பினும் அப்படி இருக்க எனக்குச் சம்மதமே! ஆனால் தாங்கள் கீழே குறிக்கப்பட்ட வற்றை மட்டும் யோசித்து முடிவு சொல்லுங்கள். தாங்கள் 'ஏறிய ஏணியை எடுத்து விடுவது' வழக்கமாயினும் அதை என் விஷயத்தில் உபயோகப்படுத்த மாட்டீர்களென்று நம்புகிறேன். தங்கள் உயிர்த்தொழர்களாகியும் தலைவர்களாயுமுள்ள ஸ்ரீமான்களான ச. இராஜகோபாலாச்சாரியார், திரு வி. கல்யாணசுந்திர முதலியார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்றவர்களையும் தங்கள் நன்மைக்குப் பாடுபட்ட தேசபக்தன், நவசக்தி, குடி அரசு, திராவிடன், ஜஸ்டிஸ் பத்திரிகைகளையும், தங்களின் பிராமணசெல்வாக்கிற்கு முதற் காரணமாயுள்ள ஜஸ்டிஸ் கட்சியையும் அதன் தலைவர்களையும் தங்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் 'அய்யங்கார் கூலிகள்' என்று தங்களால் திருநாமம் சூட்டப்பெற்ற ஸ்ரீமான்களான அண்ணாமலை பிள்ளை குப்புசாமி முதலியார், குழந்தை முதலிய தேசியத் தொண்டர்களையும் தங்கள் ஆபீசில் உள்ள பல சிப்பந்திகளையும், தாங்கள் சமயம் வரும்போது புகழ்ந்தும் இல்லாதபோது இகழ்ந்தும், மேலே காட்டியவர்கள் நல்ல நிலைமைக்கு வரும்போது அதற்குமுட்டுக்கட்டை போட்டும். அவர்கள்மேலேற ஒட்டாதபடியமைக்கவல்ல தங்களின்தந்திரத்திலிருந்துநான் ஒருவன் தான் இதுவரை10 வருடகாலமாக நற்பெயர் எடுத்து வந்திருக்கிறேன். இந்நற்பெயர் நீடித்திருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். இல்லா விட்டால் தங்களால் யோக்கியர்கள் என்ற நற்சாட்சி பெற்ற யாரையாவது எனக்கு சிபார்சு செய்யுங்கள் இவர்களிடம் சென்று பழகி படித்து பின் யோக்கியனாகவாவது தங்களிடம் வந்து சேருகின்றேன். தங்களால் குறை சொல்லப்படாதவும் குற்றம் சாட்டப்படாதவும் உள்ள மனிதர்களோ வஸ்துக்களோ உலகில் என்னைத்தவிர ஒன்றும் இல்லை யென்றே இதுவரை நம்பி இருந்தேன். அதற்கும் தாங்கள் சொல்லாவிடிலும் தங்கள் சிஷ்யர்கள் சொல்லவாரம்பித்து விட்டார்கள். நான் பிள்ளை குட்டிக்காரன் 'உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே' என்று சொல்லி விடாதீர்கள். சொல்வதை அல்லது எழுதுவதை நம்புங்கள். அயோக்கியர்களின் வார்த்தைகளைக் கேட்காதீர்கள்.

நான் இன்று தங்களை பிராமணரல்லாதார்களுக்குநன்மை செய்யும் தலைவராகவேகொண்டிருக்கிறேன். தங்களை, ஸ்ரீ நாயக்கரையும், திரு வி. கலியாணசுந்திர முதலியாரையும், திரு. சிதம்பரம் பிள்ளையையும் போலவே நேசிக்கின்றேன். தங்கள் பத்திரிகைக்கும் உழைக்க இருக்கின்றே

## அயல் நாட்டில் பொருளீட்டச் செல்வோர்க்கு ஓர் வார்த்தை.

சகோதர சகோதரிகளே! நாம் நம்முடைய பூமியாகிய தமிழ் நாட்டை விட்டு வறுமையின் காரணமாக கூலியாளாகச் சிலரும் அதிகப்பொருள் தேடவேண்டுமென்று சிலரும் கப்பலேறி அயல் நாடு சென்று வசித்துவருவதை யாவருமறிவர். அவ்வாறு செல்வோரில் ஆடவரே மிகுந்திருக்கின்றார்கள். பெண்களோ வென்றால் நூற்றுக்கு பத்துப் பேர் வீதம் செல்வதும் அருமை. இவ்விதமிருக்க ஆடவர் மிகுதியாக செல்வதில் வாலிபர்களே மிகுந்திருக்கின்றனர். அன்னவர் தம்மனைவியர்களை இல்லத்தில் விடுத்து அயல் நாடு சென்று அங்கு மூன்று, நான்கு ஆண்டுகள் வசித்து வருங்கால் அன்னவர்களில் தாம் பொருளீட்டுதலுக்கு இவண் போந்தோமென்று உன்னாது காமாந்தகராய் உழைக்கும் கணிகையர் இல்லத்திலும் மதுபானக் கடைகளிலும் தம்பொருளை எல்லாம் இழந்து வறியராய் தெருவில் மிக்கு வருந்தி வாழ்வோர் பலர். பிறர்மனை கவர்தல் சூதாடல் முதலிய தொழில்களையே பிரதானமாகக் கொண்டு அதனால் சிக்ஷையுடைவரும் சிறைச்சாலைக்குச் செல்பவரும் பலர். இவ்வாறு இவர்கள் சீரழிந்து நிற்பதற்கு காரணம் இவர்கள் இல்லக்கிழத்தியர்கள் அருகில்லாக்குறையன்றோ. இதையன்றியே "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை இல்லாள் இல்லாயின் அவ்வில்லம் புலிகிடந்த தூறாய் விடும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார் ஆதலால் இனியாவது அன்னியநாடு சென்று வசிக்க விரும்புவோர் தம்மனைவியரையும் உடனழைத்துச் சென்று பரிசுத்த வாழ்வு வாழ்ந்து இகபரசுகங்களை அடைவர்களாக. இல்லாவிடில் தம்மையும் தம் மனைவியரையும் கெடுத்தவராவர். இவ்வாறு உடனழைத்துச் செல்ல வீட்டிலுள்ள பெரியவர்கள் ஆட்சேபிப்பார்களானால் தம புத்திரர்களையும் அன்னியநாடு செல்ல விடாமல் நிறுத்தி தங்கள் தேடிய பொருளிலிருந்து சாப்பாடு கொடுத்து வரவேண்டும். அதற்கு சக்தியில்லாதவர்கள் மரியாதையாக தம்மருமகளையும் மகனையும் ஆசீர்வதித்து கப்பலேற்றி அனுப்பிவைப்பது அன்னவர் கடமை.

---

ள். அரசியலில் அல்லது சமூக விஷயத்தில் நான் அபிப்பிராயபேதங்கொண்டாலும் தங்களையோ அல்லது வேறு மனிதர்களையோ ஆளைத் தாக்கும் அயோக்கிய வழியில் இறங்காது மகான் கையில் மட்டும் ஈடுபட்டு உழைத்து வருவேன் என்பதை நம்பி இக்கடிதத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து பதிலும் எழுதுங்கள். இதன் நகல் "திராவிடனுக்கும்" "குடி அரசுக்கும்" அனுப்பப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—இக்கடிதத்தின் பிரதி யொன்று "தமிழ் நாடு" பத்திரிகைக்கும் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் அனுப்பியிருக்க 'தமிழ் நாடு' அதை முழுதும் பிரசுரிக்காமல் அதற்கு சாதகமான பாகத்தை மட்டும் பிரசுரித்திருக்கிறது. ஸ்ரீமான் பிள்ளையவர்கள் ஸ்ரீ வரதராஜுலுவைப் பற்றி எழுதிய விஷயங்கள் உண்மை என்பதற்கும் 'தமிழ் நாடு'வின் புரட்டை விளக்குவதற்கும் இதுவே போதுமானது. (ப—ர்.)

---

## ஆலயங்கள் இருக்கவேண்டுமா?
## "தெய்வங்களின் யோக்கியதை"

எனது மற்றொரு வார்த்தை:—

நான் ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் கட்டுரை யெழுதி அதனதன் அயோக்கியதைகளை ருசுப்பிக்க எண்ணி முதலில் ராமனைத் தொடங்கி இருக்க, சில நண்பர்கள் தப்பபிப்பிராயமாய் நான் சிவனை நிலைநாட்ட எண்ணுவதாய் அவசரப்பட்டு நினைக்கின்றனர். என்னுடைய 1-வது கட்டுரையின் வசனம் பூராவும் பார்த்தால் அதில் மும்மூர்த்திகளையும் இழுத்திருப்பது புலப்படும். நான் சிவனையும் அவனது மனைவிகளையும், கணேசனையும், விஷ்ணுவையும், சுப்பிரமணியனையும் மற்றும் ஏனைய முக்கிய 'தெய்வங்களையும்' இவர்களது அடியார்களையும், அவரவர்களுக்குள்ள 'யோக்கியதை'ப்படி மதிக்க, ருசுவும் வசனமும் வார்த்தையும் வைத்திருக்கிறேன். எனது ஆராய்ச்சியானது சுருக்கமாகவும் குறிப்பாகவுமிருக்கும். இக்காலத்தில் நாம் கொண்டாடுவதற்கு என்ன யோக்கியதையில் மேற்படி தெய்வங்கள் உள்ளன என்பதைத்தான் நான் ஆங்காங்கு கேட்பது. இவ்வகை ஆராய்ச்சியின் நோக்கம், நான் முன் சொன்னபடி, இவர்கட்கு விடப்பட்ட சொத்துக்களையெல்லாம் பிடுங்கிட வேண்டிய நியாயம் ஏற்பட்டிருக்கிறதைக் காட்டவும், தலைவர்களுக்கு அதைப் பணிவுடன் உணர்த்தவும், அவர்களை, மேற்கொண்டு இது சம்பந்தமாய் முயற்சிக்கு எழும்படி தூண்டவும் ஆகும்.

புராணங்களும் அவற்றின் புளுகுகளும் அவற்றின் சாரமான நூல்களும் அனுவசியமாய் இங்கு கோட்டம் சொல்லப்பட்டிடா. நான் எனது மேற்படி குறிப்பிட்ட விஷயமாய் ருசுக்களை மட்டும் எடுத்துக் காட்டி, எவரும் தம அபிப்பிராயத்தைத் தாமே செய்து கொள்ளும்படி விட வேண்டுமென்னும் கொள்கையைக் கட்டுரைகள் பூராவிலும் மரியாதையாய் அனுசரித்திருக்கிறேன்.

ஞானந்தன்.

---


இஉம்! இஊம்!! இஊம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட, சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய வரும் சஞ்சீவியின் சத்தை வாளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியவைவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த தோஷ்ணை நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.

2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.

3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.

4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.

5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.

6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன், ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

ஷணமற்றுக்கொழுத்திருக்கும் ஆட்டுக் கடாக்களை உண்பவராயினராம். இவ்வித ஆபாசமான கதையை என்னென்பது? இவைகளையெல்லாம் எழுத நேர்ந்தது எமது பாவமே எனினும் உண்மை உணராது சாதாரணமக்களெல்லோரும் இவைகளை உத்தமமான கதைகளென நம்பி பயபக்தியோடு படிக்கின்றனரே என்னும் பரிதாபமே இவைகளை விவரமாக எழுதுமாறு எம்மைத் தூண்டிற்று. இவ்வரலாற்றைக் காய்தல் உவத்தல் இல்லாது சமமான மனநிலையோடு சீர் தூக்கிப் பார்க்கும்படி அறிஞரை வேண்டுகின்றோம்.

இதனைப்படிக்கும் தமிழ் மக்கள் அனைவரும் இவ்வாபாச வரலாறு தம்முடையதன்று என்றும் ஆரிய மக்களுடையதென்றும் எப்போதும் மறவாமல் மனதிற் கொள்ள வேண்டுகின்றோம். மேலே கண்ட வரலாற்றில் பிதிரு தேவதைகளுடைய வரலாறும் வருகிறது. இவ்விழியான மாமிச உணவினரைப் பிதிருக்கள் என்று ஆரியர் கூறுகின்றனர் இவர்களைத் தமிழர் தம்முடைய பிதிரு தேவதைகளென்று மயங்கிக் கொள்கின்றனரே! பரிதாபம்! பரிதாபம்!! இனியாவது தமிழ் மக்கள் உண்மை யுணர்வார்களாக. இத்தேவர்கள் முனிவர்களுடைய வரலாறுகளை இராவணேசுவரனைப்பற்றி ஆராயுமிடத்து விவரமாக ஆராய்வோம்.

கோதமமுனிவன் இந்திரனுக்குக்கொடுத்ததாக வால்மீகி கூறும் சாப வரலாறு சான்றோர் செய்யத்தகாததாகவும் மிகவும் கொடுமையாகவும் இருக்கிறது. இவ்வரலாற்றைக் கம்பர் மிகவும் ஆபாசமானதாக ஆக்கினர். இந்திரனை பூனை உருவெடுத்து ஓடினதாகவும் அவனைக்கண்ட கோதமன் அவனுடைய உடலில் ஆயிரம் பெண் குறிகள் உண்டாகவெனச் சபித்தனனென்றும் கம்பர் கூறுகிறார்.

“ஆயிரமாதர்க்குள்ள அறிகுறியினக்குண்டாகென்
றேயினன் அவையெல்லாம் வந்தியைந்தன
இமைப்பின் முன்னம்”

தசரதன் செய்த அசுவமேதயாகம் போன்ற ஆபாசமான வரலாறுகளையெல்லாம் மறைத்தோ மாற்றியோ எழுதிய கவியரசு கம்பருடைய உயர்ந்த அறிவில் இவ்வாபாசக் கதையையும் பாடவேண்டுமென்னும் தோற்றம் எவ்வாறு எழுந்ததோ? அவர் வாய் எவ்வாறு இவ்விழி வரலாற்றைக் கூறத்துணிந்ததோ? அவர் கரந்தான் எவ்வாறு எழுதிற்றோ? என்னென்பது? கம்பர் வால்மீகி வரலாற்றை இவ்விடத்து மாற்றப்புகுந்தது என் செய்வது? ஆயிரம் பெண்குறிகள் ஒருவனுடைய உடலிலே பொருந்துமாறு ஒரு முனிவன் சபித்தானென்று எழுதினரோ கவி வல்லார் கம்பர்! அல்லது கம்பர் எழுதினதாகப் பிறர் இடைச் செருகலாக வந்ததோ இது? என்னென்பது? கம்ப இராமாயணத்தில் வந்துள்ள படி தேவர்கள் நான்முகனை முன்னிட்டுக்கொண்டு கோதமமுனிவனை யடைந்து வேண்டிக்கொள்ள கோதமன் அவைகளை ஆயிரம் கண்களாமாறு சாபவிடை தந்தனனும். உடனே ஆயிரம் யோனிகளும் ஆயிரம் கண்களாயினவாம். இரண்டு கண்களோடு இந்திரன் இந்த விதமான கெட்ட நடத்தைகள் புரிவானாயின் ஆயிரங்கண்களோடு என்னென்ன கேடு புரிவானோ என்று கோதமன் ஓர்ந்து பார்த்தானில்லை போலும். இதிலிருந்து ஒன்று ஊகிக்கற்பாலது என்னவெனில் தீயொழுக்க முடையவனாகிய இந்திரன் தன் நடைக்கேட்டால் உடம்பெல்லாம் வெட்டை என்று சொல்லப்படுகிற கணக்கில்லாத புண்களை அடைந்தான் போலும். அதனால் அவன் உடம்பெல்லாம் கணக்கிறந்த புண்களாயினபோலும். அதனையே கவி இவ்வாறு கூறினாராயினர் என்பதே அவசியம்.

கம்பர் கூறும் இவ்வரலாறு வால்மீகியோடு பொருந்துமாறில்லை. ஏனெனில் அவர். இவ்வரலாறு கூறும்போது இந்திரனைப்பற்றிக் கூறுமிடங்களில் ஆயிரங்கண்ணன் என்கிறார். ஆதலின் இவன் அக்கொடுமையைக் கூடுமுன்னரோ இவனுக்கு ஆயிரங்கண்களிருந்திருக்கவேண்டுமென்பதாகிறது. ஆதலின் அவ்வாறு ஆயிரங்கண்களை இந்திரன் பெறுவதற்கு வேறு காரணம் இருந்திருக்கவேண்டும். இவ்விடத்து இந்திரனுக்கு வடமொழியில் சகஸ்ரயோனி என ஒரு பெயர் இருப்பது சிந்திக்கற்பாலது. இனி இவ்வெறுக்கத்தகுந்த வரலாற்றை இவ்வளவோடு விடுத்து மேற்செல்லுதும்.

அறிஞர்களாகிய தமிழ் மக்களுக்கோர் வேண்டுகோள். நாம் இதை எச்சமயத்திலேனும் அல்லது எத்தெய்வத்தினிடத்தேனும் வெறுப்பினால் எழுதுகின்றனமென நினைத்தல் கூடாது. தமிழ் மக்கள் தமது தெய்வங்களுள் ஒன்றாக எண்ணி வணங்கும் திருமால் வேறு; இவ்வாரியர் தெய்வம் வேறு. தமிழ் மக்கள் வணங்கும் திருமாலைப்பற்றி சமயம் வாய்க்கும்போது விவரமாக எழுதுவோம். இவ்வாராய்ச்சியிலும் இராமாயணத்திலும் வரும் திருமால் நான்முகன் முதலியோர் ஆரியருடைய தெய்வங்கள். அவ்வாரிய தேவதைகளின் தன்மைகளை ஆரியர் கூறுமாறு எடுத்துக்காட்டி அவர்களைத் தம் தெய்வம் என மயங்கும் தமிழ் மக்களுக்கு அவற்றின் உண்மையை விளக்கிக்காட்டவே ஈதெழுதுகிறோம்.

# பள்ளிக் கூடத்தில் புராணபாடம்.

“சித்திர புத்திரன்.”

உபாத்தியாயர்:- அடேபையா! இந்த உலகம் யார் தலைமேல் இருக்கின்றது சொல்பார்ப்போம்.

பையன்.-எனக்கு தெரியவில்லையே சார்.

உபாத்தியாயர்:— ஆதிசேஷன் என்கின்ற ஆயிரம்தலையுடையபாம்பின் தலை மேல் இருக்கின்றது. “பூமியை ஆதிசேஷன் தாங்குகின்றான்” என்கின்ற பழமொழி கூட நீ கேட்டதில்லையா மடையா.?

பையன்:-நான் கேட்டதில்லை சார்-ஆனால் ஆதிசேஷன் என்கின்ற பெயர்மாத்திரம் ஒரு நாள் எங்கள் வீட்டில் ராமாயணம் படிக்கும போது ஒரு சாஸ்திரியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது ஆதிசேஷன் விஷ்ணுவின் படுக்கை யென்றும், அந்த விஷ்ணு ராம அவதாரம் எடுத்த போது இந்த ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதாரம் செய்தார் என்றும் கேட்டதாக ஞாபகமிருக்கின்றது.

உபாத்தியாயர்:- ஆமாம் அந்த ஆதிசேஷன் தான் பூமியைத்தாங்கிகொண்டிருக்கிறான் தெரியுமா?

பையன்:— இப்போது தெரிந்து கொண்டேன். ஆனால் ஒரு சந்தேகம் சார்...

உபாத்தியாயர்:— என்ன சந்தேகம் சீக்கிரம் சொல்.

பையன்:- பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷன் விஷ்ணுவுக்குபடுக்கையாய் வந்துவிட்டால் அப்போது பூமியை யார் தாங்குவார்கள்? தவிர லட்சுமணனாக உலகத்திற்கு வந்து விட்ட போது பூமியை ஆதிசேஷன் யார் தலையில் வைத்துவிட்டு வந்தார்? தயவு செய்து சொல்லுங்க சார்?

உபாத்தியாயர்:- நீஎன்ன ‘குடி அரசு’ படிக்கிறயோ! அது தான் அதிகப்பிரசங்கமான கேள்விகளைகேட்கின்றாய் பொறு உன்னை இந்த பரீக்ஷையில்சைபர் போடுகின்றேன்.

பையன்:- இல்லவே இல்லைசார் நான் சத்தியமாய்குடி அரசைப் படிப்பதே இல்லை சார். ராமாயணம்தான் சார் கேட்டேன். தாங்கள் சொல்வதிலிருந்தே எனக்கு இந்த சந்தேகம் தோன்றிற்று சார்.

உபாத்தியாயர்:— ஆதிசேஷன் தெய்வத்தன்மைபொருந்தியவன். அவன் ஒரே காலத்தில் பலவேலைசெய்யக்கூடியசக்தி அவனுக்கு உண்டு அவன் பூமியையும் தாங்குவான்; விஷ்ணுவுக்குபடுக்கையாகவுமிருப்பான். விஷ்ணு ராமனாக உலகத்திற்கு போகும் போதுலக்ஷ்மணனாக கூடவும் போவான், தெரியுமா?

பையன்:— இப்ப தெரிந்தது சார். ஆனால் ஒரு சின்ன சந்தேகம் சார். அது மாத்திரம் சொல்லிப்போடுங்கள். இனி நான் ஒன்றும் கேட்பதில்லை.

உபாத்தியாயர்:- என்ன சொல் பார்ப்போம்,

பையன்:— பூமியை ஆதிசேஷன் தாங்குகிறான்; சரி அதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்; அப்புறம் தாங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது சார். எனக்கு நிஜமாலும் தெரியவில்லை சார்.

உபாத்தியாயர் — என்ன சங்கதி சொல்லு; நான் கோபிக்கிறதில்லை.

பையன் மறுபடியும்:— பூமியை ஆதிசேஷன் தாங்குகின்றான் சார் (தலையை சொரிந்து கொண்டு) ஆதிசேஷனை யார்தாங்கறாங்க சார்? அவர் எதன்மேலிருந்து கொண்டு தாங்கறாங்கசார். அதை மாத்திரம் சொல்லிக் கொடுத்தால் போதும் சார். அப்புறம் ஒரு சந்தேகமும் இப்போதைக்கு இல்லை சார்.

உபாதியாயர்:- போக்கிரிப் பயலே நீ குடிஅரசு படிக்கிறாய் என்பது இப்போது எனக்கு உறுதியாச்சுது. பொறுபொறுபேசிக் கொள்ளுகின்றேன். வாயை மூடிக் கொண்டுபோய் உட்கார் அதிகப் பிரசிங்கிப்பயலே.

பையன்:- பேசாமல் உட்கார்ந்து கொண்டான் உபாதியாயரும் எஸ்.எஸ்.எல்.சி. பரீக்ஷைக்கு அவனை அநுப்பவில்லை. இதைப் பற்றி கேள்வி கேட்பாரும் இல்லை. பள்ளிக் கூட மேனேஜரையும் வாத்தியார் சரிப்படுத்திக் கொண்டார்.

## பார்ப்பனீயமொழிந்த கிருகப்பிரவேசமும் திருமணமும்.

26—3—28 தேதி திரு சொ. பழனி முதலியார் தன் புது விட்டுக் கிருகப்பிரவேசத்தை பார்ப்பனரின்றி அவர் சொந்தக்காரரைக்கொண்டே வெகு சிறப்பாய் நடத்தினார்.

தவிர இதற்கு முந்தி ஸ்ரீமான்கள் அங்கப்ப செட்டியார், தொண்டப்ப செட்டியார், கண்ணி நாடார், பச்சா நாடார் ஆகியவர்கள் வீட்டில் நடந்த கலியாணங்களும் பார்ப்பனீயம் சிறிதுமின்றியே செய்யப்பட்டிருக்கிறது.

சி. பி. கருப்ப முதலியார்.
செட்டிபாளையம்.

## தேர்ந்தெடுக்கப் பெற்றூர்.

திருநெல்வேலித் தாலூகா போர்டு ஆலங்குளம் டிவிஷனுக்கு மெம்பர்களா வென்று போட்டி போட்ட அபேட்சகர் ஜவரில் ஸ்ரீமான்கள் இலஞ்சி ஆர். முத்தையா தேவரவர்கள், ஆலங்குளம் வி. ஆவுடையப்ப பிள்ளையவர்கள், அகரம் சங்காமய்யரவர்கள் முறையே 700, 676, 473 வோட்டுகள் வீதம் பெற்று 23—3—28ல் தேர்ந்தெடுக்கப்பெற்றூர்கள்.

### 5-ம் பக்கத் தொடர்ச்சி

மிஸ்மேயோ புஸ்தகம் குப்பை வாரியாகவிருந்தாலும் அந்தக் குப்பையைக் கூட்டி எறிந்து விட்டால் நம் பெண்களெல்லாம் சுத்தமுடையவர்களாய்விடுவார்கள் எனபதை அந்த புஸ்தகத்திலேயே தெரிந்து கொள்ளலாம். நாம் கடவுளால்ரிஷிகளால் கொடுக்கப்பட்ட மனுதர்ம சாஸ்திரத்தில் நம் பெண்களை விபசாரமுடையவர்கள் அல்லவென்று எப்படிச்சொல்லமுடியும்? அந்த சாஸ்திரத்தில் இயற்கையாகவே நம் பெண்களுக்கு விபசாரம் அமைந்திருப்பதாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் ஒத்துக் கொள்ளுவோமா? மிஸ் மேயோபுஸ்தகத்தைக் கண்டு நூதித்தோம். பல்லை நெறநெறவென்று கடித்தோம். பல கூட்டம் போட்டோம் பலபாஷையில் மொழி பெயர்த்தோம், மேனாட்டாரைப் பார்! பார்! என்றோம் அதோடு நம் ஆர்ப்பாட்டமும் தீர்ந்தது.

நம் சாஸ்திரங்களுக்கெல்லாம் அதிதேவதையான மனுஸ்மிருதியில நம் பெண்களைப் பற்றி எழுதியிருப்பதை பெண்கள் அறிந்தால் வீட்டு மூலையிலிருக்கும் விளக்குமாற்றைக் கண்டுபிடித்துக் கையிலெடுத்துக் கொண்டு சாணிச் சட்டியைத் தேடுவார்களா, மாட்டார்களா? என்பதை சர்வமதசமோதர சங்கமே சொல்லட்டும். பெண்கள் இயற்கையிலேயே விபசாரமுடையவர்கள், பிர்மா பெண்களை சிருஷ்டிக்கையிலேயே பெண்கள் கூடவே விபசாரத்தை அனுப்பிவிட்டார், அதை பக்த கோஷ்டிகளுக்கு காண்பிக்க பிர்மா தான் சிருஷ்டித்த ஊர்வசியின் பின்னல் மானகவும் தான் சிருஷ்டித்த மேனகையின் பின்னல் கிளியாகவும் காமமடைந்து துரத்தி அவர்கள் கற்பைக் கெடுத்தார்' என்னும் கடவுளும் அவனைப்புகழும் இதிகாச சாஸ்திரங்களும் இந்து மதமானல் அவை அழிந்து போக வேண்டுமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது. மனுதர்ம சாஸ்திரமும் அதன் மேல கட்டப்பட்ட இந்து மதக் கதைகளும் அப்படியேயிருக்க வேண்டுமென்றும் பக்திமான்கள் முதலில் அந்த தர்மசாஸ்திரத்தை அவர்கள்பெண்களிடம் சொல்லட்டும். அவர்கள் ஒத்துக்கொண்டால் எங்களுக்கு ஓட்டுக் கொடுக்க வேண்டியதில்லை. பெண்கள் விபசாரமுடையவர்கள் என்பதற்கு சுருதி பிரமாணமென்று மனு சொல்லியிருக்கிறூர். இதநூத் தனியாக ஒரு வியாசமெழுத வேண்டும். கூடிய சீக்கிரமெழுதுவேன். படிப்பவர்கள் தயவு செய்து இரண்டு தடவை என் வியாசத்தைப்பார்க்க வேண்டும் தமிழைப் படிப்பதில் அலட்சியப்படுகிறவர்களுக்கும் தமிழ் பாஷை தெரியாதவர்களுக்கும் வடதேசம போவதற்கும் 'ரிவோல்ட்' எனும் பேரால் ஒரு இங்கிலீஷ்பத்திரிகைநடத்துவதாக 'குடிஅரசு' நாயக்கரும்அவர் ஸ்நேகிதர்களும் தீர்மானம செய்திருப்பதைக் கேட்டவுடன் என்னைப் போலவே அநேகர் சந்தோஷப்படுவார்கள். ஆனல், பார்ப்பனரல்லாதார் சமூகத்தின்நன்மையும பெருமையும் அடைந்தவர்களும் அடைகிறவர்களும் சமூக நன்மையை கவனித்து பத்திரிகை நடிக்கவும் வேண்டும். தயவு செய்து பத்திரிகைப் படிக்கபணமும் செலவு செய்ய வேண்டும்.

## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம்.

சென்ற பிப்ரவரி மாதம் 8ந் தேதி கூடிய மேற்படி சங்கத்தின் மீட்டிங்கில், "இப்பொழுது இந்த ஜில்லாவில் பஞ்சத்தால் கஷ்டமடையும், அவனுசி, பல்லடம், ஈரோடு, தாராபுரம், கொள்ளேகாலம், முதலியதாலூகாக்களிலுள்ள பழைய குளங்களை மராமத்து செய்யவும், புது ஜலாதாரங்களை சௌகரியமான இடங்களில் எற்படுத்தவும் இதை விசாரித்து நிர்வகிக்க ஒரு தனி பரிசோதனை உத்தியோகஸ்தரை ஏற்படுத்தவும்கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டதின் பேரில் கவர்மெண்டார் அதன்படி வேண்டிய விசாரணை செய்து ரிபோர்டு செய்யும் படிக்கு கவர்ன்மெண்டு சிப் செக்ரிடரியவர்கள் நீர்ப்பான தலைமைஇஞ்சினீயரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகமேற்படி செக்ரிடரியிடமிருந்து நமது சங்கத்திற்கு வந்த 19-3-28 தேதியின் 5116 D 28—1 நெ என் டார்சுமெண்டு கிடைத்திருக்கிறது. இதனுல்சங்கத்தின வேண்டுகோளை கவர்மெண்டில் ஆதரிக்க சம்மதிக்கிறூர்கள் என்று தெரிகிறது. ஆகையால் அங்கங்கே உள்ள முக்கிய குடித்தனக் காரர்கள் ஒவ்வொரு தாலூக்காக்களிலிருந்தும் சற்று முன் வந்து அக்கரை எடுத்து, அந்தந்த தாலூக்காக்களில் நீர்ப்பாசன ஆதாரங்களின் நிலைமைகளைப் பற்றியும், அவைகளை சீர்படுத்த வேண்டியதைப் பற்றியும், புதிதாய் நீர்ப்பாசன ஆதாரங்களை எற்படுத்த வசதிகளிருப்பதையும் இச்சங்கத்தின்மூலமாய் விபரப்படி கவர்மெண்டுக்கு எடுத்துக் காட்டி மேல் பிரயத்தனங்கள் செய்ய இது சமயம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வளவு பிரயத்தனப்பட்டும் மேட்டூர் தேக்கத்திலிருந்தும், மேல் பவானி திட்டத்திலிருந்தும் நமது ஜில்லாவிற்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கும் நம்பிக்கைகள் முற்றிலும் வீணாய் விட்டது. ஆகிலும் இன்னும் நாம் செய்யும்பிரயத்தனங்களில் தளர்ச்சியடையாது செய்ய கடமைப்பட்டிருக்கிறோம்.

வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர்,
கௌரவ காரியதரிசி

## கோயமுத்தூர் ஜில்லா போர்டு உபதலைவர் தேர்தல்

31—3—28 ஆம் தேதி மாலை கோவை ஜில்லாக் கழகக் காரியாலயத்தில் நடைபெற்ற ஜில்லா கழக்கூட்டத்தில் கோவை பிரபல வர்த்தகரும் அறத்துறைச் செல்வருமான திருவாளர் எஸ். என் பொன்னைய கவுடர் அவர்கள் பழயகோட்டை பட்டக்காரர் ரத்னசபாபதி நல்லதம்பி சக்கரை மன்றாடியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு கோவைஜில்லாக் கழகத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றூர்.

### துருக்கி ராஜாங்கமும் மதமும்.

துருக்கி ராஜாங்கச் சட்டத்தில் கூடிய சீக்கிரத்தில் மாறுதல்கள் ஏற்படக்கூடும் இம்மாறுதலினல் அரசாங்க விஷயத்தில் மத சம்பந்தமேயிருக்கக்கூடாதென்று ஏற்படலாமென்று தோனறுகிறது.


உலகப் பிரசித்தி பெற்ற பரம்பரை வைத்தியர்! ஆயிரக்கணக்கான குஷ்ட ரோகிகளை குணமாக்கினவர்!! வைத்திய கான்பரன்ஸ்களில் வைத்திய ஆசிரியர் பட்டமும் தங்க மெடலும் பெற்றவர்!!! சமஸ்தான வைத்திய நிபுணரான பழநி சி. மலையப்பசாமி அவர்களின் மருநதுகள் உலகமெங்கும் புகழ் பெற்றவை. உண்மையான குணமுள்ளவை. உள்ளூர் வாசிகளால் மதிக்கப் பெற்றவை. ஒரு முறை வாங்கி பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

நூதன சிங்கபலத்தை தருவது எது? பழனி, சி. எம். சாமி,

மகா வீரிய தங்கபஸ்பம்.

பச்சிலை மூலிகையினலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும, பசியும், ரத்த விர்த்தியும் உண்டாக்கும். இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ 10.

நற்சாக்ஷி:—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக் குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுத முடியாது. இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. பி. வரத ராஜப்பெருமாள் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

குரு அப்ரேக்-செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும, நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீக்கும். தனுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30. ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பினங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்தியாசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:-முருகன் வஜன் லி 43 அரமனைக்கார தெரு, ஜி. டி. சென்னை

சுப்பத்து படையாச்சி,
குமிளியம்,
உடையார் பாளையம்.

ரங்கசாமி நாயக்கன்,
கொக்க நாயக்கன் மகன்,
புதூர், ஆயக்குடி போஸ்டு, பழனி தாலூக்கா.

கிருஷ்ண செட்டி,
சிந்தாமணி கிராமம், பாதிரி போஸ்டு,
அச்சரபாக்கம் மார்க்கம்.

சு. பெ. க. ஷேக்
முகம்மது ராவுத்தர்,
குளிவளை போஸ்டு,
திருமயம் தாலூக்கா.

T. ரெங்கசாமி,
பெரிய கருப்பர் பட்டரை,
உரிகம். K G. F.

வி. இன்னயான்.
Black Smith Shop
உரிகம். K. G. F.

S. சிவசப்பு பிள்ளை,
செண்டூல் போஸ்டு.
கோலாலம்பூர் F M. S.

மகாதேவ ஐயர்,
கோயிற்செட்டிபாளையம்



மு. ஈ. ரெங்கசாமி
செட்டியார்,
சிங்காரப் பேட்டை,
குகை, சேலம்.

குணமடைந்தவன்!
இருகுஷ்டமும் பிறவிக் குஷ்டம்
நீங்கிவிட்டது

K. C. கேசவன் நாயர்,
36, நய்யன் கோவில் தெரு,
மண்ணடி, மதராஸ்.


## வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை, பழனி; *Head Office Palni.*

நமது பிராஞ்சு வைத்தியசாலை:—நெ. 29, பிராட்வே, சென்னை.

Tele. Ad 'Siddhar' Palni.
தந்தி விலாசம்: 'சித்தர்' பழனி.

டெலிபோன் நெ. 3111.

## பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

வல்லம் போர்டு பாடசாலை உபாத்தியா யர் திரு T. R. பாலசுப்ரமண்ய முதலியார் 28-3-28ல் தன் தகப்பனாரின் வருஷாந்திர திதியை பார்ப்பனப்புரோகித மன்னியில் தன் பந்து மித்திரர்களுடன் ஏழைகளுக்கு சமபந்தி போஜனம் செய்வித்து சிறப்பாக நடத்தி வைத்தார்.

## விபவவருடத்திய சுயமரியாதைப பஞ்சாங்கம்.

சென்ற வருடம் போலவே இவ்வருடமும் சுயமரியாதைப்பஞ்சாங்கம் அச்சியற்றி வரு கிறோம. பார்வைக்கு மிக்க அழகாக நானா குவித வர்ணங்களில் சென்னை சோல்டன் கம்பெனியில் அச்சியற்றப் பெறுகின்றன இதில் சித்திரை முதல் பங்குனி முடிய 12 மாதங்களுக்கும் பனிரண்டு தாள்கள் தனித் தனியே அச்சியற்றி நமது மாபெருந்தலை வர் வைக்கம் வீரமூர்த்தியின் பெரிய திருவு ருவம் 6 அங்குல அளவில் அச்சியற்றப் நல்ல பளபளப்பான அட்டையின் கீழ் சேர் க்கப்பெற்றது. மேல் அட்டையில் நமது இயக்கத்தின் முக்கிய கொள்கைகளை அச்சி யற்றி யிருப்பதோடு 12 மாதங்களிலும் சுய மரியாதை உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய வாக்கியங்களையும சேர்த்திருக்கின்றோம் சென்ற வருடத்திய வாக்கியங்கள் முழுதும் எடுக்கப்பெற்று இவ்வருடம் வேறு வேறு வாக்கியங்களைப் பொறித்திருக்கின்றோம. வழக்கம் போலவே, தமிழ் தேதி, ஆங்கில தேதி, திதி, வாரம நட்சத்திரம, அமிர்தாதி யோகங்கள், இராகு, குளிகை, வார சூலை முதலியவைகள், விரத நாட்கள், பண்டிகை முதலிய விசேஷ தினங்கள் யாவும் விளக்க மாக இப்பஞ்சாங்கத்தின் மூலமாய் நன்கறிந்து கொள்ளலாம். நமக்கு அதிக விலை அடங்குகிறது. ஆனாலும் சுயமரியாதைப் பிரசாரத்தை நோக்கமாக அணா இரண்டிற் கே கொடுக்க நிச்சயித்து விட்டோம. ஆங் காங்குள்ள நமது சுயமரியாதை வீரர்கள் வரவழைத்து தங்கள் தங்கள் ஊர்களில் பர வச்செய்து பெரும்பலனடைய வேண்டுகின் றோம. 15—4—28-க்குள் கிடைக்கின்ற ஆர்டர்களுக்கு மட்டுமே காலண்டர்கள் அனுப்பமுடியும். வீ. பி. செலவு வேறு.

இதுவரை ஆர்டர் செய்த அன்பர்களுக் கெல்லாம் சித்திரைமீ முதல் தேதியன்று பஞ்சாங்கங்களை வீ. பி. மூலமாய் அனுப்பி வைப்போம. ஒன்றிரண்டு பஞ்சாங்கங்களை அனுப்புமபடி தபால் மூலம் அனுப்பியவர் களுக்கெல்லாம அதே தேதியில் சாதாரண தபாலில் அனுப்புவோம. தபால் எவிகளை தொந்தரவால், பஞ்சாங்கங்களுக்கு ஏதே னும் ஆபத்து நேரிடுமானால், அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல வென்பதையும இப் போதே மிக்க வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகவே அதைமான காலண்டர்களை வீ. பி. மூலம் அனுப்பும்படி ஆர்டர் செய்வது தான் நலந்தரும் என்பதைத் தெரிந்துக்கொள்ளுகிறோம.

கி ஆ பெ. விசுவநாத பிள்ளை,
மணிவாசகத் தமிழகம், திருச்சி.

---

உயர்வான பனியன்கள்! விலை மலிவு! வெகுநாள் உழைப்பது!

விரைவில் வாங்குங்கள்.

## பெயருக்காகப் போலி பனியன்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

நமது நாட்டின் தொழிலறுபவமிக்க தன வைசியர் ஒருவரின் நேரான மேற் பார்வை யில் ஒழுங்காக நடைபெறும் தன வைசிய தொழிற்சாலை எங்கள் ஸ்ரீ மீனாட்சி ஹோஸ் நிட்டிங் பாக்டரி ஒன்றேயாகும். இதிலிருந்து விதவிதமான பனியன்கள் வெவ்வேறு அளவுக ளில் தன் நவர் வைப்புக்கேற்பவாய் உறுதியும் கேர்த்தியுமிக்க நூல்களைக்கொண்டு தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது. உடலின் பக்கவசத்தில் தையல் இல்லை. குறைந்த விலையில் சிறந்த பனியன்களை விரிவாக விற்பதே எமது நோக்கம். ஒருமுறை வரவழைத்து உபயோகித்துப் பார்ப்பின் உண்மை விளங்கும். உள் நாட்டிலும், மலாய் பர்மா முதலிய வெளி நாடுகளிலும் ஏராளமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங் குபவர்களுக்கும் தக்க கமிஷன் கொடுக்கப் பெறும். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து ஒழுங்காக நிறைவேற்றப்பெறும் ஆர்டர்கள் அனுப்புகிறவர்கள் பத்திரிகையைக் குறித்து எழுதுவதுடன் ஆர்டருக்குப் பத்து வீதம் முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம்.

A/1 டைமண்ட் நிட் திக் பனியன்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 இஞ்ச டஜன் 1-க்கு | ரூ. 4-2-0 | | 30 இஞ்ச டஜன் 1-க்கு | ரூ. 6-0-0 | |
| 26 ,, ,, | ரூ. 4-8-0 | | 32 ,, ,, | ரூ. 6-12-0 | |
| 28 ,, ,, | ரூ. 5-4-0 | | 34 ,, ,, | ரூ. 7-8-0 | |

ஷை நெம்பர்களில் கை பனியன்கள் டஜன் 1-க்கு 12 அணா அதிகம். சாம்பிள் பனி யன்களுக்கு வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் இனும். முழு விபரத்திற்கும் மானேஜருக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

சொந்தக்காரர்
வ. ராம. மு. முத்து
முத்துக்கருப்பஞ் செட்டியார்.
தேவகோட்டை.

M. முத்துராமன் செட்டியார்,
மானேஜர்;
ஸ்ரீ மீனாக்ஷி ஹோஸ் நிட்டிங் பாக்டரி,
பெருந்துறை Perundurai (S. I. R)

---

## குளிர்ச்சிபெற நேர்வழி.

தலைக்கனம் முதல்கொண்டு முதல்கரமான நோ, தேகத்திலுள்ள சூட்டைத் தணிப்பதில் மிக சிறந்தது. ஒரு முறை பரிக்ஷித்தால் அடிக் கடி இதனை வாங்கி ஆனந்தமடைவீர்கள்.

அபனமஹா மூலிகை சந்தனாதி தைலம்.

3 மீ வரை வரக்கூடிய அளவுடைய 1-க்கு ரூ. 1—8—0 தபால் சிலவு 0—10—0 கியாட்லாக் இனும்.

விலாசம்:—

சத்தியவேத வைத்தியசாலை,
வாகனேரி கே. 51. திருச்சி.

---

அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மேடல்கள் பெற்ற

### விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப் பழச்செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட் லாக் இனும இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதை கள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக் கெட் ரூ. 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

---

## டிடக்டாவ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்தி லிருந்தே உம்முடைய காதலி யையும் அவள் செய்யும் காரியங்களையும அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூல மாய்ப் பார்க்கலாம். உம்மு டைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிற தை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமா கக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும் பிப்பார்க்காமலே இதன மூலமாய்க் கவனித்து க்கொள்ளலாம். இனனும பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றி கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

## தமிழ்ப் புக்கிப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதையம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

---

## இனும்! இனும்!
## ஸில்க் அங்க வஸ்திரம்.

பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டூப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனும் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனும் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணு ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனும்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

---

## ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கேட்லாக் இனும்,

## ஸ்ரீ கிருஷ்ணுநந்த
## கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாதுபுஷ்டி லேகியம், அங்க நோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, நற்சுகமளிக்கும் நறுமண சந்தனாதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கஸ்தூரி பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். ஸுகந்தம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தமை மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணுநந்த கௌதம பரிமள சாலை,
வலங்கைமான் போஸ்டு,
தஞ்சை ஜில்லா.

---

## "அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலி உள்பட 6 அணு

மாதிரிப்பிரதி இனும்.

'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை

---

முந்துங்கள்! முந்துங்கள்!!

## 'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிகக வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

---

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய டி கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

☞ சி: கிருஷ்ணு ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்

---

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

## ஹிப்னுடிஸ மெஸ்மரிஸ-மென்னும்
## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், ஞா சக்தி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸமரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.

---

## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனிLtd

### ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து டி கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

## "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் யெல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

இல்வாழ்வை நல் வாழ்வாக நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும்.



# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

## மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.

எமது விலாசம்:—

### வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119, மதராஸ்.

---

## Photo Hand Camera

லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½" x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி

பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

---

## பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் | ரூ. 15. |
| 2. | ,, | ,, | 12. |
| 3. | ,, | ,, | 10. |
| 4. | 5 ,, | 2½ ,, | 8. |

| | | | |
|---|---|---|---|
| கம்பளித் தொப்பி | நெ. 1 | உருப்படி 1-க்கு | 3-8-0 |
| ஷை | 2 | ஷை | 2-8-0 |
| ,, | 3 | ,, | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

---

## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

---

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---

## பார்ப்பனீயம் ஒழிய குடி அரசையும், திராவிடனையும் படியுங்கள்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.